வெளியீடு 18-12-2006 Issued 18-12-2006

749
13.06.07
13/06/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஜூலை 25, 2006—தொகுதி 4—எண் 3**

**Tuesday the 25th July, 2006 — Volume 4 — No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

…ve Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31P06
P06.4.3
227415

[Price Rs. 3.00

**25–07–2006**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 191 - 192 |
| **2. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தி அடிப்படை வசதிகளைச் செய்தல் குறித்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை | 192 - 195 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) வினாக்கள்—விடைகள் எடுத்துக்கொள்ளுதல் | 195 - 198 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 199 |
| **4. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்** – தொடர்ச்சி | 199 - 310 |
| திரு. ம. போளூர் வரதன் | 199 - 205 |
| திரு. தி. வேல்முருகன் | 206 - 209, 213 - 227, 277 |
| * திரு. அர. சக்கரபாணி | 227 - 239 |
| * திருமதி ஜி. லதா | 239 - 245 |

பக்கங்கள்

**4. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்** — தொடர்ச்சி

| | |
|---|---|
| * திரு. து. ரவிக்குமார் | 245 - 254 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 256 - 266, 268 - 277 |
| * திரு. சு. குணசேகரன் | 278 - 286, 288 - 293 |
| திரு. கரி. இராமசாமி | 293 - 303 |
| திரு. கு. பிச்சாண்டி | 304 - 310 |

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 311


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 9, விய — திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜூலை 25, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தற் கியல்பு"*

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், 24–07–2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், கன்னியாகுமரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை பாராட்டத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார்கள். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து

வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதிகாத்தனர்.)*

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தி அடிப்படை வசதிகளைச் செய்தல் குறித்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து நகரப் பகுதிகளிலுமுள்ள அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துதல் மற்றும் அந்தப் பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி போன்ற அடிப்படை வசதிகளை அளிப்போம் என்று தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதி குறித்த அறிக்கை ஒன்றை, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் தங்கள் அனுமதியுடன் இம் மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட மனைப் பிரிவுகளில் மனைகளை வாங்கி வீடுகள் கட்டியுள்ள பெருவாரியான பொதுமக்களிடமிருந்தும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் இம்மனைகளை வரன்முறைப்படுத்துவதற்குக் கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. நான் பல்வேறு மாவட்டங்களுக்கு வளர்ச்சிப் பணி[illegible]செய்யச் சென்றபோதும், இக்கோரிக்கை, ம[illegible] மக்களாலும் வலியுறுத்தப்பட்டது[illegible]

தமிழ்நாடு [illegible]
227415
சென்னை-600 008



D V211,31 'Pob
Pob. 43



தற்போது தமிழகத்திலுள்ள நகர்ப்புறங்களில் சுமார் 2,600 மனைப் பிரிவுகள் — layouts — அங்கீகரிக்கப்படாத நிலையில் உள்ளன. இதனால், சுமார் 90,000 மனைகள் அங்கீகரிக்கப்படாமல் உள்ளன. இதற்கு முன்பு, நான்கு முறை அரசால் இந்த அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு, அரசாணைகளும், 1999, 2000, 2001 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இதற்கான முதல் முயற்சியை 1999 ஆம் ஆண்டிலேயே மேற்கொண்டதும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட கழக அரசுதான் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–35

கடந்தகாலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின்படி, அபிவிருத்திக் கட்டணம், திறந்தவெளிக் கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் என்று மூன்றுவிதக் கட்டணங்களை மனைகளுக்குச் சொந்தக்காரர்கள் செலுத்த வேண்டியிருந்தது. மேலும், திறந்தவெளிக் கட்டணம் இன்றைய வழிகாட்டி விலைமதிப்பீட்டின் அடிப்படையிலும், அபிவிருத்திக் கட்டணம், இன்றைய கட்டுமான விலை நிலவரப்படியும் செலுத்த வேண்டியிருந்ததால், கூடுதலான தொகையை மக்கள் செலுத்த வேண்டியிருந்தது. எனவே, இந்தத் திட்டங்கள் யாவும் எதிர்பார்த்த அளவுக்குப் பயன் அளிக்கவில்லை. இதுவரை, இத்திட்டங்களின்கீழ் 5 விழுக்காடு மனைகள் மட்டுமே வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழ்ந்துவருவோருக்கு உள்ளாட்சி அமைப்புகள், தங்களின் பொது நிதியிலிருந்து லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்கின்றன. இதனால், உள்ளாட்சி அமைப்புகளின் செலவினங்கள் அதிகரிக்கின்றன. அங்கீகாரம் பெறப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள மனைகள், விலை குறைவாகக் கிடைக்கிறது என்பதால், பெரும்பாலும் ஏழையெளிய மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும் இவற்றை வாங்கியுள்ளனர். அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகள் என்பதால், அவற்றிற்கும் கட்டட வரைபட அனுமதி பெறமுடியாது. கட்டடம் கட்ட, நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் கடன் பெறமுடியாது. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களும் குடிநீர், சாலைகள், தெரு விளக்கு, வடிகால் போன்ற அடிப்படை வசதிகளையும் இப்பகுதிகளுக்குச் செய்துதர இயலாத நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. விதிகளின்படி அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவுகளுக்குப் பரிவு காட்டுதல், இதுபோன்ற தவறுகளை ஊக்குவிப்பதாக அமைந்துவிடும் என்ற கருத்து

[திரு. மு.க. ஸ்டாலின்] [2006 ஜூலை 25

ஒருபுறம் இருப்பினும், இப்பகுதிகளில் வாழ்ந்து வருவோருக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான, குடிநீர், சாலை, தெரு விளக்கு மற்றும் சாக்கடை வசதிகள் போன்றவற்றை ஒரு பொறுப்புள்ள அரசு வெகுகாலம் செய்துதர முடியாத ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரவேண்டிய வருமானத்தைக் கருத்தில்கொண்டும், ஏழையெளிய மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற இந்த அரசின் குறிக்கோளைக் கருத்தில்கொண்டும், இந்தப் பிரச்சினைக்கு இம்முறை நிரந்தரத் தீர்வு காண, எளிமைப்படுத்தப்பட்ட திட்டம் ஒன்றிற்கு, 20-7-2006 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்படி, திறந்தவெளிக் கட்டணம், அபிவிருத்திக் கட்டணம் மற்றும் முறைப்படுத்துதல் கட்டணம் ஆகிய மூன்று வகையான கட்டணங்களை வசூலிப்பதற்குப் பதிலாக, பின்வருமாறு ஒரே ஒரு கட்டணத்தை மட்டுமே வசூலித்துக்கொண்டு, 1-1-1980-க்குப்பிறகு அங்கீகரிக்கப்படாது உள்ள மனைப் பிரிவுகளை முறைப்படுத்தலாம் என இவ்வரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநகராட்சிப் பகுதிகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதி நீங்கலாக, ஒரு சதுர அடிக்கு 5 ரூபாய்; நகராட்சிப் பகுதிகள், ஒரு சதுர அடிக்கு 2 ரூபாய்; பேரூராட்சிப் பகுதிகள், ஒரு சதுர அடிக்கு ஒரு ரூபாய்; அத்துடன் 1-1-1980-க்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் அனைத்துக்கும் ஒரு சதுர அடிக்கு ஒரு ரூபாய் என்ற அடிப்படையில் கட்டணம் வசூலித்த பின்னர் முறைப்படுத்தப்படும். ஏனைய அடிப்படை நிபந்தனைகள் தொடரும். இத்திட்டம், 31-12-2006 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்பதுடன், இத்திட்டம், மனைப் பிரிவு அபிவிருத்தியாளர்களிடமிருந்து வீட்டு மனை வாங்கியவர்களுக்கு மட்டுமே பொருந்தும். மனைப் பகுதி அபிவிருத்தியாளர்கள் விற்காமல் வைத்திருக்கும் வீட்டு மனைப் பிரிவுகளுக்கு இந்தச் சலுகை பொருந்தாது. இந்தப் புதிய திட்டத்தின்கீழ் கட்டணம் செலுத்தி வரன்முறைப்படுத்தப்பட்டவுடன், ஒப்புதல் பெறப்படாத கட்டட வரைபடங்களுக்கு, விதிகளின்படி ஏற்பளிப்பு வழங்கப்படும். மேலும், குடிநீர் வசதி, சாலைகள், தெரு விளக்கு மற்றும் சாக்கடை வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை உடனடியாகச் செய்துதர, நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் நடவடிக்கை



2006 ஜூலை 25] [திரு. மு.க. ஸ்டாலின்]

எடுக்கும். இனிவரும் காலங்களில் இதுபோன்ற அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உருவாவதைத் தடுத்திட, இது தொடர்பான விதிகளில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளவும், இதுபோன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டு, ஏழை எளியோரை ஏமாற்ற முயற்சிப்போர்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்திடவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால், முதல்வர் கலைஞர் தலைமையிலான அரசு எடுத்துள்ள இந்த முடிவின் காரணமாக, தமிழ்நாட்டில் நீண்டகாலமாகத் தீராமல் இருந்துவரும் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இப்பகுதிகளில் வாழும் மக்கள், அடிப்படை வசதிகளை உடனடியாகப் பெறுவார்கள் என்பதையும் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்று, இதற்கான விரிவான அரசாணை தனியே வெளியிடப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006-2007 ஆம் ஆண்டிற்கான... (குறுக்கீடு) விதி 110-ல் விவாதம் கிடையாது. விதி 110-ல் கிடையாது. உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள். 110-ல் விவாதம் கிடையாது. (குறுக்கீடு) என்ன?

## 3. தகவல் கோரல்

### (அ) வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளுதல்

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏற்கெனவே, பேரவைத் தலைவரிடம் ஒழுங்குப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் கேள்வி நேரம் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நேரம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாகவே அறிவார்கள். மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற நாம், மக்களுடைய தேவைகள், கோரிக்கைகள், அரசினுடைய வளர்ச்சித் திட்டங்கள், நடைமுறைப் பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் என்றவகையில் கேள்விகள்மூலமாக அரசிடமிருந்து தகவல்களைக் கேட்டுப் பெறுகின்ற உரிமையாக, விதி 32-ன்கீழ் அது வருகிறது.

முற்பகல் 9-40

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில், கவர்னர் உரை, அதைத் தொடர்ந்து நடக்கின்ற விவாதங்களில் மட்டும் கேள்வி நேரம்

இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், அதைத் தொடர்ந்து பட்ஜெட் உரை, பட்ஜெட் உரையைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களில் கேள்வி நேரம் இடம் பெற்றதாகத்தான் வரலாறு இருக்கின்றது. ஆட்சிப் பொறுப்பினை நீங்கள் ஏற்று, இரண்டு மாதங்களுக்கு மேலாகச் சென்று கொண்டிருக்கின்றது. பட்ஜெட் ஜூன் 10 என்று சொன்னார்கள்; 15 என்று சொன்னார்கள்; 22 என்று சொன்னார்கள்; கடைசியாக காலதாமதமாக, ஜூலை 22 ஆம் தேதி பட்ஜெட் தாக்கலாக வேண்டிய ஒரு சூழ்நிலையில், 24 ஆம் தேதி அது தொடர்பாக அலுவல்கள் இருக்கும் என்று தெரிந்தும்கூட, தமிழ்நாட்டில் என்றைக்கும் இல்லாத அளவாக 30 அமைச்சர்கள் இன்றைக்குப் பதவியில் இருக்கின்றார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கின்ற வாய்ப்பு மறுக்கப்பட்டு இருக்கின்றது. அரசிடமிருந்து தகவல் பெறுகின்ற உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்த அவையிலே தருகிறார். பட்ஜெட் ஜூன் 10 என்று சொன்னார்கள்; பிறகு 15 என்று சொன்னார்கள்; 22 என்று சொன்னார்கள்; பிறகு ஜூலை 22 தாக்கலாக வேண்டிய ஒரு சூழ்நிலை என்று சொன்னார்கள். அப்படி யாரும் சொல்லவில்லை. சொன்ன தேதி ஜூலை 22. அந்தத் தேதியிலேயே பட்ஜெட் படிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலே ஹேஸ்யமாக போட்டது இவற்றுக்கெல்லாம் இந்த அவையோ அல்லது அவைத் தலைவரோ அல்லது அரசோ பொறுப்பு அல்ல என்பது நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதி 32-ல் கேள்வி நேரத்தை இரத்து செய்ய முடியாது என்று இருந்தும்கூட, நேற்று இரத்து செய்யப்பட்டதாக அறிவிப்பு வந்திருக்கின்றது. இது ஒழுங்கு முறைக்கு உகந்ததுதானா என்பதனை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், கடந்த ஆட்சியிலே இந்த மாதிரியாக நடந்ததற்கு முன்னுதாரணம் இருக்கின்றது. கடந்த ஆட்சியின்போது, உங்களுடைய வினாவிற்குப் பதில் அளிக்கின்றவகையில், பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்:

"பேரவைக்கு ஓர் அறிவிப்பு. வினாக்கள், உறுப்பினர்களிடமிருந்து பேரவைச் செயலகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. அவை அனுமதிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தற்போது அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. வினாக்களுக்கு விடைகள் வரும் வரை, சில நாட்களுக்குப் பேரவையில் வினாக்கள்-விடைகள் நேரம் இருக்காது. சட்டமன்றப் பேரவை விதி 45-ன்படி வினாக்களுக்கான விடைகள், 42 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும். அப்படி முடியாவிட்டால், மேலும் இரண்டு வார காலம் அவகாசம் விடைகளுக்குக் கொடுக்க வேண்டும். இனிமேல், வினாக்களுக்கான விடைகள் 42 நாட்களுக்குள், செயலகத் துறைச் செயலாளர்கள் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த 32-வது Rule-க்கு, கடந்த ஆட்சியின்போதே இந்தமாதிரியான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்ப்பானது, 28-5-2001 அன்று அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 32-ன்படி கேள்வி நேரத்தை நாம் இரத்து செய்ய வேண்டும் என்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருமனதாக முடிவு செய்யப்பெற்றாலன்றி அதை இரத்து செய்ய, அந்த விதியில் இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடந்த ஆட்சியில் இந்தமாதிரி எதையுமே இரத்து செய்யவில்லை. (குறுக்கீடுகள்) விடுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) அடுத்தது, 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம், தொடர்ச்சி.

[2006 ஜூலை 25

முற்பகல் 9–45

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். கேள்வி நேரம் இரத்து செய்யப்பட வேண்டுமென்றால், சட்டமன்றத்தில் இருக்கின்ற அத்துணை எதிர்க்கட்சித் தலைவர்களிடம் கலந்து பேசிதான், அந்தத் தீர்மானத்தை அவை முன்னவர் கொண்டு வந்ததற்குப் பின்னால்தான் இரத்து செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தீர்மானம் கொண்டு வரவில்லை, விடுங்கள். 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன். நேற்றே நீங்கள் 18 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்; 7 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் நான் முடித்து விடுவேன். நன்றி, வணக்கம் என்று சொல்லிவிடுவேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ம. போளூர் வரதன்:** அதிலே ஒன்றும் எனக்குப் பிரச்சினை இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்; பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய உரை பதிவாகாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள், திரு. போளூர் வரதன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன், நீங்கள் உட்காருங்கள். சொன்னதைக் கேளுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜூலை 25]

**திரு. ம. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்த மற்றொரு பிரச்சினை குறித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்விலே இருக்கிறது. இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) இப்போது சொல்ல முடியாது. அது ஆய்விலே இருக்கிறது. எப்போது எடுப்பது என்பதுபற்றி அப்புறம் சொல்கிறேன், உட்காருங்கள்.

## 4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**திரு. ம. போளூர் வரதன்:** கல்வி என்பது, மனித சமுதாயத்திலே இன்றைக்கு இன்றியமையாத ஒரு முக்கிய அம்சம் என்பதை மறுக்க முடியாது. நம்முடைய முதல்வர் அவர்கள்கூட, பல்வேறு காலக்கட்டங்களிலே, அவருக்கே உரித்தான பாணியிலே பேசியிருக்கிறார்கள்; எழுதியிருக்கிறார்கள்; சினிமா துறையிலேகூட கதையாக வந்திருக்கிறது. சுதந்திரத்திற்கு முன்னாலே, குலக் கல்வித் திட்டம், இந்தத் தமிழ் மண்ணிலே இருந்திருக்கிறது. ஒருசில மக்கள், ஒருசில ஜாதியைச் சார்ந்தவர்கள் மட்டும் கல்வியைப் பெறவேண்டும் என்கின்ற ஒரு நிலையை மாற்றி, அனைத்து இன மக்களும் கல்வியைப் பெறவேண்டும் என்று முதல் குரல் கொடுத்தவர் அருமைத் தலைவர் காமராஜர் என்பதை இந்த நாடு அறியும். அதை உணர்ந்துகொண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஐயா டாக்டர் கலைஞர் அவர்கள், காமராஜர் பிறந்தநாளை இன்றைக்கு எப்படிக் கொண்டாடினார்கள் என்பதை நாடு அறியும். கல்வி என்று வருகின்றபொழுது, இப்போது பள்ளிகளிலே, கல்லூரிகளிலே ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதன் விளைவாக, தனியார் நடத்துகின்ற கல்லூரிகளிலே உள்ள தரம், அரசுப் பள்ளி, கல்லூரிகளிலே இல்லை என்பது, அதற்கான result வெளியே வந்தபின்னர், ஆண்டுதோறும் தெரிகிறது. அதை மாற்றி அமைப்பதற்கு, அரசுப் பள்ளிகளிலே 7,500–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நியமனம் மற்றும் பள்ளிகளிலே 45,000–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் காலமுறை ஊதிய அடிப்படையில் நியமனம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; நியமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான பள்ளிகளிலே, +2, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகள் இருக்கின்ற பள்ளிகளிலே, அந்த subjects சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இல்லை. நான்கு subjects-க்கு ஆசிரியர்கள் இருப்பார்கள்; ஒரு subject-க்கு ஆசிரியர் இல்லை. பொதுத் தேர்விலே பார்க்கின்றபொழுது, ஆசிரியர்கள் இருக்கின்ற இந்த நான்கு subjects-இல் pass பண்ணுகிறார்கள்; ஆசிரியர் இல்லாத அந்த ஒரு subject-இல் fail ஆகும்போது, result, அந்தப் பள்ளியினுடைய தரம் குறைகிறது. இதை அரசு கணக்கில் எடுத்துக்கொண்டு, எல்லா subjects-இனுடைய ஆசிரியர்களையும், முதலிலே ஒவ்வொரு பள்ளியிலும் நியமிப்பதற்கு, அரசு முன்வர வேண்டும்.

அதுமட்டுமல்ல; உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று வருகின்றபொழுது, பள்ளிக் கட்டடங்கள் எல்லாப் பள்ளிகளுக்கும் இன்றைக்கு sufficient ஆக இருக்கின்றன. ஆனால், அந்தப் பள்ளிகளுக்கு, compound wall கிடையாது. Compound wall இல்லாததன் விளைவு, மாலை நேரங்களில் சமூக விரோதிகள் அந்தப் பள்ளிக்கூடத்தின் உள்ளேயே எல்லா தவறுகளையும் செய்கிறார்கள். Watchman கிடையாது. தமிழகத்திலே இருக்கின்ற பெரும்பாலான பள்ளிகளுக்கு watchman, பல ஆண்டுக் காலமாக இல்லை. பல பள்ளிகளைக் கட்டுகிறோம். அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு compound wall இல்லை. அந்த நிலையிலே போகின்றபோது, கல்வியினுடைய தரம் இப்போது தாழ்ந்து இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாக அமைகிறது. ஆகவே, முதல்வர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, இதற்கு விரைவில் தீர்வுகாண வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, கல்விதான் அவர்களுக்கு மூலதனம் என்று சொல்லியிருக்கிறார்கள்; வரவேற்கிறேன். ஒன்றை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் என்று வருகின்றபோது, மாவட்ட அளவிலே, C.E.O., D.E.O., E.O. போன்ற கல்வியைப் பரிசோதிக்கக்கூடிய அதிகாரிகள், அந்த மாவட்டத்திலே இருக்கிறார்கள். அவர்கள் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, இப்படி எல்லாப் பள்ளிகளுக்கும் சென்று, ஆய்வு நடத்தி, ஆசிரியர்கள் வருகிறார்களா, மாணவர்களுக்கு ஒழுங்கான கல்வி கிடைக்கிறதா என்பதை ஆய்வு செய்கிறார்கள். ஆனால் S.C., S.T. துறையின்மூலம் நடத்துகிற பள்ளிகளுக்கு, அந்த வாய்ப்புகள் இல்லை.

V211,31'Pob. 806.4.3



ஒரு காலத்திலே சாதி இந்துக்கள் இருக்கின்ற பள்ளிகளிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் போகமுடியாத ஒரு சூழ்நிலை இருந்ததன் காரணமாக, இந்த S.C., S.T. Department-லேயே welfare scheme-லே welfare school ஆரம்பித்தார்கள்; அது சரி. ஆனால், இன்றைக்கு அந்த நிலை மாறியிருக்கிறது. அந்த மாற்றத்திற்குப் பின்னாலும்கூட, அந்த S.C., S.T. பள்ளிகளிலே எந்தவிதமான C.E.O., D.E.O. போன்ற அதிகாரிகள் இல்லை. அங்கே மாவட்ட அளவிலே ஒரு Welfare Officer இருக்கிறார். அந்த Welfare Officer-க்கும் அந்தக் கல்வித் துறைக்கும் சம்பந்தமே இருப்பது இல்லை.

ஒன்றை நான் சொல்கிறேன். இன்றைக்கு அரிசி கடத்தல், அரிசி கடத்தல் என்று நாம் சொல்கிறோம். அந்த அரிசி எங்கே கடத்தப்படுகிறது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட பள்ளி விடுதிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அரிசியை, அங்கே இருக்கின்ற Warden போன்றவர்கள் கடத்தி விற்கிறார்கள். அதுதான் உண்மை. உண்டு உறைவிடப் பள்ளி என்று சொல்கிறோம். அந்த உண்டு உறைவிடப் பள்ளியிலே, 100 குழந்தைகளைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னால், 200 குழந்தைகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்துக்கொண்டு, அந்த ரேஷனை வாங்கிக் கொண்டுபோய், godown-லேயே விற்றுவிட்டுப் போய்விடுகிறார்கள். கடந்தமுறை, இதே அவையிலே நான் சொல்லியிருக்கிறேன். ஜவ்வாது மலைக்குச் செல்லக்கூடிய வழியில் இருபதுக்கும் மேற்பட்ட உண்டு உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கு செல்ல வேண்டிய அந்த அரிசியை, போளூர் godown-இல் இருந்து எடுத்துச் செல்கிறார்கள்; பிடித்திருக்கிறார்கள். அன்றைக்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. லாரியைப் பிடித்தார்கள். ஆனால் அந்த Welfare Officer மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த Warden மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும், இங்கே விடுதிகளைப் புதுப்பிப்பதற்கு, கட்டடம் கட்டுவதற்கு 10 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, அந்த விடுதிகளுக்கு fan வசதி, light வசதி, bench, நாற்காலி வசதிகளுக்கு அரசு பணம் கொடுத்திருக்கிறது. நீங்கள் சென்று பாருங்கள். எந்த விடுதியிலாவது fan இருக்கிறதா? இல்லை. 40 watts bulb போடுகிறார்கள். Tube light கிடையாது. 40 watts bulb-லே மாண[illegible]? முடியாது. தண்ணீர் வசதி, இல்லை. கி[illegible]

227415
சென்னை-600 00?

மாணவன் படிக்க வருகிறபோது, நோயில்லாமல் அந்த விடுதிக்கு வந்து, பின்னர் படித்துவிட்டு வெளியே செல்கின்றபோது, எல்லா நோய்களுடன், சொரி நோய் — சொரி நோய்தான் அதிகம் அங்கே — அதோடு செல்கிறான். அதை மாற்றுவதற்கு அரசு முனைய வேண்டும்.

வேறொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எங்கள் சமுதாயத்திலே பிறந்த ஆண், பெண்கள், சகோதர, சகோதரிகள் படித்துவிட்டு வெளியே போகின்றபோது, ஏதாவது சுய தொழில் தொடங்க வேண்டுமென்பதற்காக, மைய அரசு, S.C., S.T. Finance Corporation–மூலமாக, ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் தொழில் தொடங்குவதற்குப் பணம் ஒதுக்குகிறது. அந்தப் பணத்தைக் கடந்த ஆட்சியிலே, கடந்தகால நிதியமைச்சர் bank-லே போட்டு வைத்துவிட்டார் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் அவர்கள், இந்த அவையிலேயே பேசியிருக்கிறார். அந்தப் பணம் உண்மையிலேயே செலவழிக்கப்பட்டிருக்கிறதா; இன்றுவரையிலே அது வங்கியிலே இருக்கிறதா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டில் இருக்கின்ற S.C., S.T. மக்களுக்குச் செய்கிறோம், செய்கிறோம் என்று சொல்கிறோம். இங்கேயிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், சுய தொழில் செய்ய வேண்டும் என்பதற்காக, 60 கோடி ரூபாய் மைய அரசு கொடுத்திருக்கிறது. அந்தப் பணம் வங்கியிலே deposit செய்யப்பட்டு, வட்டி வந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், இதுதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் செய்கின்ற கடமையா, நன்றிக் கடனா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9–55*

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில ஆர்ஜிதம் செய்கின்ற விதத்திலே — land acquisition — கடந்த காலத்திலே, எந்த அரசு வந்தாலும், land acquisition என்று பார்க்கின்றபோது, நிரம்ப slow movement–ல்தான் போகிறார்கள். அரசு நிலங்களைப் பலர் ஆக்கிரமிப்பு செய்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி, பஞ்சமி நிலங்களைப் பலர் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு, இரண்டு ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டுமென்று முனைப்போடு நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற நிலங்கள், வேகமாகச் செய்யப்படுவதில்லை. நான் முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்; தமிழகத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து, அந்த நான்கு பகுதிகளிலே ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். திரு. ஜெயக்குமார், அனுமதி இல்லை.

**திரு. ம. போளூர் வரதன்:** நீங்கள் மந்திரியாக இருந்தவர் என்பது எனக்குத் தெரியும். நான் பல சமாசாரங்களைச் சொன்னால், நிரம்ப அசிங்கமாகிவிடும். நீங்கள் உட்காருங்கள், நான் பேசி முடித்தபிறகு பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** உண்மையைச் சொல்லும்போது கசக்கத்தான் செய்யும். 60 கோடி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** மைய அரசு ஒதுக்கிய 60 கோடி எங்கே போனது? இருக்கிறதா, இல்லையா என்பதை நிதியமைச்சர் சொல்லட்டும். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன், சீக்கிரம் பேசி முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ம. போளூர் வரதன்:** என்ன Sir? உண்மையைச் சொன்னால் கசக்கிறதா? பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** நான் கேட்க விரும்புவது, 60 கோடி ரூபாய் வங்கியில் இருக்கிறதா, செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதைத்தான் கேட்கிறேனே தவிர,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** அவர்கள் அந்தக் காசை எடுத்துச் சென்றுவிட்டார்கள்; தப்பு செய்துவிட்டார்கள் என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** மைய அரசு கொடுத்த பணம். மைய அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்த பணம்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** சுய தொழில் துவங்குவதற்குக் கொடுத்த பணம்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** போன அவையிலே (குறுக்கீடு) நமது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு கூப்பிடுகிறேன். உட்காருங்கள். ஒரே வார்த்தையில் முடியுங்கள், திரு. வரதன். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** Sir, நான் உண்மையைப் பேசும்போது சீக்கிரம் முடியுங்கள் என்று நீங்களும் ஏன் Sir சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் நீங்கள். சீக்கிரம், சீக்கிரம் பேசி முடியுங்கள் Sir.

**திரு. ம. போளூர் வரதன்:** நான் என்ன உண்மையைத்தானே சொல்கிறேன்? இல்லை, உண்மையைச் சொல்லக்கூடாது என்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு time நிறைய கொடுத்தாகிவிட்டது.

**திரு. ம. போளூர் வரதன்:** இருக்கட்டும் Sir, நான் என்ன, எவ்வளவு நேரம் பேசிவிட்டேன்? ஏன் உண்மையைப் பேச விடமாட்டேன் என்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றே பேசிவிட்டீர்கள். நீங்கள் நேற்றே பேசிவிட்டீர்கள். உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** உண்மை வரட்டும் வெளியிலே. மக்களும், இந்த நாடும் புரிந்துகொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு



யார் செய்கிறார்கள் என்பதை நாடு புரிந்துகொள்ள வேண்டும், மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்தச் சமுதாயத்திலே பிறந்தவன் நான், அந்த மக்களுக்காகக் குரல் கொடுக்கிறேன். உண்மை தெரிய வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்களும் உட்காருங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் ஐந்தாவது முறை முதலமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** எங்கள் சமுதாயத்திலே பெண் எடுத்தவர்: எங்கள் சம்பந்தி அவர். எங்கள் சம்பந்தியைக் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர், பீட்டர், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருப்பசாமி, உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** முதலமைச்சரைக் கேட்கிறேன். அவர் எங்களுடைய சம்பந்தி. எங்களுக்கு நியாயம் வேண்டுமென்று கேட்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ம. போளூர் வரதன்:** அதைப் பேசுவதற்கு எனக்கு அனுமதி இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், உட்காருங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? அமருங்கள், அமருங்கள் என்று சொன்னால், நான் செய்த குற்றம் என்ன? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ஜெயக்குமார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள் Sir. மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், இரண்டாவது முறையாக இந்தச் சட்டமன்றத்திலே முத்தமிழ் அறிஞர், முத்தான என் முதல்வன் முன்னிலையில் பேசுவதற்கான வாய்ப்பை எனக்குத் தந்திட்ட எம் தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், இந்திய நாட்டின் சார்பாக உலக நாடுகளினுடைய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மருத்துவ வல்லுநர்களும், உலக நாடுகளினுடைய சுகாதார அமைச்சர்களும் பங்குகொண்ட, அமெரிக்காவில் நடைபெற்ற புகையிலை எதிர்ப்பு மாநாட்டிலே, உலக நாடுகளின் வரிசையில் புகையிலையை மிகச் சாமர்த்தியமாகக் கட்டுப்படுத்தியதற்கான L.Terry என்கிற உலகின் மிகச் சிறந்த ஒரு விருதைப் பெற்று, என் தாய் மண்ணிற்கும், தமிழர்களுக்கும், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சூத்திர மக்களாக இருந்த எங்களை உலக நாடுகள் அங்கீகாரம் செய்வதற்காக, உலக நாடுகளும், உலக நாட்டின் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும், அந்த மாபெரும் அமெரிக்காவின் மாமன்றத்தில் எழுந்து நின்று, எங்கள் மருத்துவர் சின்ன ஐயா அவர்களுக்குக் கைகூப்பி, கைதட்டி வரவேற்றிருக்கின்ற அந்த ஓர் அருமையான, அற்புதமான செயலை இந்தியத் திருநாட்டிற்கும், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழர்களுக்கும் அந்த அருமையான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த, எங்கள் மாண்புமிகு மருத்துவர் சின்ன ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்து, அந்த அற்புதமான விருது, ஒரு பச்சைத் தமிழனுடைய ஆட்சிக் காலத்தில் மற்றொரு பச்சைத் தமிழனுக்குக் கிடைத்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெருமையையும், இந்த நேரத்திலே கருதி, அதற்கு எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகப் பாராட்டுகளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை, பல்வேறு ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட தமிழர்களுடைய வாழ்க்கைக்கான, வசதிக்கான அவர்களுடைய எதிர்கால நலனைப் பாதுகாக்கின்ற, பேணிக் காக்கின்ற ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கையாக இங்கே மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்கள் தந்திருக்கிறார்கள்.



இந்த நிதிநிலை அறிக்கையை நான் திரும்பத் திரும்பப் படிக்கின்றபோது, குறிப்புகளைத் தயார் செய்கின்றபோது, எதை விடுவது, எதைப் பேசுவது என்று என்னால் ஒதுக்கிவிட முடியாத அளவில், 188 para-களில் தலைப்புகளைக் கொடுத்து, ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கையைத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து மக்களுடைய நலன்களுக்காகவும், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து மக்களுடைய வாழ்க்கைக்குமான ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கின்ற தமிழக அரசுக்கும், முத்தமிழ் அறிஞர் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே இருக்கின்ற ஒவ்வோர் அறிவிப்பையும், எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் மிகச் சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த அறிவிப்புகள் அத்தனையையும் இன்றைக்கு நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்தகால ஆட்சியில், பொறியியல் கல்லூரிகளிலே ஏற்பட்ட குளறுபடிகளைப் போக்குவதற்கு, எம் தமிழினப் போராளி, மருத்துவர் ஐயா, அண்ணா பல்கலைக்கழகம் முன்பும், சென்னைப் பல்கலைக்கழகம் முன்பும், அந்தக் குளறுபடிகளை நீக்கி, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்குகின்ற செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று போராடியபோது, அதற்காகத் தம் கைப்படவே சுவரொட்டிகளை அந்த இடங்களிலே ஒட்டி, தன்னுடைய எதிர்ப்பைப் பதிவு செய்தபோது, கண்டுகொள்ள மறுத்த அரசாங்கம், 'உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது; அதை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு வாய்ப்பு உள்ளது' என்று கூறிய அரசாங்கம், ஆனால் எங்கள் கட்சியினுடைய தலைவர், தியாகச் செம்மல் அண்ணன் ஜி.கே. மணி அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்கின்றபோது, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து முறையிடுவதற்கு வாய்ப்பில்லையென்று அன்றைய கல்வி அமைச்சர்களால் காலங்கடத்தப்பட்டது. அந்த மாணவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய இந்த அமைச்சரவை, கத்தியின்றி, இரத்தமின்றி சுதந்திரம் கிடைத்தது என்று சொல்வார்களே,

அதுபோல, மிகச் சிறப்பாக, மிக அற்புதமாக, அந்தக் கல்வி நிலையங்களினுடைய தாளாளர்களை, அந்தத் துணை வேந்தர்களை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை, உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** அழைத்துப் பேசி, 9,000 பொறியியல் கல்லூரிகளுக்கான இடங்களைக் கூடுதலாக ஒதுக்கித் தந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விலே பாலை வார்த்திருப்பதற்காக, இந்த அரசை நாங்கள் பாராட்டுகிறோம். (குறுக்கீடுகள்) அதோடு மட்டுமல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No point of order, உட்காருங்கள். Point of order இல்லை, உட்காருங்கள். அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. 11 நீதிபதிகளைக் கொண்டு வழங்கப்பட்டிருக்கிற தீர்ப்பு. அந்த 11 நீதிபதிகளைக் கொண்டு வழங்கப்பட்டிருக்கிற தீர்ப்புக்கு மேல்முறையீடு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிற அடிப்படையிலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருகிறீர்களா? நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அனுமதியில்லை. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No point of order. (குறுக்கீடுகள்) Admission இல்லை, உட்காருங்கள்; admission இல்லை, முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி.வி. சண்முகம்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order இல்லை. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No point of order, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய தலைவர், தியாகச் செம்மல், ஜி.கே. மணி அவர்கள் ஒரு கேள்வி எழுப்புகிறார். மாண்புமிகு முன்னாள்



முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் 11 நீதிபதிகளைக் கொண்ட அந்த Bench அளித்த தீர்ப்பை எதிர்த்து appeal செய்வதற்கு வழிவகை இல்லையென்று மறுக்கிறார். (குறுக்கீடுகள்) நாங்கள் சொன்னோம்: அன்றைக்கு எங்கள் ஐயா சொன்னார். நாங்கள் சொல்லுகின்றோம். 11 நீதிபதிகளைக் கொண்ட அந்தத் தீர்ப்பை எதிர்த்து 13 நீதிபதிகள் கொண்ட ஒரு முழு Bench-இன் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள் பதிவு செய்து இருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். அதற்குப் பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். நான் பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். ஐயா. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதில் நீதிமன்றத்தை அவமதிக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** 11 நீதிபதிகளைக் கொண்டு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு, 13 நீதிபதிகளைக் கொண்ட Bench-ஆல் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ஆதாரத்தோடு நிரூபிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே திரு. ஜெயக்குமார், திரு. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** அந்த (குறுக்கீடு) 1967 ஆம் ஆண்டு, 11 நீதிபதிகளைக் கொண்ட Bench வழங்கிய ஒரு தீர்ப்பை, தலைமை நீதிபதியாக இருந்த எஸ்.எம். சிக்ரி தலைமையிலான 13 பேர் கொண்ட Bench ஆய்வு செய்து, செல்லாது என்று அறிவித்திருக்கிறது. நீதிமன்றத்தினுடைய வரலாற்றில் அது இடம் பெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பதில் சொல்லி உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள், முதலில். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-05

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) முன்னாள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் கல்வி அமைச்சர் என்ற முறையில், அவர் point of order கோரிக்கை எழுப்பி, பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டால், நீங்கள் கொடுக்கவேண்டிய ஒரு மரபு இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஒன்றும் மரபு இல்லை. நீங்கள் சொல்வது point of order இல்லை. No point of order. (குறுக்கீடுகள்) No point of order. அது என்னுடைய discretion. நீங்கள் உங்களுடைய subject-ஐச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவரைப் பேசச் சொல்லுங்கள், அவர்தான் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பதிலை அவரிடமிருந்து வாங்குங்கள். திரு. சி.வி. சண்முகத்திடமிருந்து வாங்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள் sir. நீங்கள் அனுமதி கேட்டீர்கள், (குறுக்கீடு) நீங்கள் அனுமதி கேட்டீர்கள், கொடுக்கிறேன். நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, அவர் அனுமதி கேட்கிறார், கொடுங்கள் என்று கேட்கிறேன். அனுமதியை அவர் கேட்கிறார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. சி.வி. சண்முகம், சொல்லுங்கள். One minute-தான் உங்களுக்கு. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை மேற்கோள்காட்டிப் பேசியிருக்கின்றார்கள். T.M.A. Pai -யினுடைய வழக்கு. 11 நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பினுடைய பெயர் T.M.A. Pai. அந்த வழக்கிற்குப் பிறகு, மீண்டும் ஒரு வழக்கு தனியார் கல்லூரிகள், அதற்கு clarification கேட்டு வழக்குப் போட்டனர். இஸ்லாமிக் அகாடமி என்ற case. அந்த வழக்கிற்கும் மீண்டும் ஒரு வழக்கு, இனாம்தார் case. கடைசியாகத் தீர்ப்பு கொடுக்கப்பட்ட வழக்கு. இனாம்தாரினுடைய வழக்கின் தீர்ப்புக்குப் பிறகுதான், இட ஒதுக்கீடு அரசுக்குக் கிடையாது; தனியார் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கின்ற உரிமை, அந்தக் கல்லூரி நிர்வாகத்திற்கே உண்டு என்று அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தம் மூன்று தீர்ப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. கடைசியாகச் சொல்லப்பட்ட அந்தத் தீர்ப்பிற்கும், நம்முடைய தமிழ்நாடு அரசின் சார்பாக, அந்த வழக்கிலே மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமென்று — உடனடியாக, அந்த வழக்கிலே மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமென்று — தாக்கல் செய்த ஒரே அரசு, இந்தியாவிலேயே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. பிறகுதான் அம்மா அவர்கள், அன்றைக்கு முதல்வராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மத்திய அரசாங்கத்தை, இட ஒதுக்கீடு, மாணவர் சேர்க்கை, மாணவர்களுடைய கட்டணக் குறைப்பு, இவை அத்தனையையும் உள்ளடக்கி, ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று, மத்திய அரசாங்கத்திற்கு, அன்றைக்கும் இன்றைக்கும் பிரதமராக இருக்கின்ற திரு. மன்மோகன் சிங் அவர்களுக்கும், அன்றைக்குக் கல்வி அமைச்சராக இருந்த அவருக்கும், அன்றைக்குக் கடிதங்களை எழுதினார். ஆனால், அன்றைய மத்திய அரசாங்கம் அனைத்தையும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். உங்களுடைய விளக்கத்தைச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) Point of order-க்கு நீங்கள் பேசிவிட்டீர்கள். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. வேல்முருகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இனாம்தார் தீர்ப்பு வழங்கியபோது, அவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் ஒத்துக்கொண்டால் அளிக்கலாம் என்பதும் அந்தத் தீர்ப்பிலே இருக்கிறது. அதுவும் அரசாங்கம் விரைவிலே சட்டத்தைப் போடவேண்டும் என்றும் அந்தத் தீர்ப்பிலே இருக்கிறது. ஆனால், கடந்த ஆட்சியிலே அதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல், வேண்டுமென்றே 50:50 சதவிகிதம், 70:30 சதவிகிதம் எல்லாம் அளித்தார்கள். ஆனால், கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, அதே தீர்ப்பின் அடிப்படையிலேதான் இப்போது செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதே தீர்ப்பின் அடிப்படையிலே அனைவரையும் அழைத்துப் பேசி, 65:35 என்றும் ஒதுக்கி, சிறுபான்மையினருக்கு 50:50 என்றும் ஒதுக்கியிருக்கிறோம். அன்று நியமிக்கப்பட்ட குழுக்கள் சட்டம் இயற்றும்வரையில் இருக்கும் என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், 2, 3 ஆண்டுகளாக அந்தக் குழுவிலேயே அவர்கள் காலத்தை ஓட்டிவிட்டார்கள் என்பதுதான் நிதர்சனமான நடைமுறை உண்மை. அதனால்தான், வழக்குகளுக்கு, நீதிமன்றங்களுக்கு, கடந்த காலங்களிலே ஒவ்வோர் ஆண்டும் பல பேர் சென்று கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டு எந்த வழக்கும் இல்லாமல் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசு அவர்களோடு சுமுகமான முயற்சி எடுத்ததன் விளைவாகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கல்வியிலே மிகப் பெரிய குளறுபடி ஏற்பட்டிருக்கிறது. "தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இந்த அரசு உறுதுணையாக இருந்து கொண்டு, ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது; அது கூடாது. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில், கர்நாடக அரசு, மராட்டிய மாநில அரசுகள் எல்லாம் நல்ல நெறி முறைகளை வகுத்திருக்கின்றன; அதைப் பின்பற்றவேண்டும்" என்ற முன்னுதாரணங்களை எல்லாம் எடுத்துச் சொன்னோம். எடுத்துச் சொல்லியும்கூட, அதைக் கேட்காமல், தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விக் கொள்ளைக்குத் துணைபோன



காரணத்தினாலேதான் இதையெல்லாம் சொன்னோமே தவிர, வேறு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு, அதே தீர்ப்பின் அடிப்படையிலே, நல்ல திட்டங்களை உருவாக்கி, 0,000 இடங்களைக் கூடுதலாக்கி, இன்னும் கல்விக் கட்டணங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறோம். அதைக் குற்றச்சாட்டாகச் சொல்கிறார் திரு. வேல்முருகன். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாதம்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. சி.வி. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொன்னதற்குப் பிறகும், நீங்கள் மேலும் மேலும் பேசினால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியதிருக்கும். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.-வினுடைய அரசு, இதை நினைத்திருந்தால், இப்போது இந்த அரசு எடுத்த நடவடிக்கைபோல நடவடிக்கை எடுத்து, அதைக் கண்டிப்பாக மாற்றியிருக்கலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order லே நீங்கள் பேசியாகிவிட்டது. அதற்குப் பிறகும் பேசுவதற்கு அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக அரசு, கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 15 சதவிகிதமாக உயர்த்தித் தந்தது. ஆனால், அந்த 15 சதவிகித இட ஒதுக்கீட்டை, நாங்கள் 25 சதவிகிதமாக உயர்த்தித் தருகிறோம் என்று சொல்லிவிட்டு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாகச் சொல்கிறேன். திரு. சி.வி. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** அடுத்த நிமிடமே உயர் நீதிமன்றத்திற்கு ஆட்களை அனுப்பி, அதற்குத் தடை வாங்கி, அந்த 15 சதவிகித இட

ஒதுக்கீட்டையே நாசமாக்கியதுதான் அண்ணா தி.மு.க. அரசு என்பதை இந்த வேளையிலே நான் சொல்வதற்குத் தயங்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான இந்த அரசு, கல்விக் கொள்கையில், அதுவும் குறிப்பாக ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சமூக நீதி கிடைக்க வேண்டும் என்பதிலே மிகத் தெளிவாக இருக்கின்ற அரசு என்பதை இங்கே சுட்டிக்காட்டுவதற்காக நாங்கள் சொல்லுகிறோம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேல்முருகன், பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) யாரும் ஆங்காங்கே பேசக்கூடாது. அமைதியாக உட்காருங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு எடுத்திருக்கிற இந்த நடவடிக்கையை நாங்கள் பாராட்டுகின்ற அதேவேளையில், இன்றைக்கு இந்தக் கல்விக் கொள்கையில் தனியார் நபர்கள், கோடிக்கணக்கான ரூபாயை நன்கொடை என்ற பெயரிலே ஏழையெளிய மாணவ சமுதாயத்தினரிடையே வசூலிக்கின்ற இந்தச் சூழலும் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, ஒரு கல்லூரி நிர்வாகம் இருக்கிறது என்று சொன்னால், அந்தக் கல்லூரி நிர்வாகத்தால் ஏற்பாடு செய்கின்ற பேருந்துகளில்தான் செல்ல வேண்டும்; அவர்கள் கொடுக்கின்ற உணவுகளைத்தான் உண்ண வேண்டும்; அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கட்டணங்களைத்தான் கட்ட வேண்டுமென்கின்ற இந்த விதிமுறைகளை இன்றைக்குத் தனியார் பல்கலைக்கழகங்கள், Deemed Universities என்ற பெயரிலே ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவ சமுதாயத்தினுடைய அந்த உழைப்புகளையெல்லாம், ஒரே ஆண்டிலே உறிஞ்சுகின்ற ஒரு கொடுமை, இந்த மண்ணிலே நிலவிக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்காக, சென்னையிலே இருக்கின்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள், பல கோடி ரூபாயிலே அழகான கட்டடங்களையும் மாளிகையைப் போன்று எழுப்பியிருக்கின்றார்களே, அவையெல்லாம்கூட, அரசினுடைய பல சலுகைகளைப் பெற்று உருவாக்கப்பட்ட கட்டடங்கள்தான். அரசினுடைய பல்வேறு உதவிகளைப் பெற்று உருவாக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கல்லூரிகள் எல்லாம், அரசாங்கம் தருகின்ற இடங்களை நிரப்புவதற்குக்கூட, ஒரு



பொறியியல் கல்லூரி மாணவனுக்கு ஓர் ஆண்டுக்கான கட்டணமாக எண்பதினாயிரம், ஒரு இலட்சம் ரூபாய் என்று இன்றைக்கு வசூலிக்கின்றன. நம்முடைய அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இருக்கின்ற இந்த அரசு, அந்தக் கட்டணங்களை வசூல் செய்கின்ற அதுபோன்ற அந்தக் கல்விக் கொள்ளையர்கள்மீது சரியான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நன்கொடை நாங்கள் வாங்கவில்லை என்று இன்றைக்கு அவர்கள் மறுக்கலாம். தமிழகத்தினுடைய கடைநிலை அரசு ஊழியர்கள், அரசு ஊழியர்கள், அரசைச் சார்ந்து பணியாற்றக்கூடிய நண்பர்கள் எங்கேயாவது கையூட்டுப் பெற்றால், அங்கே vigilance என்கிற துறை பாய்ந்து சென்று அவர்களைப் பிடித்ததுபற்றி பத்திரிகையிலே செய்தி வருகிறது. 'சட்டம் கடுமையாகப் போட்டிருக்கிறோம்; தனியார் கல்லூரிகளிலே இதுபோன்ற நன்கொடை என்ற பெயரிலே கோடிக்கணக்கான ரூபாயை வசூல் செய்தால், மூன்றாண்டுகள் முதல் ஏழாண்டுகள்வரை தண்டனை என்ற வகையில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம், கைது செய்வோம்' என்று சொன்னார்கள். ஆனால் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், இலஞ்சம் வாங்கியதாகவோ அல்லது இந்த இடங்களுக்குப் பணம் வாங்கியதாகவோ எந்த ஒரு நிர்வாகத்தின்மீதும் எந்த ஒரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்பதை இந்த மன்றத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலைமை மாறி, அப்படி யாராக இருந்தாலும், எந்தக் கல்விக் கொள்ளையர்களாக இருந்தாலும், அந்தச் செயல்களிலே ஈடுபடுபவர்கள்மீது, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல தீர்வைக் காண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் கடந்த கூட்டத் தொடரிலே பேசுகின்றபோது, ஆசிரியர் கல்லூரிகளிலே, B.Ed. பயிற்சிகளுக்கு, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாமல், இன்றைக்குப் பல கல்லூரிகள் புற்றீசல்கள்போல் முளைத்திருக்கின்றன; அதற்கு நீங்கள் ஒரு குழுவை அமைத்துப் பரிசீலிக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்ததற்கு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அதற்காக Vice-Chancellor தலைமையிலான ஒரு குழுவை அமைத்தார். ஆனால், அந்தக் குழு இன்றைக்கு விசாரணையைத் தொடங்குவதற்கு முன்பாகவே, நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை வாங்குகின்ற சூழல்

ஏற்பட்டுள்ளது. அன்றைக்கு, எப்படிக் கிராமப்புற மாணவர்களுக்குக் கலைஞருடைய அரசு, 15 சதவீத இட ஒதுக்கீடு தந்ததும், 25 சதவீதம் என்று அதை உயர்த்தியதும், உடனே உயர் நீதிமன்றத்திற்குப் போய்த் தடை வாங்கினார்களோ, அதேபோல் பொறியியல் கல்லூரிப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று ஆணை அனுப்பி, தடை வாங்கினார்களோ, அந்த நிலைமைபோல, மறைமுகமாக ஆதி மக்களாகிய பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட இந்த மாணவர்களுடைய எதிர்காலக் கல்வியைச் சீர்குலைப்பதற்கு ஒரு சதிவலையை இந்த மண்ணிலே செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் அடையாளம் கண்டு, இந்த அரசு களைய வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–15

அதேபோல், இன்றைக்கு நம்முடைய உயர் நீதிமன்றம் இருக்கிறது. இந்த உயர் நீதிமன்றத்திலே வழக்காடுகின்ற முறை தமிழிலே இல்லை. தமிழாய்ந்த தலைமகனான உங்கள் ஆட்சியில்தான், இந்தத் தமிழர்களுக்கு விடிவு பிறக்க வேண்டும். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற நிலை மாறி, இன்றைக்கு 'எங்கே தமிழ்?' என்று தேடுகின்ற அவலம், இந்த மண்ணிலே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்காக, ஆரம்பம் முதல் ஆராய்ச்சிக் கல்வி வரையிலும், தமிழை எல்லா நிலைகளிலும் கட்டாயப் பாடமாக்க வேண்டும்; பயிற்று மொழியாக்க வேண்டும் என்று தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி குரல் கொடுத்து வருகிறது. இவற்றையெல்லாம் இந்த அரசு செய்ய வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். செய்யாத அரசிடம் கோரிக்கைகள் வைத்து, நாங்கள் ஓய்ந்து போவதைக் காட்டிலும், செய்கின்ற அரசிடம் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முத்தமிழ் அறிஞர் அவர்களே, உங்கள் ஆட்சிக் காலத்தில், தமிழாய்ந்த தலைமகனுடைய ஆட்சிக் காலத்தில், எம் தமிழ் மக்களுக்கு விடிவு இல்லையென்று சொன்னால், எந்த நாட்டிலே யார் காலத்திலே விடிவு கிடைக்கும்? இந்தத் தமிழ் மண்ணிலே, நீங்கள் ஆண்டு கொண்டிருக்கிற இந்த மண்ணிலே, தேவாரம் பாடுவதற்கு என் மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் கோயிலிலே உரிமையில்லை என்று சொன்னால், எங்கே போய் தேவாரம் பாடுவது? அமெரிக்காவிலா? அல்லது ஜப்பானிலா? வேறு நாடுகளிலா? என் தாய்த் தமிழ்நாட்டில், என் பண்ணிசையைப் பாடுவதற்கு மறுக்கப்படுகின்றது, அவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள் என்று சொன்னால், இந்த அவலம் துடைத்தெறியப்பட வேண்டும். இதற்கு எதிரானவர்கள்மீது, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.



யாசகம்போல், தமிழிலும் அர்ச்சனை செய்யலாம் என்கிற ஒரு கேவலமான கூப்பாடு, திருக்கோயில்களின் வாசல்களிலே, பெயர்ப் பலகைகளிலே தொங்கவிடப்படுகின்ற அவலம் போக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

உயர் நீதிமன்றத்தில், தமிழில் வழக்காடுவதற்கு Article 348, பாகம் 2 என்ற பிரிவின்கீழ் இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு Governor மூலமாக அனுப்பி வைத்து, ஜனாதிபதியினுடைய ஒப்புதலைப் பெற்றாலே போதும்; இங்கே உயர் நீதிமன்றத்திலே தமிழில் வழக்காடலாம் என்ற நிலை உருவாகிவிடும். இதை, மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், விரைவு நீதிமன்றங்கள். இந்த விரைவு நீதிமன்றங்கள், வழக்குகளை விரைந்து நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. கடந்த காலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய ஆட்சிக் காலத்திலே, 12 நாட்களிலேயே தீர்ப்பு வழங்கி சாதனை படைத்திருப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் வரவேற்கிறோம். 12 நாட்களிலேயே தீர்ப்புக்களை வழங்குகின்ற அந்த நீதிபதிகளுக்கு, தொலைபேசி வசதி கிடையாது; கார் வசதி கிடையாது; உட்காருவதற்கான அறைகள் கிடையாது; ஓய்வு எடுப்பதற்கான அறைகள் கிடையாது; ஒதுங்குவதற்கு, சிறுநீர் கழிப்பதற்குக்கூட அறைகள் இல்லாமல், நீதிமன்றங்களெல்லாம் கேவலமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்திலே, என் பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில், மூன்று கோடி ரூபாயிலே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டும் என்று பலமுறை கேட்டேன். இன்றைய மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் மாண்புமிகு அமைச்சர், அருமைத் தோழர் ஜெயக்குமார் அவர்கள், 'மத்திய அரசிடமிருந்து நிதி வரட்டும் வேல்முருகா, செய்து தருகிறேன்' என்று சொன்னார். நான் அவரை இந்த நேரத்திலே குறை சொல்ல விரும்பவில்லை. நிதி அன்றைக்கு வரவில்லை; அவர் செய்துதரவில்லை. ஆனால், இன்றைக்கு இந்த அரசு, வேல்முருகன் வைக்கின்ற கோரிக்கைகளான, இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தைச் செய்து தருவதற்கும், விரைவு நீதிமன்றங்களில் அவர்களுக்கு இருக்கின்ற

சங்கடங்களைத் தீர்ப்பதற்கும், தமிழக முதல்வருடைய அரசு, சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்கிறேன்.

அதேபோல், கடந்த பத்தாண்டுக் காலமாக, சிறையிலே வாடுகின்ற ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் உணர்ச்சிவசப்பட்டு, ஏதாவது ஒரு குற்றத்திற்கு ஆளாகி, அவர்கள் சிறைக் கொட்டடையிலேயே அடைந்து கிடக்கின்றபோது, அவர்கள், பத்தாண்டுக் காலம், பன்னிரண்டு ஆண்டுக் காலம், பதினைந்து ஆண்டுக் காலம் முடிந்து, இதுவரையில், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளிலோ, தந்தை பெரியார் பிறந்த நாளிலோ, அல்லது வாழும் தமிழ், எங்கள் தமிழினத் தலைவர், உங்கள் பிறந்த நாளிலோ, அந்தச் சிறைக் கைதிகள் விடிவு காலம் இல்லாமல் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளை மாளிகையின் வெண்புறா அவர்கள், இராணி மேரிக் கல்லூரியின் வழக்கு சம்பந்தமாக, கடலூர் சிறைச்சாலைக்கு வந்தபோது, அங்கே ஆயிரக்கணக்கான சிறைக் கைதிகள் வேண்டுகோள் வைத்தார்கள். அந்தப் பரிசீலனையை, இந்த ஆட்சி நிச்சயமாக மறுபரிசீலனை செய்து, அந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** இன்னும் முக்கியமான இடத்திற்கே வரவில்லை, பேரவைத் தலைவர் அவர்களே. சினிமாவில் உள்ளதைப்பற்றி கடந்தகால ஆட்சியிலே நான் பலமுறை எடுத்து வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்கூட அன்றைக்கு என் நிலைக்கு ஆதரவாக இருந்து, பாடல் வரிகளைக்கூட பாடிக் காட்டினார்கள். இன்றைக்குச் சினிமாவில் எங்கு பார்த்தாலும் ஆபாசம். அருவருக்கத்தக்க வசனங்கள், பாடல் வரிகள். இங்கே பெண் உறுப்பினர்கள் அமர்ந்திருக்கிறார்கள். இல்லையென்று சொன்னால், இந்த அவலங்களை இந்த மன்றத்திலே, எத்தனை மணி நேரமானாலும், கொச்சையான, கேவலமான, அநாகரிகமான, ஆபாசமான பாடல் வரிகளை என்னால் சுட்டிக்காட்ட முடியும். இன்றைக்குச் சில பாடல்களின் தலைப்பு வரிகளை மட்டும் சொல்கிறேன். சம்பந்தப்பட்ட துறையின் மாண்புமிகு அமைச்சர், இதற்குச் சரியான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



"எப்படி, எப்படி.?" என்று ஒரு பாட்டு. "நீ ரெடியா, நான் ரெடியா?" என்று ஒரு பாட்டு. "எனக்கு ஏன் பொண்டாட்டி, எனக்கு எக்கச்சக்கமா, ஏதோ ஆய்போச்சு" என்று பாட்டு. என்ன வரிகள்? சமூகம் எங்கே சென்று கொண்டிருக்கிறது? தொலைக்காட்சியிலே இன்றைக்கு flash news என்று ஓடுகின்ற இடத்தில் S.M.S. என்று அனுப்பப்படுகிறது. என்ன தெரியுமா? 'I love you-டா செல்லம்'; 'I love you-டா கண்ணு'. இதையெல்லாம் இன்றைக்குப் பெற்றோர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மழலைச் செல்வங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றன. வயதான பெற்றோர்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இந்த நிலைமை எந்தத் தொலைக்காட்சி என்று இல்லை; அனைத்துத் தொலைக்காட்சிகளிலும். எந்தத் தொலைக்காட்சி என்று இல்லை; அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் இந்தச் சமூக அழிவு என்பது, சமூகப் பண்பாடு சீரழிவு, கலாச்சாரம் சீரழிவு என்பது நடந்தேறிக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசு, சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாத் தொலைக்காட்சிகளிலும் என்றுதான் சொல்லியிருக்கிறார். எல்லாத் தொலைக்காட்சிகளிலும் என்றுதான் சொல்லியிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, எல்லாத் தொலைக்காட்சிகளிலும் என்றுதான் சொல்லியிருக்கிறார், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழை வளர்ப்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அதை அனைத்து உறுப்பினர்களும் ஆதரித்து, வரவேற்க வேண்டிய சூழ்நிலையில்தான் இருக்கின்றார்கள். திரைப்படங்களில் ஆபாசமாகப் பாடல் வரிகள் வருவதைப்பற்றி, திரு. வேல்முருகன் அவர்கள் இங்கு மிகவும் ஆவேசமாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள்தான் டெல்லியில் அமைச்சர்களாக இருக்கின்றார்கள். தணிக்கைத் துறையிடம் சொல்லி, அவர் அதைத் தடுப்பதற்கான வழியைச் செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமன்றத்தினுடைய உறுப்பினர். இந்தச் சட்டமன்றத்தில் இது முடியும். முடிக்கக்கூடிய முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களுடைய ஆட்சி இருக்கின்ற காரணத்தினாலேதான், இந்தக் கருத்தை நான் பதிவு செய்கிறேன். எங்கள் அமைச்சர் இருப்பது எங்களுக்குத் தெரியும்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வார்த்தையைத் தொடருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** 'Censor Board, மத்திய அரசாங்கத்தின்கீழ்'' என்று கடந்தகால முதலமைச்சர் அவர்கள், நான் கேள்வி எழுப்புகின்றபோது பதில் அளித்தார். அந்தச் செய்தியும் இந்த வேல்முருகனுக்குத் தெரியும், எதெதற்கோவெல்லாம் சட்டம் கொண்டுவந்து, நடைமுறைப்படுத்துகிறபோது, இதுபோன்ற ஒரு சமூகக் கலாச்சார சீரழிவை, ஒரு சமூகச் சீரழிவை, ஒரு பண்பாட்டுச் சீரழிவை, இளைய தலைமுறையினரிடம் அண்ணன், அண்ணி, அத்தை, மாமன், மருமகன் என்ற உறவுமுறை சிதைந்து கொண்டிருக்கிறதே இவற்றைத் தெரிந்தும், தெரியாமலும், பார்த்தும், பார்க்காமலும், கண் இருந்தும் குருடனாக, இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே, இந்த அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற ஆதங்கத்தில் என் குரலை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்கு அரசால் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. பான்பராக், குட்கா போன்ற புகையிலைகளெல்லாம் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால், சென்னை போன்ற பெருநகரங்களில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான அளவிலே, அந்தப் பொருள்களையெல்லாம் தங்குதடையின்றி இன்றைக்கு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு, இந்த அரசு, சரியான கடுமையான ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தண்ணீர்: ஒரு லிட்டர் பால் விலை 10 ரூபாய் என்று சொன்னால், ஒரு லிட்டர் தண்ணீர் விலை 15 ரூபாயாக இன்றைக்கு விற்கப்படுகின்றது. தனி நபர்கள் தண்ணீரைப் பல்வேறு இடங்களிலே ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து உறிஞ்சியெடுத்து, அந்தத்



தண்ணீரை இன்றைக்கு விலைபொருளாக ஆக்கிக்கொண்டிருக்கின்ற இந்தக் கொடுமை, இந்த அரசின்கீழ் நடைபெறாமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** கல்லூரி மாணவர்கள், இளம் வயதைச் சார்ந்தவர்களைச் சென்னையிலே, பேருந்துகளில் பார்க்கின்றேன். பல்வேறு இடங்களிலே, கல்லூரி மாணவர்கள், பேருந்துப் பயணத்தைக் கூரைமேல் செய்துகொண்டிருக்கிறார்கள். பேருந்தை ஓட்டுகின்ற அந்த ஓட்டுநர், எங்கேயாவது கொஞ்சம் இசகு பிசகாக, கொஞ்சம் வேகமாக break அடித்தால் போதும்; மேலே இருக்கின்ற அந்த உயிர்கள் எல்லாம், விலை மதிக்கமுடியாத அந்த மாணவ சமுதாயத்தினுடைய உயிர்கள் எல்லாம் பலியாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்குச் சம்பந்தப்பட்ட துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாநகரக் காவல் துறைக்கு அறிவுறுத்தி, சரியானதொரு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று, இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, பள்ளி நேரங்களுக்கேற்றவாறு அந்தப் பேருந்துகளை நீங்கள் மாற்றி இயக்கவேண்டும். பேருந்துகளினுடைய நேரங்களையும் மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையிலே இருக்கின்ற மழலையர் கல்விக் கூடங்கள். L.K.G., U.K.G., Pre K.G. என்கிற வகுப்புகளில் இடத்தை வாங்குவதற்குக்கூட இப்போது இங்கேயிருக்கிற மக்களால் முடியவில்லை என்கிற ஓர் அவலம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரு L.K.G. seat-க்கு 50,000/- ரூபாய். அந்த L.K.G. seat வேண்டுமென்று சொன்னால், முதல் நாள் இரவு சென்று, மறுநாள் காலை வரையில் அந்த convent வாசலிலே பெற்றோர்களும், உறவினர்களும் காத்துக்கிடக்கின்ற ஓர் அவலம் இந்த மண்ணிலே தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த அவலத்திற்குச் சரியான முற்றுப்புள்ளி வைப்பதற்கு, இந்த அரசு சரியான ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு தேர்வில் தோற்றவர்கள் மறுதேர்வு எழுதுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பு வழங்கப்பட்டு, +2 வகுப்பிலே தேர்ச்சி பெறுகின்ற அந்த மாணவர்கள், கல்லூரிக்குச் சென்று சேருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று சொன்னால், இல்லை. அதற்கு முன்பே, அந்த

இடங்களையெல்லாம் நிரப்புகின்ற ஒரு சூழ்நிலையிருந்தது. அப்படி மறுதேர்வு எழுதுகின்ற அந்த மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அவர்களுக்கும் அரசுக் கல்லூரிகளிலே இடங்களை ஏற்படுத்தித் தந்து, அவர்களுடைய கல்வி பாழ்படாமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தீ விபத்துகள்; விபத்து ஏற்பட்டு ஒருவருடைய வீடு, வீட்டிலே இருக்கின்ற T.V. மற்றும் அனைத்துப் பொருட்களையும், உடைமைகளையும் இழந்து நிற்கின்ற ஏழை மக்களுக்கு, அரசு வழங்குகின்ற தொகை, வெறும் 2,000/– ரூபாய்; ஒரு வேட்டி சேலை; 10 கிலோ அரிசி. இந்த 2,000/– ரூபாயையும், வேட்டி, சேலையையும் 10 கிலோ அரிசியையும் வைத்துக்கொண்டு அந்த ஏழைக் குடிமகன், தன்னுடைய வீட்டை எப்படிப் புனரமைத்துக்கொள்வான் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஊனமுற்றோருக்கு இரு மடங்காக உதவி; அதேபோல், நலிந்த பிரிவினருக்கு முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை என்று பல்வேறு நிதிகளைக் கேட்காமலே அள்ளித் தந்திருக்கின்ற முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களே, ஒரு வீடு தீப்பிடித்து எரிந்தால், அந்த வீட்டைப் புனரமைப்புச் செய்வதற்குக் குறைந்தபட்சம் 10,000/– ரூபாய் வழங்குவதற்கு, இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். அடுத்த உறுப்பினர் பேசவேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுகொண்டிருக்கிற இந்த அரசு, நிதிநிலை அறிக்கையிலே அல்லது கவர்னர் உரையிலே, குறிப்பிட்டிருக்கின்ற திட்டங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும். எந்தத் திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்; எதை விட்டிருக்கிறோம்; எந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்பதை மறு ஆய்வு செய்கின்ற வகையில், action taken report என்பதை இந்த அரசு நடைமுறைப்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி சம்பந்தமான சில வேண்டுகோள்களை வைக்கிறேன். கடந்தமுறை நான் பேசுகின்றபோது குறிப்பிட்டேன்; என் தொகுதியிலே ஒரு சட்டக் கல்லூரி இல்லை, ஒரு பொறியியல் கல்லூரி இல்லை, ஒரு மருத்துவக்



கல்லூரி இல்லை, ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. ஒரு Polytechnic இல்லை, ஒரு I.T.I. இல்லை, எதுவும் இல்லை என்கின்ற நிலையிருக்கிறது. இல்லை என்கிற நிலையை மாற்றுகின்ற இந்த அரசு, இதில் ஏதாவது ஒன்றை முத்தமிழ் அறிஞர், முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று ஆவலோடு இருந்தேன். அது விடுபட்டிருக்கிறது. அதை இந்த அரசு நிச்சயமாக அறிவிக்கவேண்டும். ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற எங்கள் பகுதியிலிருந்துதான், சென்னைவாழ் மக்களுக்கு, எங்கள் தொகுதியிலிருந்துதான் 54 இராட்சத bore-well-கள் மூலமாக, நீரை உறிஞ்சி, நாங்கள் இன்றைக்குத் தந்துகொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டும்.

முற்பகல் 10–25

**திரு. தி. வேல்முருகன்:** அப்படித் தருகின்ற அந்த மக்களுக்குக் கல்வி கொடுப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும், அந்தப் பகுதியிலே நீரை உறிஞ்சி எடுக்கின்றபோது, நிலத்தடி நீர் இன்றைக்கு அளவுக்குமீறி கீழே சென்றுகொண்டிருக்கிறது. அந்த மண்ணில், மக்கள் விவசாயம் செய்வதற்கு வாய்ப்பில்லை; ஆதலால் கேட்கிறேன். அந்தப் பகுதியிலே ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் தமிழக அரசு special நிதியாக, தனி நிதியை ஒதுக்கி, அனைத்துப் பஞ்சாயத்துகளுக்கும், குடிநீரைக் கொடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஓய்வறியா உழைப்பாளி அவர்கள் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியில் மிகப் பெரிய பிரச்சினை, முந்திரிக்கு உரிய விலை இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். எவ்வளவு நேரம் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்? அடுத்த உறுப்பினர் பேச வேண்டும். (குறுக்கீடு) முடியுங்கள். முடியுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** நீண்ட காலமாக வேதனையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முந்திரிக்கு, மூட்டைக்கு, 5 ஆயிரம் ரூபாய் விலை வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தேன். அதற்கும் ஒரு சரியான அறிவிப்பு உங்கள் காலத்தில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

அதேபோல், இரயில்வே மேம்பாலங்கள், புறவழிச் சாலைகள் என்று எந்தக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படாமல் கிடக்கின்றன. கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில், என் வாய்தான் வலித்ததே தவிர, என் வலி நீங்கவில்லை. ஆதலால், முத்தமிழ் அறிஞர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நீங்கள் நிறைவேற்ற வேண்டும்.

உலகத்திலேயே பிரசித்திபெற்ற பலாப் பழம் என் தொகுதியைச் சார்ந்ததுதான். அந்தப் பலாப் பழத்தைக் கொண்டு, ஒரு ஜூஸ் கம்பெனி, அல்லது ஜாம் தயாரிக்கும் கம்பெனி தொடங்கலாம். ஜப்பான், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில், பலாப் பழங்களைக் கொண்டு, மிக அற்புதமான ஜாம் தயாரித்து, உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதுபோல செய்வதற்கு இந்த அரசு ஒரு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், சென்னை போன்ற பெரு நகரங்களில், எங்குப் பார்த்தாலும் விளம்பரப் பலகைகள் ஆபாசமாகவும், அருவருக்கத் தக்கனவாகவும் வைக்கப்பட்டிருப்பதால், ஓட்டுநர்கள் வண்டியை ஓட்டுகின்றபோது, அவர்களுடைய சிந்தனை அவற்றின்மேல் சென்று அவர்கள் விபத்துகளில் மாட்டிக்கொள்கின்ற ஓர் அவலம் ஏற்படுகிறது. அதை முறைப்படுத்துவதற்கும் ஒரு தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி.

**திரு. தி. வேல்முருகன்:** முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ப்ளஸ் 2 மறு தேர்வு எழுதியபின், கல்லூரிகளில் சேர வாய்ப்பு அளிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு, இந்த ஆண்டு முதல் அதுமாதிரி மறு தேர்வு எழுதுகிறவர்கள், entrance தேர்வும் எழுதியிருந்தால், counselling-இலே, காலியிடம் இருக்கிறபொழுது, அதற்கும் அவர்களைப் பரிசீலிக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு நன்றி.

அதேபோல், தமிழ்நாட்டில், இன்றைக்கு கிராமப்புறங்களிலே, TASMAC மதுக்கடைகளைத் திறந்துவிட்டு, உழைக்கின்ற விவசாயிகள், அவர்களுடைய வீட்டிற்கு எடுத்துச் செல்கின்ற கூலித் தொகைகளை எல்லாம், வழியிலே பிடுங்குகின்ற ஓர் அவலம், இந்த மண்ணிலே நடந்து கொண்டிருக்கின்றது. ஆதலால், இந்த அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி.

**திரு. தி. வேல்முருகன்:** கிராமப்புற மதுக்கடைகளை மூடுவதற்கு... (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள். பேசுங்கள். ஒரு நிமிடத்திலே பேசி முடிக்க வேண்டும்.

**திரு. தி. வேல்முருகன்:** கடந்தகால ஆட்சியில், கிராமப்புறங்கள் பூராவும், ரேஷன் கடைகளைத் திறங்கள் என்று கேட்டோம்; மதுக்கடைகளைத் திறந்துவிட்டு இருக்கிறார்கள். அந்தக் கிராமப்புற மாணவர்களுடைய எதிர்காலத்தையும், அந்த மக்களுடைய வாழ்க்கையையும் கருத்திலேகொண்டு, அந்தக் கிராமப்புறக் கடைகளை மூடுவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலைநாடுகளிலே, 21 வயதிற்கும் குறைவான வயதுள்ள நபர்கள் யாராக இருந்தாலும், குடித்தால் அவர்களைக் கைது செய்வதற்கும், கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டம் இருக்கிறது. இங்கே, பத்தாம் வகுப்பு படிக்கின்ற மாணவனும் குடிக்கிறான்; 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவனும் குடிக்கின்றான்; 21 வயதிற்குட்பட்ட மாணவர்களும் குடித்து தங்களுடைய வாழ்க்கையைச் சீரழித்துக்கொள்கிற அவலம், இந்த மண்ணிலே தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் வரைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு நல்ல ஒரு முயற்சியை எடுத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி. (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, சிதம்பரத்தில் தேவாரம், திருவாசகம் ஆகிய தமிழ்ப் பாக்களை இசைக்க இயலவில்லை என்ற ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். சிதம்பரத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள தீட்சிதர்களுடைய ஆதிக்கத்தில், தில்லை நடராஜருடைய ஆலயம் இருப்பதாகவும், ஆகவே, அதை மீறி எதையும் செய்ய முடியாது சட்டரீதியாக என்றும், ஒரு ஐதீகக் கருத்து இன்றைக்கு அழுத்தந்திருத்தமாகச் சொல்லப்படுகிறது. அதையேதான் அந்த தீட்சிதர்களும் சொல்லி, அங்கே தேவாரம் அல்லது திருவாசகம் பாட முயன்ற ஒரு தமிழரை அங்கேயிருந்து வெளியேற்றியிருக்கிறார்கள்; அல்லது நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளாக்கியிருக்கின்றார்கள். அதில் சட்டப் பிரச்சினை என்னவென்பதை மூத்த வழக்கறிஞர்களோடு ஆராய்ந்து பார்த்து, அதை எப்படி எதிர்கொள்ளலாம் என்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் திரு. வேல்முருகன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆலயங்களில், சுவர்களில் 'தமிழிலும் அர்ச்சனை செய்யலாம்' என்று எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 'தமிழிலும் அர்ச்சனை' என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து, 'ஆஹா! தமிழிலும் என்று எழுதப்பட்டிருக்கிறதே!' என்று மகிழ்ச்சியடைய முடியவில்லை; உண்மைதான். 'தமிழிலும்' என்று அவ்வளவு இளக்காரமாகத் தமிழ் மொழி ஆகிவிட்டதா என்கின்ற கொதிப்புதான் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஏற்படும். ஆகவே நான், அந்த உணர்வின் அடிப்படையில் இந்த அரசின் சார்பாக, அறநிலையத் துறையின் சார்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்; அப்படிப்பட்ட எழுத்துகள் இனி எந்த ஆலயத்திலும் எழுதப்படமாட்டாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே எழுதப்பட்டிருந்தால், அவை அழிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–30*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி அனைவரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து அனைத்து மக்களுடைய உள்ளங்களிலும் பாலை வார்த்தாரோ, அதேபோல, இந்த அறிவிப்பு அனைத்து மக்களும் வரவேற்கக்கூடிய அறிவிப்பாக இருக்கும்; உள்ளார்ந்த தமிழர்கள்



அனைவரும் உள் மனதோடு, கட்சிப் பாகுபாடின்றி வரவேற்க வேண்டிய இந்த அறிவிப்பை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996, 2001 ஆம் ஆண்டு மற்றும் 2006 ஆம் ஆண்டு ஆகிய மூன்று சட்டமன்றத் தேர்தல்களிலும் எனக்கு ஒட்டன்சத்திரம் தொகுதியில் போட்டியிடுவதற்கு வாய்ப்புக் கொடுத்து, இந்த மாமன்றத்திலே மூன்று முறை என்னை உறுப்பினராக்கி, அதுவும் இந்த ஆண்டு அரசுத் தலைமைக் கொறடா பதவி கொடுத்து என்னைக் கௌரவித்த, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், வாழும் வள்ளுவர், எங்கள் குடும்பத் தலைவர், முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், 2006 ஆம் ஆண்டு என்னுடைய ஒட்டன்சத்திரம் தொகுதியிலே தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்து, என் வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்த கழகத்தின் பொதுச் செயலாளர், தமிழக அரசின் நிதி அமைச்சர், மாண்புமிகு இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், 2006 ஆம் ஆண்டு கொளுத்தும் வெயிலில் என் தொகுதிக்காக, வெற்றிக்காக, வருகைபுரிந்து தேர்தல் பிரச்சாரம் செய்த கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், வருங்காலத் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும், அதேபோல, இந்தத் தொகுதியிலே மூன்று முறை நான் போட்டியிடுவதற்கு எனக்குப் பரிந்துரை செய்த தமிழக அரசின் வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. இ. பெரியசாமி அவர்களுக்கும், தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்து பிரச்சாரம் செய்த, தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களுக்கும், வாக்களித்த வாக்காளர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற குறிக்கோளுடன், தந்தை பெரியாரின் தொண்டனாக, அண்ணாவின் தம்பியாக ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்று, 'சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்ற தலைவரின் தாரக மந்திரத்தை ஏற்று, ஐம்பது ஆண்டுக் காலத்தில் செய்ய முடியாத பணிகளை, ஐந்தாண்டுக் காலத்தில் செய்வதற்கு வாய்ப்பு இருந்தாலும், பதவியேற்ற, பல்லாயிரக்கணக்கானோர் இருந்த மேடையிலே, முத்தான

மூன்று திட்டங்களுக்கு அனுமதி தந்து, ஆட்சிப் பொறுப்பேற்ற எழுபது நாட்களிலே, தேர்தல் சமயத்திலே சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் இன்றைக்கு நிறைவேற்றி, சாதனை படைத்து, இந்திய வரலாற்றிலே எந்த முதலமைச்சரும் செய்ய முடியாத காரியங்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் செய்திருக்கின்றார்கள்.

சில தலைவர்கள் தேர்தல் சமயத்திலே வாக்குறுதிகளை அளிப்பார்கள். ஆட்சிப் பொறுப்பேற்று சிலவற்றை நிறைவேற்றுவார்கள்; சிலவற்றை விட்டுவிடுவார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தளவிலே, 'நான் ஆட்சிக்கு வந்தால்...' — பொதுக் கூட்டங்களிலும் சரி, பத்திரிகையாளர்களிடத்திலும் சரி — 'நான் ஆட்சிக்கு வந்தால், என்னுடைய தேர்தல் அறிக்கைதான் முதல் நிதிநிலை அறிக்கையாக இருக்கும்' என்று சொல்லி, அத்தனையையும் நிறைவேற்றி, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வேண்டிய அத்தனை காரியங்களையும் செய்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டி மகிழ்கின்றனர்.

'நாடொறும் நாடிமுறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்'

என்பது வான்புகழ் கொண்ட வள்ளுவன் வகுத்த நெறி. நாடாளும் மன்னன் நாட்டைப்பற்றி, மக்களைப்பற்றி, ஏழைகளைப்பற்றி, இல்லாதோரைப்பற்றி, நலிந்தோரைப்பற்றி நாளும் நாளும் சிந்தித்துச் செயலாற்றுகின்ற நன்மனம் கொண்டவனாக இருக்கவேண்டும். அவன்தான் 'குடி-தழீஇக் கோலோச்சும்' வேந்தனாக மக்களால் மதிக்கப்படுவான். அவ்வரசுதான் நலம் நாடும் அரசாக ஆன்றோர்களால் அங்கீகரிக்கப்படும்.

*முற்பகல் 10–35*

சங்கத் தமிழ் கண்ட தங்கத் தலைவனாம், பைந்தமிழ்த் தேர்ப் பாகன், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழகத்தில் ஐந்தாவது முறையாக அரியணை ஏறிய அரிமா; குறளோவியம் படைத்த கோமான்; பார் புகழும் பூமான்.



2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை, வரி இல்லாத நிதிநிலை அறிக்கை. இந்த நிதிநிலை அறிக்கையை நாடே போற்றுகிறது; நல்லோர் பாராட்டுகின்றனர்; அவர் இவர் என்னாது அனைவரும் வரவேற்கின்றனர்; ஏழைகள் இறும்பூது எய்துகின்றனர்; பூரிக்கின்றனர்; அழுக்காறு கொண்டுள்ளோர், புன்மனம் படைத்தோர், பொறாமைக் கொண்டோரைத் தவிர.

கல்லக்குடி கொண்ட கன்னித் தமிழ்க் காவலனாம், தமிழ்ப் பாவலராம், கலைஞர் கைவண்ணத்தில் உருவான நிதிநிலை அறிக்கையில் அப்படி என்னதான் இருக்கிறது, ஊரார் உச்சிமேல் வச்சி மெச்சுவதற்கு? காரணம் ஒன்றா? இரண்டா? ஓராயிரம் அன்றோ! அப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையைத் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழக மக்களுக்காக அளித்திருக்கின்றார். இந்த நிதிநிலை அறிக்கையில் சிலர் குறை காண்கிறார்கள் என்றால், அவர்கள் மனதில் குறை இருக்கிறது என்று அர்த்தம். அவர்களுக்கு இது கானல் நீர் பட்ஜெட்டாம்! எல்லாம் எதிர்பார்த்தவர்களுக்கு இது புனல் நீர் பட்ஜெட்; ஆனால், எதை எதையோ எதிர்பார்த்தவர்களுக்கு இது கானல் நீர் பட்ஜெட். ஆம்! இந்தப் புனல் அவர்களுக்கு வேனலாய் நின்று வியர்த்துப்போய் இருக்கிறது. அரவாணிகள் முதல் அகதிகள் வரை, கருவறை முதல் கல்லறை வரை இன்றைக்குப் பயன்பெறக்கூடிய வகையிலுள்ள இந்த நிதிநிலை அறிக்கை, தமிழக மக்களுக்கு அட்சயப் பாத்திரம். இதில் அள்ள அள்ளக் குறையாத அளவற்ற திட்டங்கள்.

உலை வைக்க முடியாத ஏழை எளிய மக்களுக்கு அரிசி கிலோ 2 ரூபாய்க்கு என வழங்கப்படுகின்ற முதல் திட்டம். நான் ஆட்சிக்கு வந்தால் ஏழை எளிய மக்களுக்கு அரிசி கிலோ 2 ரூபாய்க்கு வழங்குவேன் என்று சொன்ன தலைவர் கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று அதே மேடையிலே முதல் கையெழுத்துப் போட்டு, இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு அரிசி கிலோ 2 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 1,950 கோடி ரூபாய் உணவுக்காக மானியம் வழங்கப்பட்டிருக்கிறது.

என்பு தோல் போர்த்த ஏழைக் குழந்தைகளுக்கும் சத்துணவில் வாரம் இரண்டு முட்டை. அந்தத் திட்டத்தைப் பெருந்தலைவர் காமராசர் பிறந்த தினமான ஜூலை 15 ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்று அறிவித்து, பெருந்தலைவர் பிறந்த தினத்தைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து, முன்னாள் முதலமைச்சர் கர்ம வீரர் காமராசர் அவர்களுக்கும் பெருமை சேர்த்துத் தந்திருக்கின்றார் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதுமட்டுமல்லாமல், கல்யாணம் ஆகாமல் கனவு வாழ்க்கையில் இருக்கும் கரைசேரா ஏழைப் பெண்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரிலே கரைசேர்க்கின்ற திருமண உதவித் திட்டம். இந்தத் திட்டத்திற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் 15 ஆயிரம் ரூபாய் திருமணத்திற்காக நிதி வழங்கி இருக்கின்றார். அதற்காக இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை"

என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க விவசாயம் செழிக்க, விவசாயிகளின் வாழ்வு மேம்பட, உயர, நிதிநிலை அறிக்கையிலே பல ஆக்கப்பூர்வமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. உழவர்களுக்குக் கூட்டுறவு வங்கிகள்மூலமாக வழங்கப்படுகின்ற வட்டி, 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த 2 சதவிகித வட்டியும், கூட்டுறவு வங்கிகளுக்குப் பதிலாக அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற நிலையை அரசு அறிவித்துள்ளது.

அதுமட்டுமல்ல; சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இந்திய வரலாற்றிலே, இன்றுவரை எந்த முதலமைச்சரும் செய்ய முடியாத காரியத்தை விவசாயிகளினுடைய கடன், 6,866 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து சாதனை படைத்திருக்கின்றார் தலைவர் கலைஞர் அவர்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மட்டுமல்லாமல், நிலவள வங்கியில் வாங்கியிருக்கின்ற ஆடு, கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை, tractor போன்றவற்றிற்கான கடன்களுக்கெல்லாம், ஒவ்வொருவருக்கும் ரூ.10 இலட்சம், ரூ.20 இலட்சம் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல; நகைக்கடன் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்குக்கூட, அந்தக் கடன் விவசாயத்திற்காக வைத்திருந்தால் திருப்பித் தரப்பட்டிருக்கிறது. பண்ணை சார்ந்த கடன் அனைத்தும் தலைவர் கலைஞர் அவர்கள் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், விவசாயிகள் எல்லாம் இன்றைக்கு இந்தத் திட்டத்தால் மிகவும் பயனடைந்து வருகிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; 1989 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள்தான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தார்கள். இந்தத் தேர்தல் அறிக்கையிலே, சுயநிதி உதவித் திட்டத்திலே பணம் செலுத்தி மின்சாரம்



பெற்றிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கும், இலவச மின்சாரம் தரப்படும் என்று சொன்னார்கள். அதன்படி, 2 இலட்சத்து 40 ஆயிரம் விவசாயிகளுக்கு அந்த இலவச மின்சாரம் தருவதற்கு உத்தரவை வழங்கி இருக்கின்றார் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்தக் கடன் தள்ளுபடியால் 25 இலட்சம் விவசாயிகள் தமிழ்நாட்டிலே பயனடைந்திருக்கின்றார்கள். திண்டுக்கல் மாவட்டத்திலே சுமார் 75 ஆயிரம் விவசாயிகள் 200 கோடி ரூபாய் அளவுக்கு இன்றைக்கு அந்தத் திட்டத்தால் பயனடைந்திருக்கிறார்கள் என்பதையும், இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அத்துடன் விவசாயிகள் பயிர் செய்யவும், இந்த ஆண்டுக்காக ஆயிரம் கோடி ரூபாய் இந்த அரசு நிதி ஒதுக்கி இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், நிலமற்ற விவசாயிகளுக்கு தரிசு நிலங்கள், அரசுப் புறம்போக்கு நிலங்களை எடுத்து கையகப்படுத்தி, அந்த ஏழை எளியவர்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்குவதற்கும் அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(முற்பகல் 10-40)

அதோடு, பயணிகள் நலன்கருதி நடப்பு ஆண்டிலே தலைவர் கலைஞர் அவர்கள், சுமார் ஆயிரம் பேருந்துகளை வாங்குவதற்கு 100 கோடி ரூபாய் நிதியைத் தந்திருக்கிறார்கள்.

தமிழகத்திலே பாதுகாக்கப்பட்ட குடிநீர், எல்லா கிராமங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது, இந்த அரசின் கொள்கை. தமிழ்நாட்டிலே 968 கிராமங்கள், இன்றைக்குக் குடிநீர் வசதி இல்லாமல் இருக்கின்றன. அந்த 968 கிராமங்களுக்கும் இந்த ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக, குடிநீர் வசதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கிறது.

வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் காவிரியாற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக, சுமார் 671 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; ஒவ்வொரு ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் கொடுத்து, முதல் ஆண்டிலே 2,500 ஊராட்சிகள், அடுத்த 5 ஆண்டுகளிலே 12,618 ஊராட்சிகளையும் தேர்வு செய்து, படிப்படியாக தனி நபர் வருமானம் அடிப்படையிலே ஏறுமுகமாக, ஐந்தாண்டு ஆட்சிக் காலத்திலே, அனைத்துக் கிராமங்களையும், தமிழ்நாட்டிலே இருக்கிற 12,618 கிராம ஊராட்சிகளையும், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே தேர்வு செய்து, அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடிய திட்டம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில், இப்போது 50 இலட்சம் இளைஞர்கள் பதிவு செய்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்தப் படித்த இளைஞர்களுக்கு — தேர்தல் அறிக்கையிலே தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்; திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், அந்தப் படித்த இளைஞர்களுக்கெல்லாம் — மாதந்தோறும் நிதியுதவி வழங்கப்படும் என்று. அதேபோன்று, 10-வது வகுப்பு படித்த பள்ளி மாணவர்களுக்கு இன்றைக்கு மாதம் 150 ரூபாயும், +2, புகுமுக வகுப்பு படித்த மாணவர்களுக்கு மாதத்திற்கு 200 ரூபாயும், இளங்கலை, முதுகலை பட்டப் படிப்பு படித்த மாணவர்களுக்கு சுமார் 300 ரூபாயும் வழங்கப்படும்; அதுவும் மூன்றாண்டுகளுக்கு என்று அறிவித்து, அவர்களுக்கும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்காக இந்த ஆண்டு 110 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும்விதத்தில், சென்னை, மதுரை, கோவை நகர்களில் விற்பனை மையங்கள்; அதேபோல, விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை என்பதால், அந்தப் பொருட்களைச் சேமித்து வைக்கவும், அவற்றின் ஏற்றுமதிக்காகவும், வெங்காயத்திற்கு கோவை மாவட்டத்தில் பல்லடத்திலும், அதேபோல மாம்பழத்திற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், தேனி மாவட்டத்தில் ஓடைப்பட்டியிலே திராட்சைக்கும் குளிர்சாதனக் கிடங்குகள் அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்திருக்கிறது.



'இவ்வுலகில், நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை' என்று சொல்லும் மானம்காக்கும் ஏழை நெசவாளர்கள், சொந்தமாகக் கைத்தறி வைத்திருந்தால், அவர்கள் வீட்டு மின்சாரத்திற்கு, இரு மாதங்களுக்கு 100 யூனிட் வரைக்கும் இலவச மின்சாரம்; விசைத்தறி வைத்திருந்தால் அவர்களுக்கு இரு மாதங்களுக்கு மின்சாரத்திற்கு 500 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகையினால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் இழப்பான ரூபாய் 40 கோடியே 26 இலட்சத்தை அரசே ஈடு செய்கிறது. இப்படி உணவுக்கும், உடைமைக்கும் உரிய வழி கண்டு, தன்னிறைவு கண்டு, தளர்ந்து போகாமல், மேலும் பல சலுகைகள்.

முதியோர் உதவித் தொகை; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் 1996-லே தலைவர் கலைஞர் அவர்கள் 100 ரூபாய் என்பதை 200 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். இப்போது தலைவர் கலைஞர் அவர்கள், அந்த முதியோர் உதவித் தொகையை 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து, அவர்கள் வயிற்றில் பால் வார்த்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோழி மற்றும் முட்டை உற்பத்தியில் தமிழகமானது, அகில இந்திய அளவிலே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. நாகப்பட்டினம், கரூர், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலே கால்நடை நோய் குறித்த நுண்ணறிவுப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையிலே; அதை நான் வரவேற்கிறேன்.

இந்திய நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சிகள் மேற்கொள்வதோடு, முதல்கட்டமாக தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தை உருவாக்க முயற்சி எடுப்போம் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்; இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

1969-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் காவல் துறைக்கு முதல் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது. மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள், 1989 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்புதான், காவல் துறைக்கு இரண்டாவது கமிஷன் அமைத்தார். இப்போது காவல் துறை நல்ல வலிவோடும், பொலிவோடும் இருப்பதற்காக, மூன்றாவது கமிஷனையும்

தலைவர் கலைஞர் அவர்கள்தான் அமைத்திருக்கிறார் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து, அதையும் நான் வரவேற்கிறேன்.

முற்பகல் 10–45

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளைக்குத் தேவையான 350 பணி இடங்களை, நிரப்புவதற்கு இந்த அரசு ஒப்புதல் தந்திருக்கிறது.

கல்வியில், இன்றைக்கு அனைத்துப் பள்ளிகளிலும் தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று அறிவித்து, அதை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டுமென்றும், படிப்படியாக 10–ஆம் வகுப்பு வரை அது விரிவுபடுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 100 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு, எனது தொகுதியில் பணம் கட்டி, இரண்டு ஆண்டுகளாக, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படவில்லை. ஆனால், இப்போது தலைவர் கலைஞரின் அரசு, எனது ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள இடைகோட்டையிலும், சத்திரப்பட்டியிலும் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திக் கொடுத்திருக்கிறது. அதற்காக இந்த நேரத்தில், தலைவர் கலைஞரின் அரசுக்கு நான் மனதாரப் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுபோல, பல ஆண்டுகளாகப் படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். இந்த அரசு, வேலை நியமனத் தடைசட்டத்தை வாபஸ் பெற்றதன்மூலமாக, படித்த இளைஞர்கள் பலபேருக்கு இப்போது வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜூலை 15 ஆம் தேதி, காமராசர் பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலே கல்வித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள, கல்வியியல் ஆய்வு மையம் (Centre for Educational Research) என்ற ஒன்றை அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது; அதை நான் மனதார வரவேற்கின்றேன்.

கிராமப்புறங்களிலே படிக்கின்ற மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு விரைந்து கிடைக்க ஊரகப் பகுதிகளிலே பல் மருத்துவக் கல்லூரி,





செவிலியர் மருத்துவக் கல்லூரி, உடல் இயக்க மருத்துவக் கல்லூரி அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 235-க்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் 70 கோடி ரூபாயில், அந்த மருத்துவமனைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் வாங்குவதற்கும் மருத்துவத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் இந்த நேரத்தில் வரவேற்கின்றேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பொறுத்தளவிலே, தேர்தல் சமயத்தில் தலைவர் கலைஞர் அவர்கள், "நான் ஆட்சிக்கு வந்தால் கண்டிப்பாக ஏழை எளிய மக்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்" என்று சொன்னார்கள். அதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே தலைவர் கலைஞர் அவர்கள் 750 கோடி ரூபாய் ஒதுக்கி, அதுவும் வருகின்ற செப்டம்பர் மாதம் தந்தை பெரியார் பிறந்த தினமான செப்டம்பர் 17 ஆம் தேதி, 30 ஆயிரம் பேர்களுக்கு அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று அறிவித்து, விரைவிலே சர்வதேச ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, படிப்படியாக தமிழகம் முழுவதும் இருக்கின்ற மக்களுக்கு அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று அறிவித்ததை நான் மனதார வரவேற்கின்றேன்.

மத்திய அரசு, பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ், நமது தமிழகத்திலுள்ள 4,172 கி.மீ. கிராமச் சாலைகளைத் தரம் உயர்த்த இப்போது நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், பல்வேறு இதர மாவட்டச் சாலைகளை, மாவட்டச் சாலைகளாகவும், மாவட்டச் சாலைகளை முக்கிய சாலைகளாகவும், முக்கிய சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாகவும் தரம் உயர்த்துவதுபற்றி நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றது. அதையும் நான் இந்த நேரத்தில் வரவேற்கின்றேன்.

தொழிலாளர்களுடைய வாழ்வு உயர, இந்த அரசால், பத்துக்கும் மேற்பட்ட நல வாரியங்கள் அறிவிக்கப்பட்டு, அமைக்கப்பட்டிருக்கின்றன. அதையும் நான் இந்த நேரத்தில் வரவேற்கின்றேன்.

அரவாணிகள்; இன்றைக்கு அர்த்தநாரீஸ்வரர்களாக இருக்கும் அரவாணிகள், தமது சொந்தக் காலில் சுயமாய் நிற்க, சுய உதவிக் குழுக்கள்; அவர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்குவ்து குறித்து

பரிசிலனை என்று சொல்லி, எல்லாத் தரப்பினரையும் ஏற்றம் பெறச் செய்திருக்கின்றார் கலைஞர்.

அதோடு நின்றாரா? இல்லையில்லை. வீடு வளர்ந்தால், தெரு வளரும். தெரு வளர்ந்தால் ஊர் வளரும். ஊர் வளர்ந்தால் நாடு வளரும் என்ற நோக்கோடு தொழில் வளர்ச்சிதான் இந்த மண்ணுக்கு முறிவில்லா அச்சாணி எனக் கண்டு, தொழில் துறையில் ஏராளமான அறிவிப்புகள்.

திருச்சி, கோவையில், அண்ணா பல்கலைக்கழகத்தைப் போல், தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்; வணிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த கூட்டு வரி முறை என்ற "VAT" அமலாக்கம்; சென்னையிலே இரண்டாவது Tidel Park. சென்னை அருகே துணை நகரங்கள்; அந்த நகரங்கள் வளர சென்னைக்கு மெட்ரோ இரயில். அதுமட்டுமல்லாமல், பல்வேறு தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். உடல் நலனிலும் ஊனமில்லா அக்கறை. அந்த உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் மாதம் 200 ரூபாய் என்ற அந்த உதவித் தொகையை விரைவிலே 500 ரூபாயாக உயர்த்துவதற்கு, இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கின்றார்கள். அதையும் நான் வரவேற்கின்றேன்.

நாமக்கல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், மனிதர்களுக்குப் பறவைகளால் ஏற்படும் நோய் குறித்து ஆய்வுக் கூடம் எனத் திட்டங்களின் அறிவிப்புகளுக்குக் காற்புள்ளி வைத்து, கணக்கின்றி அறிவித்து, இவையெல்லாம் காகித எழுத்தாகக் கசங்கிப் போகாமல் காலூன்றி நடந்து, பின் எழுந்து, முதுகுத் தண்டோடு முழுவதுமாய் வலம் வர, அரசு ஊழியர்களையும் ஆதரிக்க வேண்டும். அவர்கள் வயிற்றுக்கும் உணவு அளித்து, அது பாலைவனமாய்ப் பட்டுப் போகாமல், சோலைவனமாய் நிற்கச் சுதந்திரமாய்ச் சிந்தித்தார். அந்தச் சிந்தனையின் அறுவடைகள் இதோ! இதுவரை ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தின்கீழ் பணிபுரிந்த 45,987 ஆசிரியர்கள், 1-6-2006 முதல் காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இனிவரும் காலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கும் கால முறை ஊதியம் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை; அந்தத் திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-50

அரசு ஊழியர்களின் 30 ஆண்டுக் கால உழைப்புக்கு முழு ஓய்வூதியம். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். ஆனால், இவர்களுக்கோ தை பிறக்காமலேயே வழி பிறந்திருக்கிறது. ஆம்! வரும் பொங்கலுக்கு இப்போதே பொங்கல் பரிசு. இந்தப் பரிசுக்காக திருத்திய வரவு-செலவுத் திட்டத்திலே சுமார் 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பார்களே, அதற்கேற்ப, ஆடியிலே அரசு ஊழியர்களைத் தேடி வந்து உரிய பட்டத்தை விதைத்திருக்கிறார் உயர்வான தலைவர் கலைஞர் அவர்கள். தவிர, பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அடிப்படையிலே பணியிடங்கள் என அறிவித்து, 'உடுக்கை இழந்தவன் கை போல' அந்தக் குடும்பங்களுக்கு இவர் தனது உதவிக் கரங்களை நீட்டியுள்ளார்.

சத்துணவுப் பணியாளர்கள் ப்ளஸ் 2 முடித்து, ஆசிரியர் பயிற்சி முடித்திருந்தால், அவர்களுக்கும் இந்த ஆண்டு மட்டும் சிறப்பு நேர்வாக ஆசிரியர் பணி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

அரசு ஊழியர்களை ஆற்றுப்படுத்தினால், அரசுத் திட்டங்களைச் செம்மைப்படுத்தியது மாதிரி என்று அவர்களை ஆற்றுப்படுத்தியுள்ள தலைவரை, இன்று நெஞ்சார நினைக்கிறார்கள் அந்த அரசு ஊழியர்கள். அவர்களின் ஈர விழிகளில் இவருக்காக ஒரு நீர்த் திவலை, 'நன்றித் திவலை' என்ற நயன்மிகு சொல்லோடு, உலராமல், உறங்காமல் என்றும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன்.

வரலாற்றுத் தலைவர் என்பதால் வரலாற்றையும் இவர் மறந்தாரில்லை. சுதந்திர வரலாற்றை அறிய சிப்பாய்ப் புரட்சியைப் பாடப் புத்தகங்களில் சேர்ப்பேன் என்ற அறிவிப்பு, தமிழறிஞர் பரிதிமாற் கலைஞருக்கு நினைவகம் அமைத்து, அவரின் நினைவாக திருப்பரங்குன்றத்திலே நினைவகம் அமைப்பதற்கும், அஞ்சல் தலையும் வெளியிடப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

தமிழில் பெயர் சூட்டினால் திரைப்படங்களுக்கும் முழு வரி விலக்கு என்று அறிவித்து கோடம்பாக்கத்தையும் கொஞ்சமாய் இல்லாமல் நிறைவாகக் குளிர்வித்துள்ளார். நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்குக் கடற்கரையில் நிலையான சிலை.

நினைவகம் போய் நினைவில்லாமல் போன கண்ணகிக்கு, மீண்டும் உயிர் கொடுத்து ஊருக்குக் கொண்டு வந்த உத்தமக் கலைஞர், உறக்கத்தையும் உழைக்க வைக்கும் உத்தமத் தலைவர் கலைஞர் அவர்கள்.

எனது ஒட்டன்சத்திரம் தொகுதியிலே இன்றைக்குப் பல்வேறு பிரச்சினைகள். 1996 ஆம் ஆண்டு முதல் 2001 வரை தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே கொத்தயம் என்ற இடத்திலே நல்லதங்காள் அணை கட்ட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. இன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நமது வருவாய்த் துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களும், அந்த இடத்தை வந்து பார்வையிட்டு இங்கே சட்டமன்றத்திலே வந்து, அந்த அணை கட்டப்படும் என்று அறிவித்து, அந்தத் திட்டம் உறுதிமொழிக் குழுவிலே இடம்பெற்று, மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரிலே, இன்றைக்குப் பொதுப் பணித் துறை அலுவலகத்திலே திட்டம் தயாராக இருக்கிறது. அந்த நல்லதங்காள் அணைத் திட்டத்தைக் கண்டிப்பாக இந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நன்காஞ்சியாறு திட்டம், 1989 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள்தான் சுமார் 40 கோடி ரூபாய் நிதி தந்து, அந்தத் திட்டம், இதுவரையில் பயன்பாட்டிற்கு வராமல் உள்ளது. சென்ற ஆண்டே பயன்பாட்டிற்கு வந்திருக்க வேண்டும். அந்தத் திட்டம் இன்னும் பயன்படாமல் இருக்கிறது. விரைவிலே அந்தத் திட்டத்திற்குக் கூடுமான நிதி ஒதுக்கி, இந்த ஆண்டு, சுமார் 6,500 ஏக்கர் நிலம் பயன்பெறக்கூடியவகையிலே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒட்டன்சத்திரம் இன்றைக்கு வளர்ந்து வரக்கூடிய நகரம். அந்த நகரத்திலே நீதிமன்றங்கள் இல்லை. திண்டுக்கல்லுக்கும், பழனிக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை. மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களும், நமது சட்டத் துறை அமைச்சர் அவர்களும் இந்த ஆண்டு ஒட்டன்சத்திரத்திலே குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, முடியுங்கள், முடியுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.





**திரு. அர. சக்கரபாணி:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை எவரும் குறைகாண முடியாத சிறந்த ஒன்றாகும். பெரியாரின் பாசறையில் படைபெற்றவர், பின் பெருங்காஞ்சி கழகத்தில் கலைகற்றவர், சலியாத புகழ் கொண்ட மலைமேடுபோல் பல சாதனைகள் படைத்ததனால் புகழ்பெற்றவர். தூய உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் அரசு, சாதனைகள் படைக்கும் அரசாக ஓங்குபுகழ் பெற்று; வாழ்க தலைவர், வாழ்க தலைவர், என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

முற்பகல் 10–55

***திருமதி ஜி. லதா:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் வீற்றிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களே, எல்லோருக்கும் பணிவான வணக்கம். நிதிநிலை அறிக்கை பல்வேறு தரப்பினராலும் வரவேற்கக்கூடிய ஆக்கப்பூர்வமான அம்சங்களைக் கொண்டுள்ளது. அது வரவேற்கத்தக்கது. தேர்தல் அறிக்கையில் மக்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கின்றவிதத்தில், பட்ஜெட் அறிவிப்புகள் அமைந்திருக்கின்றன. வரியில்லாத இந்த பட்ஜெட், ஏழையெளிய அனைத்து மக்களுக்கும் உதவியாக இருக்கும் என்பது உறுதி. இதில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்கள் யார் என்று மீண்டும் ஓர் ஆய்வு செய்து, அதை முறைப்படுத்துவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருப்பது ஏழையெளிய மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பது உண்மையாக்கப்பட்டிருக்கிறது.

பொது விநியோக முறைக்காக, உணவுத் துறை அமைச்சர் அவர்கள், வேலூர் மாவட்டத்தில் ஓர் ஆய்வை நடத்தினார்கள். அந்த ஆய்வுக்குப் பிறகு, குடியாத்தம் பகுதிகளில், மக்கள் எண்ணற்ற விண்ணப்பங்களை தினமும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடமும், அதிகாரிகளிடமும் கொடுத்து வருகிறார்கள். அந்த மனுக்களில், ரேஷன் கடைகளில் கிடைக்கின்ற அனைத்துப் பொருட்களும் முழுமையாக சரியான எடையில் கொடுக்க வேண்டுமென்றும், குடும்ப அட்டைகளை முறையோடு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டு, மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அத்தியாவசியப் பொருட்கள் தேவைப்படும்

அனைவருக்கும், அனைத்துப் பொருட்களும் கிடைக்கின்றவகையில், பொது விநியோக முறை வலுப்படுத்தப்பட வேண்டும். அதன் ஒரு பகுதியாகத்தான் இந்த பட்ஜெட்டில் ரேஷன் கடை முறைகேடுகளைக் களைந்திட குண்டர் சட்டம் பாயும் எனக் கூறியுள்ளதை வரவேற்கிறோம். அதேநேரத்தில், ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அனைத்துப் பொருட்களையும் Packet செய்து வழங்க வேண்டும். ரேஷன் கடைகளில், உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து அத்தியாவசியப் பொருட்களும், அனைத்துக் குடும்பங்களுக்கும் கிடைக்கின்றவிதத்தில் அவை விலை குறைவாக விற்பனை செய்யப்பட வேண்டும். பொது விநியோக முறை சிறந்து விளங்கிட, கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும். ரேஷன் கடைகளில் நல்ல அரிசியையும், தரம் குறைந்த அரிசியையும், இரண்டையும் கலந்து, கலப்படமான ஒருவிதத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதேநேரத்தில், எடை குறைவாக. பல்வேறு கடைகளில் கொடுக்கப்படுகின்றது. இவை அனைத்தையும் தடுத்து நிறுத்த கட்டாயமாக ஒரு கண்காணிப்புக் குழு, ஒவ்வொரு கடை தோறும் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், ஒருவருக்குத் திருமணமானவுடன் அவருக்கு ஒரு புது குடும்பம் உருவாகிறது. அந்தப் புதுக் குடும்பம் உருவானவுடன், அவர் குடும்ப அட்டைக்கு விண்ணப்பம் செய்கிறார். விண்ணப்பம் செய்தவுடன் அவருக்கு, ஒரு ஆய்வைச் செய்து, அந்தக் குடும்பத்திற்குத் தேவையான குடும்ப அட்டையை வழங்கினால் கட்டாயமாக குடும்ப அட்டை பிரச்சினை தீர்க்கப்படும். கேரளா போன்ற மாநிலங்களில் குடும்ப அட்டை என்ற பிரச்சினையே எழுவதில்லை என்பதனைக் குறிப்பாக இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் செயல்பட்டுவரும் நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, நுகர்பொருள் வாணிபக் கழக நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களைப் போன்று இணையான ஊதியம் வழங்கப்பட வேண்டும். ஒரு கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டால், அதன்கீழுள்ள நியாயவிலைக் கடைகளில் வேலை பார்த்துவரும் விற்பனையாளர்களை, வேறு ஒரு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும்போது, ஏற்கெனவே பெற்று வந்த சம்பளம் மற்றும் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கும்வண்ணம் செய்ய வேண்டும். ஏற்கெனவே இருந்த அரசாணை நிலை எண் 145, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத் துறை, நாள் 1–8–2005-ஐத் திருத்தி ஆணை பிறப்பிக்க வேண்டும்.



மலையோரப் பகுதிகளில், மலையைச் சார்ந்து இருக்கின்ற பகுதிகளில் வெகுதூரம் சென்று கூட்டுறவுக் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டிய சூழல் இருக்கிறது. இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்கினாலும்கூட, அவர்களுக்கு மலையேறி இறங்கி வருவதில் போக்குவரத்திலும் மற்ற வசதிகளிலும் பிரச்சினைகள் இருப்பதால், மலையோரப் பகுதிகளில் இருக்கின்ற கடைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, 100 குடும்ப அட்டைகள் இருந்தால் போதும்; அந்தப் பகுதிகளுக்கு ஒரு நியாயவிலைக் கடையை அமைக்க, ஏற்கெனவே இருக்கின்ற விதிகளைத் தளர்த்தி, கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை அமைக்க முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–00)

அதேபோன்று, உள்ளாட்சித் துறை அமைப்பு குறித்து பார்க்கலாம். நம் இந்திய நாடு, கிராமங்கள் நிறைந்த நாடு. உயிரோட்டம் இருக்கின்ற கிராமங்கள்; அந்தக் கிராமங்கள் இந்திய நாட்டு வளர்ச்சிக்கும் முதுகெலும்பாக இருக்கின்றன. அதைப் பார்க்கும்போது, இன்று உள்ளாட்சித் துறையில், உள்ளாட்சியின் செயல்பாடுகள் மற்றும் அமலாக்கத்தை உறுதிப்படுத்த, மாநில அரசு தனது வருவாயில் 30 சதவிகித நிதி ஒதுக்கீட்டை அதற்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலச் சர்க்கார் மத்தியச் சர்க்காரிடமிருந்து 35 சதவிகித நிதியைப் பெறுவதைப்போலவே, மாநிலச் சர்க்காரும் இந்தப் பஞ்சாயத்துகளுக்கு 30 சதவிகித நிதியை உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், பஞ்சாயத்துகளில் மின்சாரக் கட்டணம் கட்டுவதற்குக்கூட பணம் இல்லை. பணப் பற்றாக்குறையினால் தத்தளிக்கின்ற ஒரு சூழல், அந்தப் பஞ்சாயத்து நிர்வாகங்களில் நிலவுகிறது என்பதனைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளின் அதிகார வரம்பை விரிவுபடுத்த வேண்டும். மக்களால் தேர்வு செய்யப்பட்ட அந்தப் பஞ்சாயத்து நிர்வாகம், மக்களுக்காகத் திட்டமிடுகின்ற பணிகள், மக்களுக்காக மின்சாரம், போக்குவரத்து. சாலை வசதி, குடிநீர் இப்படி எண்ணற்ற விஷயங்களை நிர்ணயிக்கக்கூடிய அந்த நிர்வாகம், எந்த அதிகாரமும் இல்லாமல் முடக்கப்படுகிறது. அதனால் அதை வழங்க வேண்டும் எனக் கோருகிறேன்.

அதேமாதிரி, இந்தப் பஞ்சாயத்து நிர்வாகம்; அது மூன்று அடுக்கு முறையில் செயல்படுகிறது. இந்த மூன்று அடுக்கு முறை, ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாமல், தனித் தனியாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இவற்றை முறை செய்ய, மாநிலப் பஞ்சாயத்துச் சட்டத்தில்

திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் ஆகிய உள்ளாட்சிகளுக்கு இட ஒதுக்கீடு என்பது செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளில் தேர்தல் நடத்துவதை உறுதி செய்ய வேண்டும். கிராம ஊராட்சிகளில் குடிநீர் வழங்கும் ஊழியர்கள் முழுநேரப் பணியாளர்களாகச் செயல்படுகிறார்கள். ஆனால், பேரூராட்சிகளில் மட்டும் அவர்கள் முழுநேரப் பணியாளர்கள் என்று கூறப்படுகிறார்கள். கிராமப் பகுதிகளில் இருக்கின்ற குடிநீர் வழங்குபவர்களையும் முழுநேர ஊழியர்களாக ஆக்க வேண்டும்.

மலைவாழ் மக்களுக்குக் குடிநீர், மின்சாரம், சாலை வசதி, வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு போன்ற அடிப்படையான வசதிகளை ஏற்படுத்துவதற்காக மலையோர ஊராட்சிகளுக்குச் சிறப்பு நிதி என்பது உறுதி செய்யப்படவேண்டும். மலையோரத்தில் இருக்கின்ற அந்த ஊராட்சிகளில், பள்ளிக்கூடங்கள், போக்குவரத்துகள், மருத்துவம் உட்பட இவை அனைத்தையும் அந்த ஊராட்சியைச் சார்ந்த பகுதிகளுக்குக் கட்டாயமாகச் சிறப்பு நிதி என்ற விதத்தில் உறுதி செய்யப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதுமட்டுமல்ல; எங்கள் குடியாத்தம் தொகுதி, தமிழ்நாட்டில் கொஞ்சம் வித்தியாசமான தொகுதி. ஒரு பொதுத் தொகுதியில் தலித் வேட்பாளர் நிறுத்தப்பட்டு, அதில் வெற்றியடையச் செய்த தன்மை என்பது, இந்தச் சபையில் இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அந்தத் தொகுதிக்கு வந்து செவ்வனே வேலை செய்து, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்த எண்ணற்ற மக்கள், அந்தத் தொகுதியினைச் சார்ந்த மக்கள் அனைவரையும் ஒன்றிணைந்து இந்த வெற்றிக்கு முழுமையாகச் செயலாற்றிய விதம் என்பது, தமிழக மக்களையும், இங்கே இருக்கின்ற அனைத்துச் சான்றோர்களையும் சிந்திக்கவைக்கின்ற விதத்தில், ஒரு சிறப்புவாய்ந்த தொகுதியாக மாற்றியிருக்கின்றது. சிறப்புவாய்ந்த இந்தத் தொகுதியில் உள்ள நாங்கள், நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருந்தாலும், இந்தப் பகுதியில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு இங்கு அமர்ந்து இருக்கக்கூடியவர்கள் உதவிகரமாக இருக்க வேண்டும் என்பதனையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடியாத்தம் தொகுதியில், 85 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு இருக்கின்ற மருத்துவமனை, சீர்கெட்டு நலிந்து கிடக்கிறது. இப்போது மருத்துவம் என்பது, அதற்குதான் வைத்தியம் பார்க்க வேண்டும். அந்த



அளவுக்கு மோசமான நிலையில் அமைந்திருக்கிறது. சென்ற ஐந்தாண்டுக் காலமாக, அதைப் புதுப்பிக்கவேண்டுமென்று அந்தத் தொகுதியைச் சார்ந்த மக்கள் பல கோரிக்கைகள், மனுக்கள் அளித்தும், இந்தச் சட்டமன்றத்தில் பேசப்பட்டும், அவை செவிமடுக்கப்படவில்லை. ஆனால், கலைஞர் ஆட்சியில், கட்டாயமாக, குடியாத்தம் தொகுதியைச் சார்ந்த அந்த மருத்துவமனை சீர்கேட்டைப் போக்கக்கூடியவிதத்தில் செயலாற்றுவார்கள் எனக் கட்டாயமாக நம்புகிறேன்.

*முற்பகல் 11–05*

அதுமட்டுமல்ல; பாதாளச் சாக்கடைத் திட்டம் குறித்தும் சொல்ல வேண்டும். பாதாளச் சாக்கடை என்பது, 50 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட ஒரு பாதாளச் சாக்கடைதான் இருக்கிறது. அதை முழுமை செய்யவேண்டிய ஓர் அவசியமும் இருக்கிறது.

அதுமட்டுமல்ல; நீதிமன்ற வளாகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மூலையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராமத்தைச் சார்ந்த பகுதிகளிலுள்ள மக்கள் எந்த நீதிமன்றத்திற்கு, எந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்று திக்குத் தெரியாமல் திணறிக் கொண்டிருக்கின்ற ஒரு சூழல் இருக்கிறது. எனவே, அந்தத் தொகுதியில் கட்டாயமாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமையப்பட வேண்டுமென்பதனைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் பகுதி என்பது, ஆந்திர மாநிலத்தை இணைக்கின்ற ஒரு பகுதியாக இருக்கிறது. மலைப் பிரதேசமாக இருக்கிறது. Road–கள் படுமோசமாக அங்கு இருக்கின்றன. 2 மாநிலங்களையும் இணைக்கக்கூடிய அந்தத் தொகுதியில், அகலமான road–கள் இல்லை. நிறைய wagons எல்லாம் போகின்றன. ஆனால், அந்தப் பகுதி மிகவும் குறுகலாகவும், ஏறத்தாழ 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலைகளாகவும்தான் இன்றும் இருக்கின்றன. இப்போது 4 வழிச் சாலைகள் எல்லாம் ஆங்காங்கு அமைத்திருக்கிறார்கள். எனவே, இந்தச் சாலைப் பராமரிப்பு என்பதை அங்கு முறை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது.

குடியாத்தம் தொகுதி, சாதாரணமாக நெசவாளர்களும், பீடித் தொழிலாளர்களும், தீப்பெட்டித் தொழிலாளர்களும் நிறைந்த பகுதி. ஒரு குட்டி சிவகாசி என்று சொல்லக்கூடியவிதத்தில், அந்தத் தொகுதி அமையப்பட்டிருக்கிறது. நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவதாகவும், சிட்டா நூலின் மீதான வரியை இரத்து செய்வதாகவும் கலைஞர் அவர்கள் அங்கே குறிப்பிட்டு வந்தார்கள்.

அதைச் செவ்வனே இந்த அவையில் செய்திருக்கிறார் என்பதற்காக எங்களுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், குடியாத்தம் தொகுதி, லுங்கி நெய்வதில் தமிழ்நாட்டிலேயே முதன்மைபெற்ற பகுதியாக இருக்கிறது. அந்த முதன்மைபெற்ற பகுதிக்கு, ஏற்றுமதி வளாகம் என்பது, அந்தப் பகுதியில் இல்லை. சிறிய சிறிய வியாபாரிகளுக்கு அதைக் கொண்டுசெல்வதில் சிரமங்கள் இருக்கின்றன. கட்டாயமாக, இந்த நெசவுத் தொழிலுக்கு உயிர் கொடுக்கின்றவிதத்தில், அவர்களுக்கு ஏற்றுமதி வளாகங்களை அமைத்து உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; இன்றைக்குப் பீடித் தொழிலுக்குப் பெரிய பிரச்சினை இருக்கிறது. ஏற்கெனவே, பீடித் தொழில் தமிழ்நாடு முழுமையும் நலிந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலே நாளடைவில் மறையக்கூடிய தன்மையில் இருக்கிறது. இருக்கின்ற அந்தப் பீடித் தொழிலுக்குக்கூட, இன்றைய அறிவிப்பின்படி, — அபாயகரமான மண்டை ஓடு – அதற்கான ஒரு sticker–ஐ அந்தப் பீடியில் ஒட்ட வேண்டுமென்று, மத்திய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கின்றார். ஏற்கெனவே அந்தப் பீடித் தொழில் நலிந்து கொண்டிருக்கக்கூடிய சூழலில் — அது food poison அல்லது poison என்றால்தான், அந்த அபாயகரமான மண்டை ஓடைப் போட்டு, 'அபாயம்' என்று எழுதியிருக்கக்கூடிய அந்த sticker இருக்கும் — ஆனால், பீடிக்குக்கூட, ஒரு மண்டை ஓடைப் போட, அந்த sticker–ஐக் கட்டாயம் பீடியில் ஒட்ட வேண்டுமென்று சொல்லும்போது, அது அந்தத் தொழிலுக்கே பெரிய ஆபத்தாக வந்து அழியக்கூடிய ஒரு தன்மையில் போய்விடும். எனவே, நாம் அதைக் கவனத்தில்கொண்டு, சிறிய தொழிலான இந்தப் பீடித் தொழில், நெசவுத் தொழில், தீப்பெட்டித் தொழில் இவற்றைப் பாதுகாக்கக்கூடியவிதத்தில் — இந்தத் தொழில்களைப் பாதுகாத்தால்தான், அந்தப் பகுதியைச் சார்ந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை உத்தரவாதம் செய்யக்கூடியவிதத்தில் — இங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மத்திய சர்க்காரும் ஆவன செய்ய வேண்டிய விஷயமாக இது இருக்கிறது.

எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், வேலூர் மாவட்டத்திலேயே முதன்முதலில் துவங்கப்பட்ட ஆலையைச் சார்ந்த திருமகள் ஆலைக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான், இந்த மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கலைக்



கல்லூரிகள் அமைக்கப்பட்டன. ஆனால், முதன்முதலில் துவங்கப்பட்ட அந்தக் கல்லூரி இன்று பாழடைந்து. ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், பேராசிரியர்கள் 75 பேர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த அந்தக் கல்லூரியில், 17 பேர்கள்தான் பணியில் இருக்கிறார்கள். அந்தக் கல்லூரி இன்றைக்குச் சீரழிந்து கொண்டிருக்கிறது. அது கணக்கில் எடுக்கப்பட வேண்டும்.

எங்கள் தொகுதியில், ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக, உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வற்புறுத்தல் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டும் கல்வி அமைச்சரைப் பார்த்து மனு கொடுத்திருக்கிறோம். அவரும் அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, எங்கள் தொகுதியில், அதை மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கான உத்தரவாதத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

முற்பகல் 11–10

***திரு. து. ரவிக்குமார்:** இந்த 2006–2007 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையின்மீது, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் இந்த மாமன்றத்திலே முதன்முறையாக எனது கன்னி உரையை ஆற்றியபோது, தமிழ்நாட்டு நூலகங்களுக்கு வாங்கக்கூடிய நூல்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று ஒரு கோரிக்கை விடுத்திருந்தேன். ஒரு புதிய உறுப்பினரின் கன்னி உரையிலே எழுப்பப்பட்ட அந்தக் கோரிக்கையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாகவே ஆயிரம் படிகளாக அதை உயர்த்தி உத்தரவிட்டிருக்கின்றார்கள். அவருக்கு என்னுடைய நன்றியினை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வரவு–செலவுத் திட்ட அறிக்கையிலே பல்வேறு நல்ல திட்டங்கள், நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் ஏதோ ஒருவிதத்திலே கைமாறு எதிர்பார்த்து செய்யப்பட்டவை என்று சொல்லிவிடலாம். ஏனென்றால், அவையெல்லாம் தமிழக மக்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்ற நலத் திட்டங்கள். ஆனால் இந்த நாட்டையே

சேராத வெளிநாட்டிலிருந்து நம்மை நோக்கித் தஞ்சம்தேடி வந்திருக்கின்ற மக்களுக்கென அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஒரு திட்டம். அதுதான் ஈழத் தமிழ் அகதிகளுக்கான திட்டம். அந்த அகதிகளுடைய நிலை குறித்து, நான் ஒரு வார ஏட்டிலே எழுதிய கட்டுரையைப் படித்துவிட்டு, முதல்வர் அவர்கள் உடனடியாக என்னை அந்த முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டு, அறிக்கை ஒன்றைத் தர வேண்டுமென்று பணித்தார்கள். நான் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற ஓர் உறுப்பினர் என்றுகூட பார்க்காமல், அவர்கள் அளித்த அந்தப் பணியை ஏற்று நானும் ஓர் அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே 4-7-2006 அன்று சமர்ப்பித்தேன், அதிலே நான் செய்திருந்த பரிந்துரைகளில் ஒன்றை ஏற்று, இன்றைக்கு அந்த அகதி மக்களுக்கு வழங்கப்படுகின்ற பணக் கொடையினை இரு மடங்காக உயர்த்தி அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது, தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் மட்டுமல்லாமல் உலகத் தமிழ் மக்கள் எல்லாம் போற்றிப் பாராட்டுகின்ற ஒரு செயலாகும்.

அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே அகதிகளுக்கென மாநில நிதியிலிருந்து பணக் கொடையை அறிவித்திருக்கின்ற தமிழக அரசின் இந்தச் செயல் போற்றிப் பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும் இங்கே சொல்லி, அதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுகூடவே, அந்த அகதிகளுடைய நலன் குறித்து ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தியிருக்கின்ற ஒப்பந்தங்களிலும் இந்திய அரசு கையெழுத்திட வேண்டுமென்று தமிழக அரசு வலியுறுத்துமேயானால், நிச்சயம் ஈழத் தமிழ் அகதிகள் மட்டுமல்லாமல், இந்தியாவிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற பங்களாதேஷ், சீனா, திபெத் உள்ளிட்ட பல்வேறு நாட்டு அகதிகளுக்கும் அது நலன் பயப்பதாக இருக்கும். அதைப்போலவே, அவர்களது நலனுக்கென உருவாக்கப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கின்ற தேசிய சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், தமிழக அரசு, மத்திய அரசுக்கு ஒரு நெருக்குதலைக் கொடுக்க வேண்டுமென்றும் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-45

இந்த நிதிநிலை அறிக்கையிலே, குறிப்பாக மகளிர் நலன் குறித்து சொல்லப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகள் பெரிதும் பாராட்டுக்குரியவை. கருவுற்ற தாய்மார்களுக்கு 6,000 ரூபாய் நிதி உதவி; அவர்களுக்கான சுய உதவிக் குழுக்கள் மேலும் 25,000 அதிகரிப்பு என்ற திட்டங்கள்



வரவேற்கப்பட வேண்டியவை. அதேநேரத்திலே, அந்தச் சுய உதவிக் குழுக்களை நிர்வகிக்கின்ற ஊக்குநர்கள், பிரதிநிதிகள், அவர்கள்தான் அதற்கான வங்கிக் கணக்கை மாதந்தோறும் சென்று வங்கியிலே நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப் போகின்ற நாட்களிலே அவர்களுடைய வேலை பாதிக்கப்படுகிறது. அவர்களுக்கு வருமான இழப்பு ஏற்படுகின்றது. ஆகவே, அந்தச் சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிக்கு, அவர்களுடைய இழப்பை ஈடுகட்டும் விதமாகவேனும் ஓர் ஊக்கத் தொகையை மாதத்திற்குக் குறைந்தபட்சம் 200 ரூபாய் என்றாவது நிர்ணயித்து, இந்த அரசு உத்தரவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், அந்தச் சுய உதவிக் குழுக்களிடத்திலே ரேஷன் கடை நிர்வாகங்களை ஒரு பரிசோதனைரீதியாக நாம் ஒப்படைத்துப் பார்க்கலாம். நிச்சயமாக பெண்கள் நிர்வகித்தால் இப்பொழுது ரேஷன் கடைகளிலே சொல்லப்படுகின்ற பல்வேறு குறைபாடுகள் தானாகவே களையப்பட்டுவிடும். அவர்கள் அதிகம் ஊழல் செய்ய மனமில்லாதவர்கள் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கின்ற வரலாற்றுச் சிறப்புவாய்ந்த ஒரு சட்டம், இப்பொழுது இயற்றப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே சாதிப் பாகுபாடு களையப்படுகிறது. ஆனால், பாலினப் பாகுபாடு களையப்படவில்லை. அந்தச் சட்டத்திலே பெண்களும் அர்ச்சகராகலாம் என்கின்ற விதியினைச் சேர்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்கு, தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவரும் அந்தக் கருவறைகளை நீங்கள் திறந்துவிட வேண்டுமென்று அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

வேலையற்ற இளைஞர்களுக்கு நிதியுதவி என்கின்ற புதிய திட்டத்தை இந்த அரசு அறிவித்திருப்பதை மனப்பூர்வமாக நான் வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்திலே, படித்து வேலைவாய்ப்பகங்களிலே பதிவுசெய்து, 5 ஆண்டு மூப்பு பெற்ற இளைஞர்களுக்கு நிதியுதவி என்று அறிவித்திருக்கிறீர்கள். இன்றைக்கிருக்கிற இளைஞர்கள் வேலைவாய்ப்பே இல்லை என்கின்ற ஒரு மனச் சோர்வின் காரணமாக, வேலைவாய்ப்பகங்களிலே முறையாகப் பதிந்துகொள்ள முன்வருவதில்லை. அப்படிப் பதிந்துகொண்டாலும், காலத்தே அவற்றைப் புதுப்பிக்காமலும் விட்டிருக்கின்றார்கள். எனவே, வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து ஐந்து ஆண்டுகள் என்கின்ற அந்த வார்த்தைகளுக்குப் பதிலாக,

அவர்கள் படிப்பு முடித்து ஐந்து ஆண்டுகள் என்று நீங்கள் திருத்தம் செய்வீர்களேயானால், அனைத்து இளைஞர்களுக்கும் அந்த உதவி சென்றுசேர வழி பிறக்கும்.

அதுமட்டுமல்லாமல், மூன்று ஆண்டுகளுக்கு அந்த நிதியுதவி என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மூன்று ஆண்டுகளிலே வேலை கிடைத்துவிடும் என்கின்ற உத்தரவாதம் இல்லாத நிலையிலே, அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கும்வரை அந்த நிதியுதவி என்று நீங்கள் அறிவித்து, அந்த இளைஞர்களுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சுனாமி சீரமைப்புக்காக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்ற இந்த அரசு, சுனாமிப் பேரழிவிலே பாதிக்கப்பட்ட மீனவரல்லாத மற்றவர்களுடைய நலனையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்தக் கட்டமைப்பு வசதிகளை — வீடு கட்டுதல், சாலையமைத்தல் போன்ற கட்டமைப்பு வசதிகளை — உருவாக்கும்போது, மீனவரல்லாத மக்கள் பாதிக்கப்பட்ட இடங்களில் அவர்களுக்கும் அந்த வசதிகள் சென்று சேரும்விதமாக கவனத்தோடு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்றும் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஊனமுற்றோர் நலன் குறித்து இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது, மிகவும் வரவேற்கப்பட வேண்டிய அறிவிப்பாகும். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், புதிதாகவரும் பேருந்துகளிலே ஊனமுற்றவர்கள் ஏறுவதற்கு வசதியாகப் படிக்கட்டுக்கள் மாற்றியமைக்கப்படும் என்கின்ற ஒரு சிறப்பான அறிவிப்பைக் கொடுத்திருந்தார்கள். அதற்காக அவரை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன். அந்த அறிவிப்புடன் கூடவே, தனியார் பேருந்துகளிலும் அதேவிதமாக, இனிமேல் படிக்கட்டு வசதிகள் அமைக்கப்பட வேண்டும் என்கின்ற உத்தரவை நீங்கள் பிறப்பிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-20

பார்வையற்ற இளைஞர்களின் உயர் படிப்புச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பார்வையற்றவர்கள் மட்டுமல்லாமல், ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் அந்த வசதியை நீங்கள் விரிவுபடுத்தி அறிவிப்புச் செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.



அடுத்ததாக, இங்கே பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் உரையிலே குறிப்பிட்ட 'தாழ்த்தப்பட்டோர் நலன்' என்கின்ற அந்தத் தலைப்பிலே, மத்திய சிறப்பு உதவி போல — Special Central Assistance முதன்முறையாக போல — மாநில சிறப்பு உதவி என்று ஒன்றை அறிமுகப்படுத்தி, அதற்காக 25 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. இது வாழ்த்தி வரவேற்கக்கூடிய ஓர் அறிவிப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே, 'சிறப்புக் கூறுகள் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம்' என்று அறிவித்திருந்தது. இதற்கு முந்தைய அரசு அதைச் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்றும் விமர்சித்திருந்தது. தங்களுடைய தேர்தல் அறிக்கையே நிதிநிலை அறிக்கையாக இருக்கும் என்று, தமிழக முதல்வர் அவர்கள் சொன்னதன்பேரிலே, சிறப்புக் கூறு திட்டம் குறித்த அறிவிப்பு, இந்த அறிக்கையிலே இருக்கும் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோம். அந்தவிதத்திலே, எங்களுக்கு இது பெரும் ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. அதுபற்றி ஒரு வார்த்தையும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. அந்தச் சிறப்புக் கூறு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, மத்திய நிதிக் குழுவின் செயலாளர் திரு. சந்திரபால் அவர்கள் 12-1-2006 அன்று 19 அம்சங்கள் கொண்ட வழிகாட்டு நெறிகளைத் தமிழக அரசு தலைமைச் செயலருக்கும், நிதிச் செயலருக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நிறைவேற்றினால், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் இந்த அரசை என்றென்றும் மறக்கமாட்டார்கள். அது இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படாமல் இருந்தாலும்கூட, நிச்சயமாக அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, பழங்குடியின மக்கள் தாங்கள் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள் என்று சாதிச் சான்றிதழ் பெறவே பல ஆண்டுகள் போராட வேண்டியிருக்கிறது. அதனால், அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய கல்வி, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் பலன் கிடைக்காமல் போகிறது. இதற்குச் சிறப்புக் கவனம் எடுத்துக்கொண்டு, ஒரு கால நிர்ணயம் செய்து அவர்களுக்கெல்லாம் அந்தச் சாதிச் சான்றிதழை வழங்க நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோலவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டித் தரப்படுகின்ற தொகுப்பு வீடுகள், அதற்கான unit cost மிக மிகக் குறைவு. அதிலே, நிச்சயமாக ஒரு வீட்டைக் கட்டவே முடியாது. எனவே, அந்த unit cost-ஐ உயர்த்தி நீங்கள் அறிவிப்புச் செய்ய வேண்டும்.

அதுபோலவே, நீங்கள் 2 ஏக்கர் நிலம் வழங்கும்போது அந்த நிலம் வழங்குவதிலே தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழக முதல்வர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இந்து வருணக் கோட்பாட்டின்படி, நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று மத ரீதியாக, சட்டப்பூர்வமாக தடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள். அதனால்தான், யார் இந்த நிலத்தை உருவாக்கினார்களோ, பண்படுத்தினார்களோ, அவர்கள் இன்றைக்கு நிலமற்றவர்களாக இருக்கவேண்டிய கொடுமையான நிலை இருக்கின்றது. அப்படிச் சட்டப்பூர்வமாக தடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அளிப்பது, ஒரு சமூக நீதியாகும். நிச்சயமாக இதனைத் தமிழக முதல்வர் அவர்கள் பரிவோடு பரிசீலிப்பார் என்று நான் நினைக்கிறேன்.

அதுபோலவே, சிறுபான்மையினர் நலன் குறித்த திட்டங்கள். அவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று பொதுவாகச் சொல்லப்பட்டு இருந்தாலும், அதற்குக் குறிப்பான அறிவிப்பு எதுவும் இல்லாதது, எங்களுக்கு ஏமாற்றமாக இருக்கிறது. இதுகுறித்து, ஆந்திர அரசு மேற்கொண்ட முயற்சிகளை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொண்டு, அத்தகைய இடையூறுகள் எதுவும் வராதவண்ணம் இஸ்லாமிய மக்களுக்கு இட ஒதுக்கீடு தருவதற்கு விரைந்து சட்ட முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-25*

அதுபோலவே, மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் தருவதற்கான வழிவகைகள் காணப்படும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருந்தது. அதுபற்றி குறிப்பான அறிவிப்புகள் எதுவும் இல்லாததை நாங்கள் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதுகுறித்தும் நீங்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றேன். கோவையிலே சிலர் கைது செய்யப்பட்டு, அங்கே நடக்க இருந்த பயங்கர நிகழ்வுகள் தடுக்கப்பட்டிருக்கின்ற செய்திகளை இன்றைக்கு நாம் பார்க்கின்றபோது, தமிழகக் காவல் துறையினரை மனமாரப் பாராட்டுகின்றோம்.

அதேசமயத்திலே, பல்லாண்டுக் காலமாக, கோவையிலே இஸ்லாமிய இளைஞர்கள் சிறைப்படுத்தப்பட்டு, கைதிகளாகக் கிடக்கிறார்கள்.



அவர்களிலே குற்றமற்றவர்களைக் கண்டறிந்து, அவர்களையெல்லாம் உடனே விடுவிப்பதற்கு நீங்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், பாட நூல்களிலே மதவாதக் கருத்துகள் புகுத்தப்படுகின்றன என்கின்ற குற்றச்சாட்டு இந்தியா முழுவதும் முன்பு எழுந்தது. தமிழக அரசு அதற்கு இடம் கொடுக்காது என்று நாம் நம்பிக்கையோடு இருந்தோம். ஆனாலும், கடந்த தி.மு.கழக ஆட்சியிலே தயாரிக்கப்பட்ட பாட நூல்கள் சிலவற்றிலே எப்படி இந்துத்துவ சார்பான கருத்துகள் இடம் பெற்றன என்பது, பல்வேறு ஆய்வாளர்களுக்கும் அதிர்ச்சியான ஒரு தகவலாக இருந்தது. அதற்குக் காரணம், பாட நூல்கள் தயாரிக்கும்போது, இறுதியாக அவற்றைக் கண்காணிக்கவோ, அவற்றைப் பரிசோதிக்கவோ எந்தக் குழுவும் இல்லை. பாட நூல்களை எழுதுகிறவர்கள், வரலாற்றைத் தங்கள் விருப்பம்போல் திரித்து எழுதுவதற்கு அது வாய்ப்பு அளித்துவிடுகிறது. எனவே, வரலாற்று அறிஞர்கள், கல்வியாளர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, பாடநூல்களை இறுதியிலே மேற்பார்வையிட்டு, அதற்குப் பின்னாலே அவற்றை அச்சிடுவதற்கு நீங்கள் ஆணையிட வேண்டும்.

ஆதி திராவிடர் நலத் துறையின் கீழே நடத்தப்படுகின்ற பள்ளிகளினுடைய தரம் மிக மோசமாக இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். சிதம்பரத்திலே 90 ஆண்டுகளுக்கு முன்னால் சுவாமி சகஜானந்தா அவர்களால் துவக்கப்பட்ட நந்தனார் பள்ளி, இன்றைக்கு மிக மிக மோசமான நிலையிலே இருக்கின்றது. கடந்த மேல்நிலைப் பள்ளித் தேர்விலே அதனுடைய தேர்ச்சி விழுக்காடு வெறும் ஏழரை சதவிகிதம்தான். 288 மாணவர்கள் தேர்வு எழுதியதிலே, 20 பேர்தான் அதிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பது மிகவும் வெட்கப்பட வேண்டிய ஒரு நிலை. அந்தப் பள்ளி ஒரு உதாரணம். இன்றைக்கு ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்குகிற ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளினுடைய நிலை அப்படிதான் இருக்கிறது. இவற்றைக் கண்காணிப்பதற்குச் சரியான கண்காணிப்பு அமைப்பு இல்லை. கல்வித் துறையின்கீழ் இயங்குகின்ற பள்ளிகளைக் கண்காணிப்பதுபோல, இந்தப் பள்ளிகள் கண்காணிக்கப்படுவதில்லை. எனவே, மாவட்ட அளவில் இதற்குக் கண்காணிப்புக் குழுக்களை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே உருவாக்கிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, சிறப்பு ஆங்கிலப் பயிற்சி, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுப்பதற்கு, 'தாட்கோ' மூலமாக ஓர் அறிவிப்பு செய்யப்பட்டிருப்பதை நாளேடுகள்மூலமாக சென்னைப் பதிப்பிலே நான் பார்த்தேன். அந்த வசதி தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆதி திராவிட மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயில்களிலே பரிவட்டம் கட்டுகின்ற முறை அகற்றப்படும் என்று முதல் நாளிலேயே தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பான அறிவிப்பு ஒன்றை அறிவித்தார்கள். அது சமூகத்திலே ஒரு சமூக நீதியை, சமத்துவத்தைக் கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கிறது. இன்றைக்கும் தமிழ்நாட்டில் அரசின் அறிவிப்புகள் பலவற்றைக் கிராமப் பகுதிகளிலே தண்டோரா போட்டு அறிவிக்கின்ற முறை வழக்கத்திலே இருக்கின்றது. தொடர்பு சாதன வசதிகள் இன்றைக்குப் பல்கிப் பெருகிவிட்ட நிலையிலே, நாம் உலக நாடுகளுக்கு இணையாகத் தொலைத் தொடர்பு வசதிகளிலே போட்டியிட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, தண்டோரா போடுகின்ற முறை, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை இன்னமும் கீழான நிலையிலே வைத்திருப்பதை இந்த உலகிற்குச் சொல்கின்ற ஒரு முறையாக இருக்கின்றது. எனவே, அந்தத் தண்டோரா போட்டு அறிவிப்புச் செய்கின்ற அந்த முறையை முற்றாக ஒழித்து உத்தரவிட்டு, வரலாற்றிலே ஒரு சிறப்பான இடத்தை நீங்கள் வகிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-30*

வெள்ளத் தடுப்புக்காக சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களுக்குப் பல்வேறு திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றீர்கள். ஆனால் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற கடலூர் மாவட்டம், இதில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றது. கடலூர் மாவட்டத்திலிருந்து வந்திருக்கின்ற மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள், இதிலே சிறப்புக் கவனம் எடுத்துக்கொண்டு, தொடர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற கடலூர் மாவட்டத்தின் வெள்ள பாதிப்பினைக் கட்டுப்படுத்தவேண்டும். கடலூர் மாவட்ட நிர்வாகம், 16 கோடி ரூபாய் திட்டம் ஒன்றை, நபார்டு வங்கியோடு செயல்படுத்துவதற்கு முன்வைத்திருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.



கல்வியிலே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக, கடலூர் மாவட்டம், இருக்கின்றது. அதிலும் குறிப்பாக, மகளிர் கல்வி மிக மிகப் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றது. எனவே, நான் சார்ந்து இருக்கின்ற காட்டுமன்னார்கோவில் தொகுதியிலோ அல்லது அதற்கு அருகில் ஏதேனும் ஓர் இடத்திலோ நீங்கள் மகளிர் கல்லூரி ஒன்றை இந்த அரசு சார்பிலே அமைப்பதற்கு முன்வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** சிதம்பரத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நோக்கி கட்டப்பட்டிருக்கின்ற மேம்பாலத்திற்கு இரயில்வே துறை தன்னுடைய பங்களிப்பைச் செலுத்தாத காரணத்தினாலே காலதாமதம் ஆகிறது. அதை இந்த அரசு வலியுறுத்தி, அந்த மேம்பாலப் பணியை விரைந்து முடித்திட ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், கடலூர் உள்ளிட்ட ஆறு மாவட்டங்கள் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆனால், அப்படிக் கொண்டுவரப்பட்ட ஆறு மாவட்டங்களிலும், இதற்கு முன்பு இருந்த S.G.R.Y. திட்டம் திரும்பப் பெறப்பட்டு உள்ளது. அதன் காரணமாக அங்கே சாலை, பாலம் போன்றவற்றை ஏற்படுத்துகின்ற கட்டமைப்பு வசதிகளைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அந்தத் திட்டத்தையும் அந்த மாவட்டங்களிலே அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மதிப்புக் கூட்டு வரி, ஜனவரி 1, 2007 முதல் இங்கே நடைமுறைக்கு வரும் என்று சொல்லி இருக்கின்றீர்கள். இந்த வரிகளைப்பற்றிச் சொல்லும்போது Regressive Tax System என்று ஒரு பிற்போக்கான வரி விதிப்பு முறை என்று வர்ணிக்கப்படுகின்ற இந்த வரி விதிப்பு முறையை, இதனால் அரசுக்கு வருமானம் வந்தாலும், சிறு வணிகர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலே, அதை அமல்படுத்துவதுபற்றி நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

செம்மொழி பற்றிய அறிவிப்பு, குறிப்பாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை உலக செம்மொழி ஆராய்ச்சி நிறுவனமாக அறிவித்து நீங்கள் எடுத்து இருக்கின்ற நடவடிக்கை, மிகவும் பாராட்டுக்குரியது. இந்த அரசு உலகத் தமிழ் மாநாடு ஒன்றை நடத்தி வரலாற்றிலே சிறப்பான இடத்தைப் பிடிக்கவேண்டும். அப்படி நடத்தப்படுகின்ற தமிழ் மாநாடு, இதற்கு முன்பு நடத்தப்பட்டதுபோல பல்வேறு அறிஞர்களைத் திருப்பி

அனுப்புகிற மாநாடாக இல்லாமல், அனைத்து உலகத் தமிழ் அறிஞர்களும் இடம்பெறுகிற ஒரு மாநாடாக விளங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

திராவிட இயக்க ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகத்திலே நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. திராவிட இயக்கம் போலவே, தமிழ்நாட்டிற்குப் பல்வேறு சிறப்புகளைச் செய்த தமிழ் இயக்கங்கள், இடதுசாரி இயக்கங்கள் போன்றவற்றின் வரலாற்றினையும் ஆய்வு செய்வதற்கான ஒரு மையம் ஒன்றைக் குறிப்பாக நெல்லை, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலே நீங்கள் ஏற்படுத்திட வேண்டும்.

கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யும்போது 'தாட்கோ' மூலமாகப் பெற்ற கடன்கள் — தள்ளுபடி செய்யப்படாமல் — அதனுடைய விளிம்புத் தொகை கட்டப்படாத காரணத்தைக் காட்டி, தள்ளுபடி செய்யப்படாத நிலை இருக்கின்றது. அந்தக் குறைபாட்டைக் களைய இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக என்னுடைய தொகுதி சார்ந்த ஓரிரு கோரிக்கைகளை ஒரு நிமிட நேரத்திலே குறிப்பிட்டு முடித்துக்கொள்கின்றேன். காட்டுமன்னார்கோவில் தொகுதியானது எந்தவித தொழில் வளர்ச்சியும் இல்லாத ஒரு தொகுதியாக இருக்கிறது. எனவே, அதில் தொழிற்பேட்டை ஒன்றை உருவாக்கிட வேண்டும். அங்கே இருக்கின்ற லால்பேட்டை மசூதிக்குச் சொந்தமான வணிக வளாகத்தை இடிப்பதற்கான முயற்சி இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்திட வேண்டும். காட்டுமன்னார்கோவில் என்பது, வைணவர்களுக்கு முக்கியமான ஒரு தலம், நாதமுனி அவர்கள் பிறந்த இடம். அங்கேயிருக்கின்ற வீரநாராயணப் பெருமாள் கோயில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. அந்தக் கோயிலின் சிறப்பை, சுற்றுலா மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக, சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்கோவிலுக்கு ஒரு சிறப்புச் சுற்றுலாப் பேருந்தினை இயக்கிட வேண்டும் என்றும், அந்த வீரநாராயணப் பெருமாள் கோயிலை மேம்படுத்துவதற்கு, செப்பனிடுவதற்கு நிதியொதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய ரவிக்குமார் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்ட ஒரு கருத்தைக் குறித்து, என்னுடைய விளக்கத்தை இந்த அவையிலே பதிவுசெய்ய விரும்புகிறேன். இந்துத்துவா கொள்கைகளைக் கொண்ட பாடத் திட்டங்களைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நாங்கள் அமல்படுத்தவில்லை. இருந்தாலும்கூட, இந்தப் பாடத் திட்டங்கள் எல்லாம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கிற அறிவுரையின்படி, ஒரு குழுவை இப்போது அமைத்து, அவற்றை ஆராய்வதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கிறோம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாதிச் சான்றிதழ்கள் வழங்குவது பற்றிக் கூறியிருந்தார்கள். 1969–இல் ஆதி திராவிட நலத் துறையும் பிற்பட்டோர் நலத் துறையும் இணைந்து இருந்தன. 2–5–1969 அன்று பிற்பட்டோர் நலத் துறை என்னும் புதிய துறையைத் தனியே உருவாக்கி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை முழுவதும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கே செயல்படும் நிலையை உருவாக்கியது முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான கழக அரசுதான். 2000 ஆம் ஆண்டில் பழங்குடியினருக்குத் தனித் துறையை உருவாக்கி, ஆதி திராவிடர் நலத் துறை, ஆதி திராவிட சமுதாய மக்கள் நலனிலும், புதிதாக உருவாக்கப்பட்ட பழங்குடியினர் நலத் துறை, பழங்குடியினர் நலனிலும் முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகச் செய்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் டாக்டர் கலைஞர் தலைமையிலான அரசுதான்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாதிச் சான்றிதழ் வழங்குவது சம்பந்தமாகக் கூறியிருந்தார்கள். எங்கள் துறை சார்பாக அதற்கான உரிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவாக வழங்கப்படும்.

கல்வித் துறையில், ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படும் கல்வியின் தரம் சரியில்லை என்று கூறியிருந்தார்கள். கடந்த ஆண்டில், நந்தனார் பள்ளி, அதாவது, சிதம்பரம் மாவட்டத்தில் உள்ள நந்தனார் பள்ளியில் 7 சதவீதம்தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு அந்தக் குறைகள் களையப்பட்டு, கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு. (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** வரிசைப்படியாக கட்சிகளை அழைக்கிறபோது, எங்கள் கட்சியைப் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தது உங்களுடையது வருகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தொடர்ந்து எல்லா வகையிலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தது உங்கள் உறுப்பினர்தான் பேச வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அடுத்ததாக உங்கள் உறுப்பினருக்குப் பேச வாய்ப்புத் தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக இடம் பெறவைத்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) அறையிலே வந்து பேசுங்கள். அப்புறம் பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இருக்கட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.



**திரு. பி.கே. சேகர்பாபு:** நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்மீது, நான் பேசுவதற்கு முழுமுதற் காரணமாக இருக்கின்ற, இருண்டு கிடந்த இந்தத் தமிழகத்தை, பஞ்சத்தில் வறண்டு கிடந்த இம்மாநிலத்தை, பசியால் சுருண்டு கிடந்த ஏழை மக்களை, தம்முடைய நிருவாகத் திறமையால், தமிழக மக்கள் வளமுற வாழ வழிவகைச் செய்த, எங்களது இதய தெய்வம், எங்களது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற திசை நோக்கி, என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

தி.மு.க.வின் கோட்டை என்று இந்த சென்னை மாநகரைப் பறைசாற்றிக் கொண்டிருந்த வேளையிலே, இல்லை, இல்லை, அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டைதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்திலே, நிரூபிக்கின்றவகையிலேயும், இரண்டாவது முறையாகவும், தப்பித்தோம், பிழைத்தோம் என்று சில உறுப்பினர்கள், இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்ற வேளையிலேயும், (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரத்திலேயே அதிகமான வாக்குகளை இரண்டாவது முறையும் எனக்கு அளித்து வெற்றிபெறச் செய்த, எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோரிக்கையை ஏற்று, என்னை வெற்றிபெறச் செய்த டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்வாழ் வாக்காளப் பெருமக்களுக்கு இந்த அவையின் சார்பிலே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கின்ற, நடுநிலை தவறாமல், நியாயமாக, பேசுகின்ற நேரத்தையும் ஒதுக்கித் தர இருக்கின்ற — எப்படி இந்தச் சபை ஆரம்பித்து இரண்டு மணி நேரம் 20 நிமிடம் ஆகிறது, இந்த 2 மணி 20 நிமிடத்தில் நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள்தான் பேசியிருக்கிறார்களோ, அப்படி அந்தக் கணக்கினை ஒப்பிட்டுப் பார்த்து, குறுக்கீடுகள் போக, குறைந்தபட்சம் ஒரு 35 மணித் துளிகளாவது -- நடுநிலை தவறாத மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் இந்த நேரத்தில் உங்கள்முன் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை

ஏற்கின்ற நேரத்தில், தமிழகத்திலே பல்வேறு தீவிரவாதக் குழுக்கள் முகாமிட்டிருந்தன. சமூக விரோத சக்திகள் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன. எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கையால், கிட்டத்தட்ட ஆறுக்கும் மேற்பட்ட தீவிரவாதக் குழுக்கள், அந்தத் தீவிரவாதக் குழுக்களுக்குண்டான அனுமதியை இந்த நாட்டிலே மறுத்து, அந்தத் தீவிரவாதக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் எவருடைய நடவடிக்கையாலும் இந்தத் தமிழக மண்ணுக்கு இடைஞ்சல் ஏற்படாமல் செய்து, அந்தத் தீவிரவாதக் குழுக்களை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திய பெருமை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையிலே — சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு முக்கிய ஊன்றுகோலாக இருப்பது காவல் துறை; இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற சட்டம்-ஒழுங்கிற்கு ஊன்றுகோலாக இருக்கின்ற காவல் துறை — அந்தக் காவல் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியைப் பற்றிக் கூறுவதற்காகத்தான் இந்தப் புள்ளிவிவரங்களை உங்கள்முன் வைக்கின்ற நிலையில் நின்றுகொண்டிருக்கின்றேன். 2001 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற நேரத்தில், 1,891.9 கோடி ரூபாய், ஆண்டுக்குக் காவல் துறைக்குச் செலவு செய்துகொண்டிருந்த நிலை. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 2006-2007 ஆம் ஆண்டினுடைய இடைக்கால நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற செலவு 1,575.98 கோடி ரூபாய். இன்னொன்றையும் நான் கூற வேண்டுமென்றால், 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்திலே கடுமையான நிதி நெருக்கடி. இருந்தாலும், தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்பதற்காக, கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில், தொடர்ந்து கிட்டத்தட்ட 479 கோடி ரூபாய் அளவிற்குக் காவல் துறையை நவீனப்படுத்துவதற்காகப் பெரு நிதியை ஒதுக்கியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற தொகையை நான் சீர்தூக்கிப் பார்க்கிறேன். இந்த பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருப்பது வெறும் 68 கோடி ரூபாய். இந்த நிலையைப் பகுத்தாய்ந்து பார்த்தால், கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றிற்கு 27.8 கோடி ரூபாய், கூடுதலாகக் காவல் துறையை நவீனப்படுத்துவதற்காகச் செலவு செய்த தலைவர், செலவு செய்த ஆட்சி,



டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தவகையிலே எடுத்துக்கொண்டால், இன்றைக்குத் தீவிரவாதக் குழுக்களின் நடமாட்டம் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில். (குறுக்கீடு) I am not yielding. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறைக்குச் சம்பந்தப்பட்டவர் முதலமைச்சர் இங்கே இருக்கிறார். அவர் இருக்கின்றபோதே, மாண்பிற்குரிய உறுப்பினர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** கோ.க. மணி அவர்கள் இதில் பதில் கூறுவதில் என்ன நியாயம்?

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, ஒரு வரியில் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற நேரத்தில், காவல் துறைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், நவீனப்படுத்துவதாகச் சொல்லி, பல்வேறு கோணங்களிலே, தேவையில்லாத ஆடம்பரச் செலவுகளைச் செய்தார்களே தவிர, வேறு ஒன்றும் அல்ல. அதுமட்டுமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று முக்கியம். காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள் பலமுறை கேட்டார்கள்: "நிதி ஒதுக்குகின்றீர்கள்; நவீனப்படுத்துகின்றீர்கள்; எங்களுக்கு என்ன வயிறா நிரம்புகிறது; எங்களுக்கு ஊதிய உயர்வு, நாங்கள் கேட்ட கோரிக்கைகள் ஒன்றுமே நிறைவேறவில்லையே!" என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்லியாகிவிட்டதே!. உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்களே!. உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோ.க. மணி அவர்கள் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார். நான் கூறியது, காவல் துறையை

நவீனப்படுத்துவதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒதுக்கிய நிதியைப்பற்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்பு, முழுவதுமாகக் குறைக்கப்பட்டு இருக்கின்றது. அதிலே, நான் சொல்ல விரும்புகின்ற கருத்து என்னவென்றால், இப்படி வழங்கப்பட்டு இருக்கின்ற பாதுகாப்பானது, எங்களுடைய தலைவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதற்கேற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு பெறப்பட்ட பாதுகாப்பல்ல; எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற பாதுகாப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) தீவிரவாதக் குழுக்களை அடக்கி ஒடுக்கியதில், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற தலைவர்களிலே தலைசிறந்த தலைவர், எங்களது தலைவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்பிற்கினிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனக்குக் குறைக்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பைப் பற்றி எப்போதுமே கவலைப்படவில்லை. ஆனால், எங்களது அம்மா அவர்களுக்குப் பாதுகாப்பு குறைக்கப்பட்டதால், ஏதாவது தீங்கு ஏற்படுமானால், அதற்கு முழு பொறுப்பு காவல் துறையைக் கையிலே வைத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் subject-க்கு வாருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** Subject-தான் இது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இல்லை. Subject-தான், subject-தான். Subject-லிருந்து நான் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை ஏதாவது இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** Subject-லிருந்து போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது விவாதத்தில் பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பாதுகாப்புக் குறைக்கப்பட்டிருப்பது உண்மை. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாமென்றுதான் நினைத்தேன். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த கலைஞர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அப்போது அவருக்கு எவ்வளவு பாதுகாப்பு வழங்கப்பட்டது என்பதை எண்ணிப்பார்த்து, இப்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு எவ்வளவு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்தால், அதைவிட பத்து மடங்கு அதிகமாகப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ பயமுறுத்துகின்ற வகையிலே, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், அதற்கு முதலமைச்சர்தான் பொறுப்பு என்று சொல்வது, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Silent, silent. சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர்மீது பழி சுமத்துவது, பழி சுமத்துவதற்கு முயற்சிப்பது சரியல்ல. எத்தனையோ பேருக்குக் குடும்பத்திலே எத்தனையோ பிரச்சினைகள் இருக்கலாம். (சிரிப்பு) ஏதாவது நடந்துவிட்டால், அதற்கும் முதலமைச்சர்தான் பொறுப்பு என்ற முடிவிற்கு உறுப்பினர்கள் வரக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு. (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order எதுவும் இல்லை. உட்காருங்கள். உட்காருங்கள், Point of order ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். Point of order இல்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்றபோதே குறிப்பிட்ட ஒரு கருத்து; எங்களது தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு, அதற்குண்டான சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு கொடுக்கப்பட்ட பாதுகாப்பு அல்ல என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றேன். எங்களது தலைவர் எடுத்த

தீவிரவாத நடவடிக்கைகளை இந்த மண்ணிலிருந்து வீழ்த்தியதற்காக, விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புகளால் எங்களுடைய தலைவரின் உயிருக்கு ஆபத்து இருக்கின்றது என்ற அறிக்கைக்கு ஏற்ப, மத்திய அரசால் வழங்கப்பட்ட பாதுகாப்புதான் 'Z' plus பிரிவு பாதுகாப்பு என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையிலே பேசுகின்றபோது, மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ராஜ கண்ணப்பன் அவர்கள் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களானது, அவர் இப்போது தலைமையேற்றிருக்கின்ற கட்சியின் ஆட்சியில்தான் புத்துயிர் பெற்றிருப்பதாகக் கூறினார். நான் புள்ளிவிவரத்தோடு ஒன்றை உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கையிலே இருப்பது 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை. இந்த அறிக்கையை அன்றைக்கு இந்த மாமன்றத்திற்கு வழங்கியவர், தற்போது முதலமைச்சராக உள்ளவர். அந்த அறிக்கையின் 16-வது பக்கத்திலே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். என்னவென்றால், 2001-2002 ஆம் ஆண்டு இடைக்கால நிதி நிலை அறிக்கையில், பக்கம் 17-ல், பத்தி 61-ல், மொத்தமாக அன்றையதினம் இருந்த சுய உதவிக் குழுக்களினுடைய எண்ணிக்கை 58,391 என்றும், அதனுடைய சேமிப்புத் தொகை 64 கோடி ரூபாய் என்றும், அந்தச் சுய உதவிக் குழுக்கள் வங்கிகள்மூலமாகப் பெற்றிருக்கின்ற கடன் தொகை, 131 கோடியே 12 இலட்சம் ரூபாய் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையினால், இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களினுடைய எண்ணிக்கை 3,15,724 என்றவகையிலே உயர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குழுக்களிலுள்ள உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 50,37,832. அந்த அளவிற்குப் பெண் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களாக இன்றைக்கு ஆல்போல் பெருத்து, அருகுபோல் தழைத்து, பலம்வாய்ந்த குழுக்களாக மாறியிருக்கின்றன. இங்கே வங்கியினுடைய சேமிப்புக் கணக்கையும் கோடிட்டுக் காட்டவேண்டும். உங்கள் ஆட்சியிலே இருந்த கணக்கு வெறும் 64 கோடி ரூபாய். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இருந்த சேமிப்புக் கணக்கு 1,037 கோடியே 69 இலட்சத்து



41 ஆயிரம் ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஆட்சியிலே கடனாக வங்கிகள்மூலமாகப் பெற்ற தொகை 131 கோடியே 12 இலட்சம் ரூபாய். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வங்கியிலேயிருந்து கடனாக மகளிர் சுய உதவிக் குழுவினர் பெற்ற தொகை 1,763 கோடியே 64 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த நிதிநிலை அறிக்கையிலே 42-வது பக்கத்திலே, பத்தி எண் 108-லே, நீங்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறீர்கள். 5 இலட்சம் மகளிர்கள் பயன்பெறும்வகையில், 25 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களை நாங்கள் உருவாக்குவோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். உங்களுடைய கணக்குப்படி பார்த்தால், அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்தபோது, ஆண்டு ஒன்றிற்குச் சராசரியாக 52 ஆயிரம் குழுக்களை உருவாக்கினார். அதன்வாயிலாக, ஆண்டு ஒன்றிற்கு 10 இலட்சத்து 10 ஆயிரம் மகளிரைப் புதிதாக சுய உதவிக் குழுவிலே பெண்களைச் சேர்த்தார்கள். ஆனால், நீங்கள் இப்போது எடுத்திருக்கின்ற நடவடிக்கையின் வாயிலாக, ஒட்டுமொத்தமாக இந்த 5 ஆண்டுகளில் இதே சராசரி விகிதத்தைக் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும். எங்கள் அம்மா அவர்கள் தொட்ட இலக்கில் 50 சதவிகிதத்தைக்கூட நீங்கள் தொடமுடியாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுய உதவிக் குழுக்களுக்கு, கடந்த 4 மாதத்திற்கு முன்னால் நேரு விளையாட்டு அரங்கத்திலே பரிசளிப்பு விழா என்று ஒன்று நடந்தது. அதிலே இந்தச் சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதியாக, ரூபாய் 50 கோடியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கினார்கள். அதிலே சென்னைக்கு, 1,000 குழுக்களுக்கு ரூபாய் 10 ஆயிரம் வீதம் ஒதுக்கினார். அந்தக் குழுக்களைத் தேர்வு செய்து, அந்தக் குழுக்களுக்குண்டான காசோலையை வழங்குகின்ற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டவுடன், தேர்தல் அறிவித்ததால் அந்தப் பணம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, இன்றைக்கு 76 நாட்கள் ஆகியும், இந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் ஒருவருக்குக்கூட அந்தச் சுழல் நிதித் தொகை வழங்கப்படவில்லை (குறுக்கீடு) என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரியாமல் பேசக்கூடாது. கடந்த 2 நாட்களுக்கு முன்பாக, நம்முடைய திருவொற்றியூர் நகராட்சிப் பகுதியிலே, 393 சுய உதவிக் குழுக்களுக்கு ஒவ்வொரு குழுவிற்கும் 30 ஆயிரம் ரூபாய்வீதம் வழங்கப்பட்டிருக்கிறது. வழங்கப்பட்ட நிதியினை, இன்றைக்குத் தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தமிழக மக்கள்மீது அக்கறை கொண்ட தலைவர், குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் பல சலுகைகளை அள்ளித்தந்து கொண்டிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவுபடி வழங்கினோம் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*(முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுயநிதிக் குழுக்களுக்குக் கொடுத்த கடன்களைப்பற்றியெல்லாம் சொன்னார். அதுகூட கலைஞர் அளித்த உத்தரவின்பேரில், மத்திய அமைச்சர்கள், மத்திய உதவி நிதியிலேருந்து கொடுத்த கடன்தானே தவிர, மாநில அரசாங்கம் எவ்வளவு நிதி கொடுத்திருக்கிறது? 15,000 ரூபாய் சுழல் நிதிகூட மத்திய அரசாங்கம் கொடுத்ததுதான். மாநில அரசாங்கத்தினுடைய பங்கு எவ்வளவு என்பதையும் அவர் சொன்னால் சரியாக இருக்கும். மத்திய அரசாங்கம் கொடுத்ததையெல்லாம் கணக்குக் காட்டி, மாநில அரசாங்கம் ஏமாற்றினார்களேதவிர, இவர்களாக ஒதுக்கிய தொகை மிகமிகக் குறைவு என்பதுதான் உண்மை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** குறுக்கீடு நேரத்தை அருள்கூர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள் குறித்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. இராமசாமி, உட்காருங்கள். Point of order இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*



**திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் கூறுகின்றபோது நான் அளித்த விளக்கம், நான் சொன்னது. சென்னை மாநகரத்தில் இருக்கின்ற சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரையில் சுழல் நிதியிலிருந்து ஒருவருக்குக்கூட பணம் வழங்கவில்லை என்றுதான் நான் குறிப்பிட்டேன். என்ன பேசுகிறோம் என்றுகூட கவனிக்காமல் ஏதோ தெரிந்த ஒன்றைப் பதிலாகக் கூறுவது ஏற்புடையதாக இருக்காது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. இராமசாமி, உட்காருங்கள். Point of order எல்லாம் ஒன்றும் இல்லை. அனுமதியில்லை. உட்காருங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** பெண் குழந்தைகளுக்காக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், ஒரு மிகப் பெரிய திட்டத்தைக் கொண்டு வந்தார். அதாவது பெண் கருக் கொலை மற்றும் பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காகவும், தொட்டில் குழந்தை திட்டத்தை உறுதிபடுத்துவதற்காகவும் பெண்களின் வாழ்க்கையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்று ஒன்றைக் கொண்டு வந்தார். அந்தத் திட்டத்திற்குக்கூட ரூபாய் 75 கோடி அளவிலே நிதியையும் ஒதுக்கி இருந்தார். அந்தத் திட்டத்தின்வாயிலாக, பல்லாயிரம் பெண் குழந்தைகளுக்கு அவர்களைப் பெற்ற தாய்மார்களால் வைப்பு நிதி கோரப்பட்டு, வைப்பு நிதி திட்டத்தில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கிற... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. இராமசாமி உட்காருங்கள். Point of order எல்லாம் இல்லை. உட்காருங்கள். அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்தத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கிற பலன், ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அவர்களுக்கு... *(குறுக்கீடு)*

**திரு. தி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, சொல்லுங்கள், என்ன? சொல்லுங்கள்.*

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் குழுக்கள் சம்பந்தமாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகைதந்து, மாவட்ட அதிகாரிகளோடு ஆய்வு செய்தார்கள். அப்போது மகளிர் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தமாக, அந்தக் குழுக்களை நிருவகிக்கக்கூடிய P.O. மற்றும் அதிகாரிகளிடம் இந்தக் குழுக்கள் சம்பந்தமான விவரங்கள் கேட்கும்போது, இருக்கிற குழுக்களில் 70 சதவிகிதம் மகளிர் குழுக்கள் போலியானவை; ஒரு குழுவில் இருக்கின்ற உறுப்பினரே, மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப அடுத்த குழுக்களில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை, அதிகாரிகளே, அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நேரடியாக ஒத்துக்கொண்டார்கள் என்ற விவரத்தை இந்த நேரத்தில் நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எப்படி இருக்கிறது என்றால்...(குறுக்கீடு) இது எப்படி இருக்கிறது என்றால்...(குறுக்கீடுகள்) I am not yielding. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) உட்காருங்கள். என்ன? என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், என்ன சொல்லப்போகிறீர்கள்?

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், ஒரு வரியில் முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இங்கே இருக்கின்ற பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, தங்களுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு என்ன உரிமை இருக்கிறதோ, அதே உரிமை எங்களுக்கும் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வதுதான் ஜனநாயகத்தின் ஆரம்பப் பாடம். அந்த ஆரம்பப் பாடத்தை நம்முடைய நண்பர்கள் படித்துக் கொள்ள வேண்டும். சுய உதவிக் குழுக்களைப் பொறுத்து வாதத்திற்கு வந்தது. மத்திய அரசினுடைய நிதி எவ்வளவு என்பதை மாண்புமிகு நம்முடைய உயர் கல்வி அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதுசம்பந்தமாக ஒரு கருத்தைப் பதிவு



செய்வது பொருத்தம் என்று எண்ணினேன். பத்து தினங்களுக்கு முன்பு, கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியிலே, சுய உதவிக் குழுக்கள் எப்படிச் செயல்பட்டன என்பதை 'இந்து' பத்திரிகையிலே ஒரு பெரிய செய்தியாக வெளியிட்டிருந்தார்கள். (குறுக்கீடுகள்) மத்திய அரசாங்கத்தினுடைய உதவியைக் கடனாகப் பெற்று... (குறுக்கீடுகள்)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். அமைதியாக இருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், அல்லவா? உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பதிவுசெய்ய வேண்டும். அதாவது, micro... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பத்திரிகையிலே போட்டிருந்ததைத்தானே சொல்கிறார்? உட்காருங்கள். வேறு என்ன சொல்லிவிட்டார் இப்பொழுது? It is a known fact. உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** Micro credit என்கிற பெயரிலே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லிவிட்டீர்கள் அல்லவா? உட்காருங்கள், திரு. பீட்டர்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பதிவுசெய்து விடுகிறேன். I have got liberty. நான் சொல்வதைத் தடுக்கிறீர்களே! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பத்திரிகையிலே போட்ட செய்தியைச் சொல்கிறார், அவ்வளவுதானே? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் சொல்வதற்கு அனுமதி வேண்டுமா? வேண்டாமா? நீங்கள்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர், நீங்கள் ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள். சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டு, முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** Micro credit என்கிற பெயரிலே, அரசாங்கத்தினுடைய, மத்திய அரசினுடைய நிதியைக் குறைந்த வட்டியிலே சில குழுக்கள் பெற்று, கூடுதல் வட்டிக்கு மட்டுமே அதைச் சுழற்சி செய்து, அதிக வட்டி வசூலிப்பதாகச் சில சுய உதவிக் குழுக்கள்மீது பகிரங்கமாக மத்திய அரசாங்கமே குற்றஞ்சாட்டியுள்ளது. எனவே, உங்களுக்கு வேண்டிய சில குழுக்களை வைத்துக்கொண்டு, நீங்கள் வட்டிக் கடைகளாக நடத்தினீர்கள் என்பதுதான் உண்மையேயொழிய, உண்மையிலேயே ஏழையெளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய சுய உதவிக் குழுக்களாக அவை நடக்கவில்லை என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. சேகர்பாபு. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு, இங்கு தவறான தகவலை சபைக்குத் தந்துகொண்டிருக்கின்றார்கள். ஆதாரத்தைக் கொடுத்து விட்டுத்தான், சட்டப் பேரவைத் தலைவருக்குக் கொடுத்துவிட்டுத்தான், அவர் இந்தமாதிரிக் குற்றச்சாட்டுக்களைச் சபையில் எழுப்ப முடியும். அதற்கு மாறாக, நேற்றும் இதே நடைமுறையைக் கடைப்பிடித்தார். இன்றும் அதையே தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றார். இது முறையான செயல்தானா என்பதனைப் பேரவைத் தலைவர்மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கோபம் வருவதாகச் சொன்னதை, நாங்கள் பெரிய பொருட்டாகக் கருதவில்லை. ஏனென்றால், இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தஅளவில், அவர்கள், இன்றைக்குப் பெண் இனப் பேரொளியாகக் கருதிக் கொண்டிருப்பது, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தவறு செய்தார்கள் என்று, மகளிர் சுய உதவிக்



குழுவைச் சார்ந்த பெண்கள்மீது, இப்படி ஒரு அபாண்டக் குற்றச்சாட்டைக் கூறுவது, மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதை இந்த அவையிலே நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மத்திய அரசு நிதி வழங்கியதாக, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசு எவ்வளவு நிதி வழங்குகிறதோ, அதற்கு இணையாக மாநில அரசும் அதற்குண்டான நிதியை வழங்குகிறது. (குறுக்கீடு) இதற்குச் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் இருக்கிறார். எழுந்து பதில் சொல்லட்டும். நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசாக இருந்தாலும், சுய உதவிக் குழுக்களுக்கு, மத்திய அரசாங்கம் ஒதுக்குகின்ற நிதிக்கு இணையாக ஒதுக்குவதில்லை. மத்திய அரசாங்கம் 75 சதவிகிதம் ஒதுக்குகிறது. மாநில அரசாங்கம் 25 சதவிகிதம் மட்டும்தான் ஒதுக்குகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே. கடன் வழங்குவதிலே மாநில அரசாங்கத்தின் பங்கு கிடையாது. உறுப்பினர் சொன்னதுகூட, சுழல் நிதியிலேதான் பங்கே தவிர, கடன் வழங்குவதிலே முழுக்க முழுக்க மத்திய அரசாங்கத்தினுடைய வங்கிகள்தான் வழங்குகின்றன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மத்திய அரசு கிடையாது, மாநில அரசுதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கின்றார்கள். கடன் வழங்குவது முழுக்க முழுக்க, கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் தான் வழங்கப்படுகின்றன. மத்திய அரசினுடைய நிதி கிடையாது.

[2006 ஜூலை 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, உடனே பேசுங்கள். பேசி சீக்கிரம் முடியுங்கள். இரண்டு நிமிடங்களிலே பேசி முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) You cannot compel me. It is my verdict. இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள், சீக்கிரம். (குறுக்கீடுகள்) முடியுங்கள், சீக்கிரம்.

*பிற்பகல் 12–05*

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்கள் அன்பாகக் கூறினால் நன்றாக இருக்கும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள் பாதுகாப்புத் திட்டம் என்ற ஓர் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற ஓர் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்திற்கு 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ரூ. 75 கோடியையும் ஒதுக்கீடு செய்தார். அந்தத் திட்டத்தின் சாராம்சம் என்னவென்றால், ஒரு குடும்பத்திலே ஒரு பெண் குழந்தை பிறந்தால், அவர்களுக்கு வைப்பு நிதி உருவாக்கப்படும். அந்தக் குழந்தைக்கு ரூ. 300/– மாதந்தோறும் கல்விக் கட்டணம் வழங்கப்படும். அந்தக் குழந்தைக்குத் திருமணக் காலத்திலே ரூ. 80,000/–, அந்தக் குழந்தையினுடைய, அந்தப் பெண்ணினுடைய திருமணத்திற்காக வைப்பு நிதியிலிருந்து பெற்றுத் தரப்படும். இரண்டு குழந்தைகள் இருந்தால் அதைப் பிரித்து 40,000/–, 40,000/– என்று வழங்கப்படும். ஆனால் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்தத் திட்டத்தைப்பற்றி, பெண்களின் காவலர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை என்பதை இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2006 ஜூலை 25]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் இந்த அரசாங்கத்தால் கைவிடப்பட்டதுபோல இங்கே பேசுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே அந்தச் செய்தி தனியாக இடம்பெறவில்லையே தவிர, நிதிநிலையில், பெண் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்ந்து செயல்படுத்தப்படுவதற்கு, இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தத் திட்டம் ஏற்கெனவே உள்ள ஆட்சியினால் கொண்டுவரப்பட்ட காரணத்தால், இந்த அரசு கைவிடவில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு. சீக்கிரம் முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நான்கு நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேன். எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த — பெண்குலத்தின் பெருநாயகி, பெண்ணினப் பேரொளி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் — திட்டத்தை விட்டுவிட்டு, நீங்கள் ஆட்சி நடத்தமுடியாது என்பதற்கு இது ஒரு சான்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இந்தக் கூக்குரல், கூப்பாடு எல்லாவற்றையும் சந்தித்துவிட்டுதான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 2003 ஆம் ஆண்டு ஒரு தொலைநோக்குத் திட்டம், சென்னைப் பெருநகரத்திற்கு உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் என்று பெயரிட்டார்கள். அது, பத்து ஆண்டுக் கால தொடர் திட்டம். 2003 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டுவரை அந்தத் திட்டத்தின் வாயிலாக 6,000 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினால் விளைந்த பலன், Green City என்று அழைக்கப்பட்டிருந்த பெங்களூரை, இன்றைக்குச் சென்னை மாநகரம் பின்னுக்குத் தள்ளியிருக்கின்றது. காரணம், காய்ந்துகிடந்த பூங்காக்கள் இன்றைக்குப் பூத்துக் குலுங்குகின்ற பூஞ்சோலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முயற்சியால். (மேசையைத் தட்டும் ஒலி) தரமான

சாலைகள், சாலையின் நடுவில் தடுப்புச் சுவரிலே அருமையான பூங்காக்கள், உயர்கோபுர மின்விளக்குகள், தடையில்லா மின்சாரம், பெருவெள்ளம் ஏற்படுகின்ற போது வழிந்தோடுவதற்கு மழைநீர்க் கால்வாய்கள் இப்படியென்று அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, பத்தாண்டுத் திட்டம் என்று பெயரிட்டார். இந்தப் பத்தாண்டுத் திட்டம் நிறைவுறுகின்ற வேளையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நல்ல கருத்து. ஒன்றும் controversy-யே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30 நிமிடம் ஆகிறது. உங்கள் நேரம் 30 நிமிடம். You have taken 30 minutes.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இருக்கிறதைச் சொல்கிறேன். ஆறு நிமிடம்தான் பேசியிருக்கிறேன். அருள்கூர்ந்து பேரவைத் தலைவர் ஒரு பத்து நிமிடமாவது அனுமதி தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வரியில் முடியுங்கள், சீக்கிரம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பட்ஜெட் சம்பந்தப்பட்டதுதான். இந்தப் பத்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், சென்னை மாநகரம், இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கின்ற மாநகரங்களிலேயே எழிலார்ந்த மாநகரம் என்ற பெருமை, இந்த மாநகரத்திற்குக் கிடைக்கின்ற ஒரு திட்டத்தை அறிவித்தார் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்தத் திட்டத்தினுடைய தொடர் செயல்பாடுகள் தொடருமா, இல்லையா என்பது இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றபோது, mini பேருந்துகள் இயக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கின்றார். இந்த mini பேருந்துகள் தனியாரால் இயக்கப்படுமா அல்லது அரசே பேருந்துகளை வாங்கி இயக்குமா என்ற விளக்கத்தினைக் கூறவில்லை. அந்த விளக்கத்தையும் நான் பேசி முடித்த பிறகு, மாண்புமிகு போக்குவரத்துத் துறைக்கென்று உள்ள அமைச்சர் அவர்கள் அளித்தால் நன்றாக இருக்கும்.



பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, mini பேருந்து திட்டம் தொடரப்படுமா, அது தனியார்களுக்குத் தரப்படுமா என்று இங்கே கேள்வி கேட்டிருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு, நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் அளித்த திட்டம், 7,500 பேருந்துகள் தமிழ்நாட்டில் விடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. 3,900 பேருந்துகள் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற பேருந்துகள், ஏற்கெனவே வழங்கப்பட்ட அதேமுறையில், 4 கிலோ மீட்டர் service area; 16 கிலோ மீட்டர் unserved area; அந்தத் திட்டத்தின்கீழ் பேருந்துகள் வழங்கப்படும். அதேபோல, அந்தப் பேருந்துகள் எல்லாம் சட்டமன்றத்திலே சொல்லி முடிந்து, சட்டமன்றம் முடிவடைவதற்கு உள்ளாகவே அந்தப் பணி தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினரிடம் பேசச் சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கம்யூனிஸ்ட் கட்சி இயக்க நண்பர்கள் பார்த்துக்கொள்வார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடியுங்கள் Sir. (குறுக்கீடு) உறுப்பினர், ஒரு நிமிடத்தில் முடியுங்கள். அடுத்த உறுப்பினரைப் பேசக் கூப்பிடப் போகிறேன். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நல்ல subject. நான் ஒன்றும் controvercy subject-க்குப் போகவில்லை. இருப்பதிலே ஒரு சின்ன clarification கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் கருத்தைச் சொல்லி முடியுங்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, 12–வது நிதிக் குழுவிலே, குடிசை மாற்று மேம்பாடுகளுக்காக ரூ. 250 கோடி ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் ஏற்கெனவே, 100 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று முடிவடைகின்ற தருவாயிலே இருக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையிலே, ஏன் மீண்டும் 250 கோடி ரூபாயைக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கேள்வியாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகிற திட்டம். இந்தத் திட்டத்திலே நீங்கள் தேர்தல் அறிக்கையிலே கூறியிருப்பது அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும்; மகளிர் மனம் குளிர, மகளிர் பொது அறிவுபெற, இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்றும் கூறியிருக்கிறீர்கள். இதில் எனக்கு இருக்கிற சில ஐயப்பாடுகள். தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத வீடுகள் கணக்கிடப்பட்டு இருக்கின்றனவா; அப்படி கணக்கு எடுக்கப்பட்டிருந்தால் எத்தனைப் பயனாளிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட இருக்கின்றன; அடுத்து, கருப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள்கூட ஒருசில ஏழை நடுத்தர மக்கள் வீட்டிலே இருக்கும்; அவர்களுக்கும் இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுமா; வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பெறுகின்ற பயனாளிகளுக்கு என்ன அளவுகோலை நீங்கள் நிர்ணயிக்கப்போகிறீர்கள் என்பதை இங்கே நான் கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன். அப்படி அனைத்து மக்களுக்கும் இந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படவில்லையென்றால், இது ஒரு ** திட்டம் என்று நான் கூறுவதில் எந்தத் தவறும் இல்லை என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) ** என்கின்ற வார்த்தை நீக்கப்படுகிறது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீக்குங்கள் பரவாயில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வண்ணத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



தொலைக்காட்சிப் பெட்டிகளைப்பற்றி இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் சொன்னார். முதல் கட்டமாக, அண்ணா, பெரியார் அவர்களுடைய பிறந்த நாளிலே 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார். 750 கோடி ரூபாய் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேடிக்கை என்னவென்றால், இதை எப்படி வழங்குவது, யார், யாருக்கு வழங்குவது என்பதைப் பற்றியெல்லாம் விவாதிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைத்தபோது, அ.இ.அ.தி.மு.க. அதைப் புறக்கணித்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அதைப்பற்றிக் கேள்வி கேட்பது எந்த நியாயமும் இல்லை. வேண்டுமானால், நாங்கள் அப்போது வரவில்லை; மீண்டும் வந்து அந்தக் குழுவிலே கலந்துகொள்கிறோம் என்று சொல்லிவிட்டு, இந்தப் பிரச்சினை பற்றிப் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், குறுக்கீடு நீங்கலாக, நீங்கள் 32 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். நான் அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லப் போகிறேன். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இன்றைக்கு விவசாயிகளுக்கு வழங்குவது போல நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால், நிதிநிலை அறிக்கையில் ஒரு அளவுகோலை நிர்ணயித்து இருக்கிறீர்கள். நிதிநிலை அறிக்கையில் நீங்கள் நிர்ணயித்து இருக்கிற அளவுகோல் என்னவென்றால், தறிக் கூடம் வைத்து சொந்தமாகத் தொழில் நடத்துபவர்களுக்கு, மாதத்திற்கு 50 யூனிட் என்று நிர்ணயித்து இருக்கிறீர்கள். விசைத்தறி நெசவாளர்களுக்குச் சொந்தமாக விசைத்தறி நெசவாளர் கூடம் வைத்து தொழில் நடத்துபவர்களுக்கு 250 யூனிட் மாதம் என்று நிர்ணயித்து இருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் தேர்தல் அறிக்கையிலே கூறியது நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் என்றுதான் கூறினீர்கள். ஆகவே, இதையும் ஒரு ** நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தேர்தல் அறிக்கையைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகின்றேன். சாதாரண கைத்தறி நெசவாளர்கள் இயந்திரங்களைப் பயன்படுத்தி நெசவுத் தொழில் செய்வதில்லை. அவர்கள் நெசவுத் தொழில் செய்கின்ற நேரத்தில் விளக்குகளைப் பயன்படுத்துகின்றார்கள். அப்படி விளக்குகளைப் பயன்படுத்தி நெசவுத் தொழில் செய்வதற்கு, ஒரு மாதத்திற்கு 50 யூனிட்டுகளுக்குமேல் ஆகாது. இதைக் கணக்கிட்டுத்தான் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட்டுகள் என்று அறிவித்திருக்கிறோமே தவிர, ஏதோ இவர்கள் ** என்று சொல்வது போல் எந்த ** இதிலே இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குணசேகரன். (குறுக்கீடு) அப்படியென்றால் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரு நிமிடத்தில் முடியுங்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவில் அமைதி தவழுகின்ற மாநிலமாக்கவும், பொருளாதாரத்தில் மக்கள் நிலையை உயர்த்துவதற்கும், கிராமப்புற வளர்ச்சிக்கும், படித்து வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களின் வாழ்க்கை உத்தரவாதத்திற்கும், சமுதாயச் சீர்திருத்தத்திற்கும் எந்தவிதமான உருப்படியான திட்டமும் இல்லாத அறிக்கைதான் இந்த நிதிநிலை அறிக்கை. இந்த நிதிநிலை அறிக்கையைக் காணுகின்றபோது பல கட்சிகளின் துணையோடு ஆட்சியை நடத்த வேண்டிய சூழலில் இருக்கின்ற இந்த minority அரசானது (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கட்சிகளைத் திருப்திப்படுத்துகின்றவகையில், இந்த பட்ஜெட்டைத் தயார் செய்திருக்கின்றது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் உரையை முடிக்க வேண்டும். இல்லை, இல்லை. நான் உரையை முடித்து விடுகிறேன். ஐந்து நிமிடங்கள் கொடுங்கள். பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றவர், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீற்றிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சில

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



கட்சிகளின் ஆதரவைப் பெற்றவர், இன்றைக்கு இந்தத் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இந்த அவையிலே வீற்றிருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், இங்கு உரையாற்றுகின்றபோது, சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதியை இந்த அரசு வழங்கவில்லை என்ற ஒரு தவறான கருத்தை இங்கே சொல்லியிருக்கின்றார். அது உண்மையல்ல. 2006–2007 ஆம் ஆண்டிற்கு சுய உதவிக் குழுக்களுக்கு மத்திய அரசு ரூ. 52 கோடியும், மாநில அரசு ரூ. 17.34 கோடியும் ஒதுக்கீடு செய்திருக்கின்றன. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்த இரண்டு மாத குறுகிய காலத்திற்குள்ளேயே கலைஞர் தலைமையிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த அரசால், சுமார் 13½ கோடி ரூபாய் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரத்துடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் பேசுகின்றபோது, அவர்களுடைய அரசு இருந்த காலத்தில், காவல் துறைக்கு அதிக நிதி ஒதுக்கினார்கள் என்று குறிப்பிட்டார். அதற்கு எங்கள் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, (குறுக்கீடு) ஒரே நிமிடம். அதற்கு எங்கள் தலைவர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியபோது, (குறுக்கீடு) மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாக உறுப்பினர் சொன்னார். நான் இங்கே ஒரு கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், கடந்த ஆட்சிக் காலத்தில், சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சுட்டுக் கொன்றோம் என்ற போர்வையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அவரைக் குற்றம் சொல்வதற்கு நீங்கள் allow பண்ணுகிறீர்களா?... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் சொல்வதற்கு அவரை allow பண்ணுங்கள். ஒரே நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே நான் பேசுவதற்கும், நான் சட்டமன்ற உறுப்பினராக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** தேர்வு பெறுவதற்கும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உட்காரவில்லை என்றால்... (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில்.

**திரு. சு. குணசேகரன்:** நான் இந்த அவையிலே பேசுவதற்கும் வாய்ப்பை உருவாக்கிய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மூன்று தடவை சொல்லியாகிவிட்டது. நான் மூன்று தடவை மணியடித்து, மூன்று தடவை சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சு. குணசேகரன்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று தடவை மணியடித்து, மூன்று தடவை சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும் நீங்கள் பேச்சை நிறுத்தவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. சு. குணசேகரன்:** அகில இந்தியப் பொதுச் செயலாளர், அருமைத் தலைவர் (குறுக்கீடுகள்) டி. ராஜா அவர்களுக்கும், தமிழகத்திலே தன்னலம் கருதாத தலைவராக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்ற (குறுக்கீடுகள்) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தானைத் தலைவர், அருமைத் தலைவர் ஆர். நல்லக்கண்ணு



அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளர் சொல்லின் செல்வர் (குறுக்கீடுகள்) அருமைத் தலைவர் தா. பாண்டியன் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநில உதவிச் செயலாளர் சி. மகேந்திரன் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி, வஞ்சகர்களால் சூழ்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு, துரோகிகளால் சூழப்பட்டிருந்த நேரத்தில், தோழமைக் கட்சிதானே என்று சற்றும் உதாசீனப்படுத்தாமல்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள்.

பிற்பகல் 12-20

**திரு. சு. குணசேகரன்:** என்னுடைய வெற்றியைத் தன்னுடைய கட்சி வெற்றியாகக் கருதி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். உட்காருங்கள். நான் மூன்று முறை warning கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் முதலில். திரு. குணசேகரன், பேசுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அல்லும் பகலும் பலமுறை பல வியூகங்களை வகுத்து, என்னுடைய தொகுதி வெற்றிக்கு வழிகாட்டியாக அமைந்து, என்னுடைய வெற்றிக்கு அஸ்திவாரத்தையும், வெற்றியின் கலசத்தையும் பெற்றுத் தந்த முத்தமிழ் அறிஞர், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் இந்த அவையிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, இன்றைக்கு இளம் புயலாய் தேர்தல் களத்திலே எதிரிகளைச் சதுராடி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இல்லையென்றால், நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** என்னுடைய தொகுதியிலே 4 இடங்களில் உரையாற்றி வெற்றிக்குச் சூரிய ஒளி இட்டுக் காட்டிய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். Time தர முடியாது. உட்காருங்கள். உட்காருங்கள். அப்புறம் நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடு) முடியாது. நான் ஏற்கெனவே 3 warning கொடுத்துவிட்டேன். Time தர முடியாது. உட்காருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போல, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டுக்கொண்டிருக்கின்ற இந்தியாவினுடைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சாதனை மன்னனாகச் செயல்படுகின்ற நமது மாண்புமிகு மத்தியத் தகவல் தொழில்நுட்பத் துறை *(குறுக்கீடு)* அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும்... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்க வேண்டுமா உங்கள் மேலே? நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தலுக்கு முன்பும், தேர்தலுக்குப் பின்பும் இன்றைக்கும் எங்களுக்கெல்லாம் சிவகங்கை மாவட்டத்திலே ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு வழிகாட்டியாய், தளபதியாய் விளங்கிக் கொண்டிருக்கிற இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, என்னுடைய வெற்றிக்கு அரும்பாடுபட்ட இளையான்குடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தமிழகத் தலைவராய் மத்திய நிதி அமைச்சராய் இருக்கிற மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், அவருடைய அன்பு மகன் திரு. கார்த்திக் சிதம்பரம் அவர்களுக்கும் என்னுடைய வெற்றியை உறுதிப்படுத்திய என்னுடைய தொகுதியினுடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்களுக்கும், வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற 11 நாட்களுக்குள்ளாக— சிவகங்கை மாவட்டத்திலே இருக்கிற மத்தியக் கூட்டுறவு வங்கி, கடந்த ஆட்சியிலே கவனிக்கப்படாமல் 11(1)(a) என்ற சட்டப் பிரிவின் அடிப்படையில் முடமாக்கப்பட்டு, அங்கே இருக்கிற வைப்பீட்டாளர்களுக்கு மீண்டும் deposit தொகையைக்கூட எடுக்க முடியாத ஒரு சூழல் உருவாகி இருந்த நேரத்தில், ஆட்சிப் பொறுப்பேற்ற 11 தினங்களிலே, அந்த நிலைகளையெல்லாம் மாற்றி, ஒரு முழுமையான



செயல்பாட்டிற்கு, சிவகங்கை மத்தியக் கூட்டுறவு வங்கியைக் கொண்டுவருவதற்கு ஆணையிட்ட தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஐந்தாவது முறையாக, ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எல்லா முனைகளிலும் இருக்கிற மக்களைப் பிரதிபலிக்கிற ஒரு பல்நோக்குத் திட்டத்தின் அடிப்படையில், கடந்த ஆட்சியில் தமிழகத்தினுடைய அடிப்படையே சிதைக்கப்பட்டிருந்த நிலையில், அந்தச் சிதைவுகளிலிருந்து தமிழகத்தை மீட்பதற்காக ஒரு வலுவான அடித்தளம் இட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார். அந்த நிதிநிலை அறிக்கையை நானும், என் தொகுதி மக்களின் சார்பிலும் முழுமனதோடு வரவேற்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் வறட்சியாலும், வெள்ளத்தாலும், சுனாமியாலும், விவசாயிகளினுடைய தற்கொலையாலும் பாதிக்கப்பட்டிருந்த நேரத்திலும்கூட, அதை விவாதிக்க மறுத்து, ஜனநாயக மாண்புகள் சிதைக்கப்பட்டு, பயங்கர சட்டங்களால், தலைவர்களுக்கும், மக்களுக்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கிய நேரத்தில், அலாவுதீனின் அற்புத விளக்கால் அல்ல; மக்களுடைய தெளிவான முடிவால், ஆட்சி மாற்றத்தால் இன்றைக்குத் தமிழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஜனநாயக மாண்புகளை மீட்டெடுத்திருக்கிறார்.

*பிற்பகல் 12-25*

வேலை நியமனத் தடைச் சட்டம் என்பது, கடந்த ஆட்சியில் மக்களுக்காக மட்டுமல்ல, இளைஞர்களுக்காக மட்டுமல்ல, அமைச்சர்களுக்காகவும்கூட அது இருந்தது என்பதை நான் இந்த அவையிலே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

சுதந்திரமாகச் சிந்தித்து, மக்களுக்கு விரைந்து செயலாற்றுகிற ஒரு அமைச்சரவை இல்லாத நேரத்தில், இன்றைக்குக் கலைஞருடைய அமைச்சரவை என்பது, இங்கே இருக்கிற அமைச்சர் பெருமக்கள் எல்லாம், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 50 தினங்களிலேயே பல மாவட்டங்களிலே பல ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, சட்டமன்ற

உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து, பல்வேறுவிதமான நல்ல முடிவுகளை எடுக்கிற ஒரு ஜனநாயகச் சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் சிலரின் தோட்டத்துக் கதவுகளைக்கூட தொட்டாலே மந்திரி பதவி போய்விடும் என்ற அபாயத்தில் இருந்த நிலைமைகளை மாற்றி, இன்றைக்குக் காலை, மாலை, இரவு, எந்த நேரமாக இருந்தாலும், வீடாக இருந்தாலும், அண்ணா அறிவாலயமாக இருந்தாலும், சட்டமன்ற வளாகமாக இருந்தாலும், எந்த இடத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களும், சாதாரண மக்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் சந்திக்கிற ஒரு வாய்ப்பை தமிழகத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) 84 வயதிலும் இளைஞரைப் போல சுறுசுறுப்பாக ஆட்சிப் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிற கலைஞர் அவர்கள், ஒரு ஜனநாயக மாண்புகளை மீண்டும் உருவாக்கி இருக்கிறார்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளும், செயல் திட்டங்களும் உருவாகியிருக்கின்றன. இந்தியாவில், புதிய பொருளாதாரக் கொள்கையால், உலக வங்கி மற்றும் பன்னாட்டு கம்பெனிகளுடைய ஆதிக்கத்திற்குப் பின்னால், கடந்த 10 ஆண்டுக் காலமாக இந்திய விவசாயமே ஒரு கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிற சூழ்நிலையில், இந்திய அரசாங்கம் கவலை தெரிவித்திருக்கிற நேரத்தில், தமிழகத்தில் இருக்கிற 70 விழுக்காடு மக்கள், வேளாண் துறையைச் சார்ந்த மக்களாக இருக்கிற நிலையைக் கலைஞர் அவர்கள் அனுபவத்தால் புரிந்திருப்பதால், விவசாயிகளுக்கான அடிப்படையான திட்டங்களைத் தேர்தல் காலத்திலும், தேர்தலுக்குப் பின்னாலும் செயலாற்றுவதிலே முனைப்பு காட்டியிருக்கிறார். அந்த அடிப்படையில்தான், இன்றைக்கு எந்த ஒரு மாநிலத்திலும் அல்லது மைய அரசும் செய்யாத சாதனையாக 6,866 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி என்ற ஒரு மாபெரும் திட்டமும், அதேபோல கடன் வாங்குவதற்கான வட்டிக் குறைப்பும், அதேபோல கூட்டுறவு அமைப்புகளைப் பாதுகாப்பதற்காக தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களை அரசே பொறுப்பேற்று, அந்தக் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் திரும்பத் தருகிற ஒரு திட்டமும், உணவு உற்பத்தி, 9.5 இலட்சம் மெட்ரிக் டன் என நிர்ணயிக்கப்பட்டிருக்கிற செய்தியும், இன்றைக்குச் சிறப்பான செய்திகளாகும்.

அதேபோல, சிறு விவசாயிகளுக்கு உழவர் சந்தை திறப்பு, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பாதுகாக்க உலகத் தரம் வாய்ந்த சேகரிப்பு



மையங்கள், குளிர்விக்கும் சாதனங்கள், தரம் பிரிப்பு, பதப்படுத்துதல் மற்றும் மின்னணு ஏல முறை உள்ளிட்ட வணிக முனையங்கள்; அதைப்போல வெங்காயம், மாம்பழம், திராட்சை போன்ற அழுகுகிறப் பொருள்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்; தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்; தரிசு நிலத்திலே விளையும் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு போன்ற உற்பத்திப் பொருள்களுக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள்; விவசாயத் தொழிலாளிகளுக்கான நல வாரிய அமைப்பு; கால்நடை வளர்ப்புக்கான ஊக்குவிப்பு; பாசனத்திற்கு 3,900 கோடி ரூபாயில் ஒரு மிகப் பெரிய பாசனத்தைச் சீரமைக்கிற திட்டங்கள்; ஆறுகளைப் பாதுகாக்கிற திட்டங்கள்; ஆலைக் கழிவுகளிலிருந்து ஆறுகளைப் பாதுகாக்கின்ற திட்டங்கள் என்று விவசாயம் சார்ந்த பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்.

அதேபோல, கடந்த ஆட்சிக் காலத்திலே, தமிழகத்தில் மட்டுமல்ல; அண்டை மாநிலங்களிலும் முதல்வர்களோடு முரண்பட்டு இருந்ததால் தீர்க்கப்பட வேண்டிய முல்லைப் பெரியாறு போன்ற பிரச்சினைகள் இப்போது அரசியல் பிரச்சினைகளாக உருமாறி, தமிழகத்திற்கு ஒரு தீராத தீங்கை உருவாக்கியிருக்கிற நேரத்தில், கலைஞர் அவர்கள், முல்லைப் பெரியாறு பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கிற ஒரு சுமுகமான நடவடிக்கையை உருவாக்கி இருக்கிறார்.

அதேபோல, இன்றைக்குப் பல்வேறு நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டே செல்லலாம். பம்பு செட்டுகளுக்குப் பணம் கட்டி மின்சார இணைப்புகளை வாங்கியிருந்த விவசாயிகளுக்கு, மின் கட்டணத்தை இரத்து செய்து இன்றைக்கு அனைத்துப் பகுதி விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத் திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் நிதிநிலை அறிக்கையில் ஒருசில திருத்தங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மின்சார இணைப்பு என்று வரும்போது, அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத் திட்டத்தைச் சிறப்பாக வழங்கி இருக்கிற கலைஞர் அரசு, சிவகங்கை மாவட்டத்திலும், மாநிலம் முழுவதும் விவசாயிகள் ஆழ்க்குழாய்க் கிணறுகள் மூலமாக விவசாயம் செய்வது என்பது பெருகியிருக்கிற சூழ்நிலையில், மின் இணைப்புக்காக 10, 15 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளது. எனவே, அதன்மீது தீவிரமான நடவடிக்கையை எடுத்து, பதிவு செய்த விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்குள்ளாவது மின் இணைப்பு வழங்குகிற நடவடிக்கையை உறுதிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, 25 ஆயிரம் ரூபாய் deposit செய்து, மின் இணைப்புப் பெறுகின்ற விவசாயிகளுக்கு estimate என்ற அடிப்படையில் மின்கம்பங்கள், மின்கம்பிகள் வேலை என்று ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய்வரை, அவர்கள் மீண்டும் பணம் கட்டுகிற சூழல் உருவாகியிருக்கிறது. அதை அடியோடு எடுத்து, அந்தச் செலவுகளை மின்துறையே ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழலையும் உருவாக்கவேண்டும்.

பிற்பகல் 12–30

அதைப்போல, கூட்டுறவுக் கடன் வாங்குகின்ற விவசாயிகளுக்கு 2% வட்டிக் குறைப்பு என்ற நல்ல நடவடிக்கை இருந்தாலும், தமிழ்நாடு விவசாயச் சங்கமும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற அடிப்படையில், ஒரு சதவிகிதத்தை அதிகரித்து, 3% வட்டிக் குறைப்பு என்ற ஒரு நடவடிக்கையை உருவாக்க வேண்டுமென்று இந்தச் சூழலிலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, இன்றைக்குக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி; கூட்டுறவுக் கடனை மீண்டும் விவசாயிகள் வாங்குவதற்கு, ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்ற நல்ல திட்டத்தை அறிவித்திருக்கின்ற அதேநேரத்தில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகையாக வைத்திருக்கின்றவர்களுடைய சாதாரண, நடுத்தர மக்களுடைய பணம் இன்னும் திரும்பக் கிடைக்காத ஒரு சூழல் உருவாகி இருக்கிறது. எனவே, அதைத் திருப்பித் தருவதற்கான ஒரு நடவடிக்கையாக, நிதி ஒதுக்கீடு செய்வது என்பது, இன்னும் சிறப்பாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

அதைப்போல, கூட்டுறவு அமைப்புகளைப் பலப்படுத்துவதற்காக ஜனநாயகப்பூர்வமான தேர்தலை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்தகாலத்தில் கூட்டுறவு அமைப்புகள் என்பது ஊழலால் நலிவடைந்திருந்தன. எனவே, அந்த ஊழலை ஒழிப்பதற்காக, கூட்டுறவு அமைப்புகளிலே வலுவான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, கூட்டுறவினுடைய பணம் வெளியேறாமல் அல்லது ஊழல் நடக்காமல் இருப்பதற்கான தடுப்பு நடவடிக்கையை எடுக்கிற நிலையை உருவாக்கவேண்டும்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தரிசு நிலம். ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் என்ற திட்டம் தமிழக அரசால் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் நடந்து



கொண்டிருக்கின்றன. அதேநேரத்தில், கடந்த ஆட்சியின்போது தரிசு நில மேம்பாடு என்ற அடிப்படையில் பணக்காரர்கள் அல்லது பினாமிகள் அந்த நிலங்களைக் கையகப்படுத்தி ஒரு நிலக் குவியலையே ஏற்படுத்துவதற்கான வழிவகை செய்யப்பட்டிருந்தது.

**HON. DEPUTY SPEAKER:** The House should be in order. Silence.

**திரு. சு. குணசேகரன்:** எனவே அப்படிப்பட்ட நிலைகளில் சாதாரண விவசாயத் தொழிலாளர்களுக்கும், நிலமற்றவர்களுக்கும் அந்த நிலங்களைப் பகிர்ந்தளிக்கின்ற திட்டத்தைக் கொண்டு வருவது சிறப்பு. 1991–95 ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது Maxworth போன்ற பல்வேறு அமைப்புகள், பினாமி அமைப்புகள் தமிழகத்திலே பல இடங்களில் பல இலட்சம் ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டு, அந்த நிலங்கள் இன்றைக்கும் யாருக்குச் சொந்தம் என்று தெரியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் கையகப்படுத்தி, ஏழைகளுக்குத் திரும்பவும் ஒப்படைக்கின்ற ஒரு சூழலை உருவாக்கவேண்டும்.

அதைப்போல, நகரங்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவுக்கு அரசு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதைப்போல, தென்னக நதிகள் இணைப்பு; அதற்கான முயற்சிகள் என்பதை வரவேற்கின்றோம். அதற்கு முதற்கட்டப் பணியாக, தமிழகத்திலே இருக்கின்ற எல்லா நதிகளையும் இணைக்கின்ற ஒரு திட்டத்தைக் கலைஞர் அரசு செயல்படுத்தினால், அது முன்னுதாரணமாக இருக்கும் என்ற கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, பொது விநியோகத் திட்டத்தின்கீழ், இன்றைக்கு ரேஷன் கார்டு ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. கடந்தகால ஆட்சியின்போது 'H' கார்டு, பச்சை கார்டு, வெள்ளை கார்டு, மஞ்சள் கார்டு என்று யாருக்கு எந்த கார்டு என்றே மக்களுக்குப் புரியவில்லை. சீனி வாங்கினால் மண்ணெண்ணெய் இல்லை, மண்ணெண்ணெய் என்றால் சீனி இல்லை. இப்படிப் பல குழப்பங்கள். அதோடு மொத்தமாக அச்சடிக்கப்பட்டு, கணவனை மாற்றி, மனைவியை மாற்றி, குடும்பத்தையே மாற்றி பல குழப்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்ற அந்த ரேஷன் கார்டு முறைகளைக்

களைந்தெறிந்து, முற்றிலுமாக ரேஷன் கார்டு — குடும்ப அட்டை — கிடைக்காத அந்த மக்களுக்கு ரேஷன் கார்டு கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். நியாயவிலைக் கடைகளில் இருக்கிற பல்வேறு குறைகளைப் போக்கி, பொது விநியோகத் திட்டத்தை ஒரு வலுவுள்ள திட்டமாக, மக்களுக்கு முழு பலனைக் கொண்டு செல்கின்ற திட்டமாக மாற்றுகிற நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

*பிற்பகல் 12–35*

அதேபோல, கல்வித் துறையில் இன்று பல்வேறுவிதமான நல்ல நடவடிக்கைகளை, ஓர் ஆரோக்கியமான சூழ்நிலைகளை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதேசமயத்தில், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனியாரிடம் நூற்றுக்கணக்கிலே ஒப்படைக்கப்பட்டு, கோடி கோடியாகக் கடந்த ஆட்சியிலே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிற சூழலைக் கண்டுபிடிக்க வேண்டும். அதைப்போல, இன்றைக்கு சாதாரண ஏழை, நடுத்தர மக்கள் ப்ளஸ் 2 படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்குப் போக வேண்டுமென்றால், ஒன்றரை இலட்ச ரூபாய் நன்கொடை வசூலிக்கிறார்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே என்ன point of order இருக்கிறது? (குறுக்கீடு) இல்லை, இல்லை, உறுப்பினர் (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். நான் சொல்கிறேன். Point of order–கும், point of clarification–கும் வித்தியாசம் சொல்லிவிட்டுப் பேசுங்களேன்! (குறுக்கீடு) Point of order என்றால் என்ன? இல்லை, இல்லை, நான் கேட்கிறேன். Point of order எப்போது? Point of clarification எப்பொழுது வரும்? இரண்டிற்கும் வித்தியாசம் சொல்லிவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நாங்கள் கேட்கலாம். விடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நான் சண்முகத்தைப் பேசச் சொல்கிறேன். விடுங்கள். நீங்கள் உட்காருங்கள். சண்முகத்தை நான் பேசவிடுகிறேன். சண்முகத்தைப் பேச விடுகிறேன். உட்காருங்கள். நான் கேள்வி கேட்டதற்கு அவர் பதில் சொல்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள். நான் பேசவிட்டுவிட்டேன், ஜெயக்குமார். ஜெயக்குமார், நான் பேசவிட்டிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் பேசவிட்டிருக்கிறேன்.



**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினரோ அல்லது சபையில் இருக்கின்ற அமைச்சர்களோ யாராவது சபைக்குத் தவறான தகவல்களைச் சொல்கின்றபோது அந்தத் தவறான தகவல்களைச் சுட்டிக்காட்டி அதைத் திருத்துவதற்காகக் கேட்கப்படுவதுதான் point of order. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** நான் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். தவறு இருந்தால் அவைத் துணைத் தலைவர் அவர்கள் அதைச் சுட்டிக்காட்டுங்கள். அதற்காக நான் சொல்லவில்லை. அது ஏதோ என்மீது தவறு கண்டுபிடிப்பதற்காக, (குறுக்கீடு) அவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். Clarification என்றால், point of clarification என்று, ஒரு அமைச்சர் அவர்களோ, உறுப்பினர் அவர்களோ தகவல்களைச் சொல்கின்றபோது, அந்தத் தகவல்கள் சரியாக இல்லை; அதை மீண்டும் விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று clarification கேட்க வேண்டும். நான் சொல்வது, இங்கே உறுப்பினர் அவர்கள், தனியார் ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலே கடந்த ஆட்சியிலே கோடிக்கணக்கான பணங்களைக் கொள்ளையடித்திருக்கின்றார்கள் என்று ஒரு குற்றச்சாட்டை ஆதாரமில்லாமல் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்கின்றேன். இந்த அவையிலே இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, கடந்த ஆட்சியிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலே நடந்திருக்கின்ற தவறுகளைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின்மீது உயர் நீதிமன்றம் இப்போது தடை வழங்கியிருக்கிறது. தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இங்கு ஆதாரமில்லாமல் ஒரு குற்றச்சாட்டை வைக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் கொள்ளையடித்தன என்று சொன்னாரே தவிர, அமைச்சரைப் பற்றியோ கடந்தகால ஆட்சியைப் பற்றியோ சொல்லவில்லை. (குறுக்கீடு) சொல்லவில்லை. நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். நாட்டில் என்ன நடைபெறுகிறது என்பதை அவர் சொல்கிறார். ஒரு மாணவனைத் தனியார் கல்லூரியில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபாய், இரண்டரை இலட்சம் ரூபாய் வாங்குகிறார்கள். அப்படிப் பல கல்லூரிகளிலே கொள்ளையடிக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதுதான் அவருடைய நோக்கமே தவிர, ஆட்சியிலே இருந்தவர்களோ அல்லது அமைச்சரோ அதிலே தவறு செய்தார்கள் என்பதை அவர் சொல்ல வரவில்லை. (குறுக்கீடு) அதுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** ஒரு சாதாரண ஏழை விவசாயத் தொழிலாளியின் பிள்ளை ப்ளஸ் 2 படித்து முடித்துவிட்டு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலேகூட சேருவதற்கு வழியில்லாமல். நன்கொடைகள் வசூலிக்கப்படுவதால், பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, இதிலே என்ன ஊழல் நடந்தது, கொள்ளை நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரே ஒரு வழியிருக்கிறது. இந்தத் தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டால், அவர்களே வழக்குக்குப் போய்விடுவார்கள். எங்கே இலஞ்சம் கொடுத்தோம்; என்ன செய்தோம் என்ற விவரம் வெளியே வந்துவிடும்; எனவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–40*

அதைப்போல, இப்போது மகளிர் குழுக்களுக்கான பல்வேறு சிறப்புத் திட்டங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. வாரம் இரண்டு முட்டை என்று சத்துணவு குழந்தைகளுக்கு இடுகிற ஒரு நல்ல திட்டத்தை கலைஞர் அவர்கள் செயலாற்றியிருக்கிறார்கள். இதிலே நான் குறிப்பிடுவது, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அந்தச் சத்துணவுத் திட்டத்திலே போடுகிற முட்டைகளை உற்பத்தி செய்கிற ஒரு வாய்ப்பை உருவாக்குகிறவிதமாக, கோழிப் பண்ணைகளை மகளிர் குழுக்கள் அமைக்கிற ஒரு சூழலை உருவாக்க வேண்டும். அதற்கான





பயிற்சிகளைக் கொடுத்து, நிதியுதவி செய்வதன்மூலமாக, அதிலே உருவாகிற முட்டைகளை அந்தச் சத்துணவுத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதன்மூலமாக மகளிர் குழுக்களுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கி வருமானத்தைத் தரமுடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, பனைத் தொழிலாளர்கள். கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருந்த பனைத் தொழிலாளர்களுடைய நலன்கள்பற்றி இங்கே விடுபட்டுப் போய் இருக்கிறது. தமிழகத்தில், பல்லாயிரக்கணக்கான பனைத் தொழிலாளர்கள் நசிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்கிறவிதமாக, பனைப் பொருட்களைப் பாதுகாக்கிறவிதமாக, பனை வாரியம் உருவாக்கப்பட்டு, அதற்காக நிதிகளும் ஒதுக்கப்பட வேண்டும்.

அதைப்போல, விவசாயத் தொழிலாளர்களுடைய பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதிலே, முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு இப்போதுள்ள நிபந்தனைகள் நீக்கப்பட வேண்டும். அது ஒரு மோசமான நிபந்தனையாக இருக்கிறது. அது திருத்தப்பட வேண்டும்.

அதைப்போல, திருமண உதவித் திட்டம், சிறப்பாக இந்த ஆட்சியிலே செயலாற்றப்படுகிறது. அதிலே ஒரு சிறிய திருத்தம். 10–வது படித்த பெண்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் என்பதை மாற்றி, 8–வது படித்த பெண்களுக்கு 15 ஆயிரம் ரூபாய், 5–வதுக்குக்கீழே படித்த பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்று ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடந்தமுறை இருந்த திருமண உதவித் திட்டத்தில் திருமணத்திற்குப் பின்னாலும் மனு கொடுக்கலாம். ஆனால், இப்போது திருமணத்திற்கு முன்பே மனு கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலையிருக்கிறது. அந்த நிலை மக்களுக்குத் தெரியாத காரணத்தால், திருமணம் முடிந்து மனு செய்பவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காத ஒரு சூழல் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் மக்களுக்குத் தெரிகிறவரை, திருமணத்திற்குப் பின்பு மனு செய்தவர்களுக்கும் திருமண உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு அறிவித்திருக்கிற தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில், தமிழகத்திலே, அதிலே வேலைபார்த்த கணிப்பொறி நிர்வாக உதவியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பல சர்ச்சைகளுக்கு இடமாகிக்

கொண்டிருக்கிறது. அந்தச் சர்ச்சையை உருவாக்காமல், மீண்டும் அந்த வேலைகள் அந்தப் பணியாளர்களுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுத்து ஆணையிட வேண்டும்.

குடிசைப் பகுதி மேம்பாட்டிற்குப் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. சிவகங்கை தொகுதியிலே இருக்கக்கூடிய முத்தரையர் இன மக்கள் இன்றைக்கும் 95 விழுக்காடு மக்கள் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் MBC இட ஒதுக்கீட்டிலே இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குச் சிறப்பு ஒருங்கிணைந்த நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தை உருவாக்க வேண்டும்.

அதைப்போல, பாதுகாக்கப்பட்ட குடிநீர்ப் பிரச்சினை. அந்தக் குடிநீர் சம்பந்தமான ஒரு கொள்கை முடிவு இந்த அவையில் மேற்கொள்ளப்பட வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* கிராமப்புறங்களிலே குடிநீர் இல்லையென்று சொன்னால் நாம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** முடித்துவிடுகிறேன். தொகுதிப் பிரச்சினையைப் பேசிவிடுகிறேன். அந்தக் குடிநீருக்காக எங்காவது ஓரிடத்தில் ஆழ்குழாய்க் கிணறு போடுகிறார்கள்; Tank–ல் ஏற்றுகிறார்கள்; கொடுத்துவிடுகிறார்கள். அது எப்படிப்பட்ட தண்ணீராக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. எனவே, இந்நிலைக்கு மாறாக, இப்பொழுது வந்திருக்கிற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அந்த tank–ல் mini சுத்திகரிப்பு machine–களைப் பொருத்தி, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீராகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் காவிரி நீரைக் கொண்டு போகிற ஒரு திட்டத்தைக் கலைஞர் அவர்கள் சிறப்பாக அறிவித்திருக்கிறார்கள். இடையிலே இருக்கிற சிவகங்கை மாவட்டமும் இன்றைக்குக் குடிநீர்ப் பிரச்சினைக்காக, நீர்ப்பாசனப் பிரச்சினைக்காக பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற ஒரு பின்தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையில், அந்தத் திட்டத்தில் சிவகங்கையையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, என்னுடைய தொகுதிப் பிரச்சினையாக — இன்றைக்குத் தென் மாவட்டங்களினுடைய தொழில் வளர்ச்சிக்காக



பல நல்ல முன்முயற்சிகளை எடுத்திருக்கிற நேரத்தில்—சிவகங்கையிலே இருக்கிற graphite; அது உலகத் தரம் வாய்ந்த graphite–ஆக இருக்கிறது. அதனுடைய deposit, 100 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் GSI என்ற மத்திய நிறுவனத்தின்மூலமாக, புதிய, புதிய படிவங்கள் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நமது இந்திய நாட்டினுடைய மொத்த graphite உற்பத்தியே ஓரிசாவிலும், சிவகங்கையிலும் சேர்த்து, ஆண்டுக்கு 13 ஆயிரம் டன்கள்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், 35 ஆயிரம் டன்கள் இந்தியாவின் தேவையிருக்கிறது. மீதம் 20 ஆயிரம் டன்கள் என்பது இன்றைக்குச் சீனாவிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். *(மணியடிக்கப்பெற்றது)* சிவகங்கை ஆலைகூட, 2¾ கோடி ரூபாய் ஆண்டுக்கு இலாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது. எனவே, இந்த நிலையில் அந்த ஆலையின் விரிவாக்கத்தை உபதொழில் வளர்ச்சி என்ற அடிப்படையில் உருவாக்குவதன்மூலமாக, சிவகங்கை பகுதியைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிப்பதன்மூலமாக, பின்தங்கி இருக்கிற சிவகங்கை மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சி அடைந்த மாவட்டமாக மாற்ற முடியும் என்ற அடிப்படையில், அந்தத் திட்டத்தைக் கலைஞர் அரசு இந்த நிதிநிலைக் கூட்டத் தொடரிலேயே எங்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று, அந்த மக்களுடைய ஆவலை இந்த நேரத்திலே குறிப்பிட்டுப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–45*

அதைப்போல, சிவகங்கை மாவட்டம், தலைநகராக மாறி... *(மணியடிக்கப்பெற்றது)* இரண்டு நிமிடம். இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். 22 ஆண்டுகளுக்குப் பின்னாலும், எந்த முனையிலும் வளர்ச்சி அடையாத ஒரு தலைநகராக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே, சிறப்பாக உருவாக்கப்பட்ட திட்டத்தின்கீழ், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. புதிய bus நிலையம் உருவாக்கப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், தமிழகத்திலே இருக்கிற மாவட்ட தலைநகரிலேயே ஒரு சிறிய பூங்காகூட இல்லாத ஒரு தலைநகராக அந்தத் தலைநகர் இருக்கிறது. எனவே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், அங்கே ஒரு சிறப்பான பூங்காவை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதைப்போல, எங்கள் தொகுதியிலே இருக்கக்கூடிய காளையார்கோவிலைத் தனித் தாலுகாவாக மாற்ற வேண்டும். சிவகங்கை ஒன்றியப் பகுதியிலே, நிறைய குடிதண்ணீர்ப் பிரச்சினை

இருக்கிறது. பக்கத்திலே வைகை ஆறு போகிறது. அங்கே இருந்து பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இருந்தாலும், அந்த ஒன்றியத்திற்கு அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இதுவரை வரவில்லை. எனவே, அந்தக் கரையிலே இருக்கிற சிவகங்கை ஒன்றிய மக்களுக்கு, நல்ல தண்ணீர் கிடைப்பதற்காக வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டும்.

சிவகங்கை மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரியை உருவாக்கித் தரவேண்டும். சிவகங்கை தலைமை மருத்துவமனையை (மணியடிக்கப்பெற்றது) 24 மணி நேரமும் இயங்குகின்ற ஒரு மகப்பேறு மருத்துவமனை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி. (குறுக்கீடு) இல்லை, முடிந்து விட்டது. 27 நிமிடம் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திருவாளர் கரி. இராமசாமி. (குறுக்கீடு) உங்கள் கட்சிக்காரர்தான், விடுங்கள். திரு. இராமசாமி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. சு. குணசேகரன்:** அந்த அடிப்படையில், நீங்கள் சொல்ல வேண்டும். கடைசியாக, ஒரே ஒரு விஷயம். இன்றைக்கும், தமிழ்நாட்டிலே அத்திப்பட்டி, சினிமாவிலே வந்த அத்திப்பட்டியைப் போல, வருவாய் ஏடுகளிலே காணாமல்போன ஒரு கிராமம் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. காளையார்கோவில் ஒன்றியம், கொல்லங்குடி குரூப், கண்டனிப்பட்டி என்ற கிராமத்தில், மக்கள் நூறு வீடுகளைக் கட்டிக் குடியிருக்கிறார்கள். வீடு இருக்கிறது, வரி இருக்கிறது. light இருக்கிறது, தெரு இருக்கிறது, பள்ளிக்கூடம் இருக்கிறது. ஆனால், வருவாய் ஏட்டில் அந்தக் கிராமமே இல்லாத ஒரு அவலமான சூழ்நிலை இருக்கிறது. எனவே, அங்கே வீட்டுமனைப் பட்டா கிடைக்கவில்லை, இதுவரைக்கும். அரசுச் சலுகைகள், வெள்ள நிவாரண நிதி போன்ற சலுகைகள் கிடைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் இராமசாமி. (குறுக்கீடு) உங்கள் கோரிக்கைகளையெல்லாம் எழுதி முதல்வரிடம் கொடுத்துவிடுங்கள். திருவாளர் இராமசாமி. (குறுக்கீடு) வேண்டாம். நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி என்பது ஒரே வார்த்தை.



**திரு. சு. குணசேகரன்:** அந்த மக்களுக்குப் பட்டா கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். வெள்ள நிவாரணப் பணிகள், கடந்த காலத்திலே ஏற்பட்ட முறைகேடுகளை விசாரிப்பதற்கு விசாரணைக் குழு அமைத்து, வெள்ள நிவாரணம் கிடைக்காத மக்களுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கையை உறுதியாக இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இவ்வளவு பெரிய கடன் சுமையில் கடந்த அரசு தமிழகத்தை வைத்திருந்தாலும், இன்றைக்கு மக்களுக்கான பல்வேறுவிதமான நல்வாழ்வுத் திட்டங்களையும், தமிழகத்தினுடைய அடிப்படை வேளாண் தொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும், மக்களை நம்பி துணிந்து எடுத்திருக்கிற கலைஞர் அரசு, வெற்றிநடைபோடும்; சிறப்பாகச் செயலாற்றும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இந்தக் கன்னிப் பேச்சைப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் கரி. இராமசாமி.

*பிற்பகல் 12–50*

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழகத்திலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலே ஒரு நல்ல ஆட்சி அமைந்திருக்கிறது. நல்ல ஆட்சி என்பது, மக்களிடம் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசாகும். தேர்தலுக்கு முன்பாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை அமைத்து, தேர்தலைச் சந்தித்தோம். தமிழகத்திலே இந்தக் கூட்டணியினுடைய தலைவராக டாக்டர் கலைஞர் அவர்கள் செயல்பட்டார்கள். அவர்கள் ஒரு தேர்தல் அறிக்கையைத் தயார் செய்தார்கள். அந்தத் தேர்தல் அறிக்கைதான், இந்தத் தேர்தலினுடைய கதாநாயகனாக மாறியது.

இந்தத் தேர்தல் அறிக்கையிலே சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா என்ற ஒரு கேள்வி எழுந்தபொழுது, இந்தத் தேர்தல் அறிக்கைக்கு வலுவூட்டும்வகையில், நமது இந்திய நாட்டினுடைய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், இந்தத் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கின்ற அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றக்கூடிய சாத்தியமான எல்லாக் கூறுகளும் இதிலே இருக்கின்றன என்று சொன்னார்கள். அதேபோல, சொன்ன வாக்குறுதிகளைத் தொடர்ந்து நமது அரசு இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது. இதற்காக நான் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சொன்னதைச் செய்யக்கூடிய அரசு என்று நான் சொன்னேன். இப்போது விவசாயிகளுக்கு மிகப் பெரிய சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகளே எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு விவசாயக் கடனை இரத்து செய்திருக்கிறார்கள். அதற்கடுத்தாற்போல, ஏழை மக்களுக்கு 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குவதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டம் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் சீருடன் சிறப்புடன் நல்லமுறையிலே நடந்து வருகிறது.

அடுத்தபடியாக, ஏழைக் குழந்தைகளுக்கு, பள்ளியிலே படிக்கக்கூடிய ஏழைக் குழந்தைகளுக்கு, சத்துணவு வழங்குவதிலே வாரத்திற்கு 2 முட்டைகள் வழங்குவதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டமும் இன்றைக்குச் சீரும் சிறப்புடன் நடந்து வருகிறது.

அதற்கடுத்தாற்போல, கருவுற்ற தாய்மார்களுக்குப் பிரசவத்திற்கு முன்பாக 3 மாதங்களுக்கும், பேறு காலத்திற்குப் பிறகு 3 மாதங்களுக்கும், மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் கொடுத்து, அந்தக் குழந்தைகளை நல்ல குழந்தைகளாக ஆக்குவதற்கு, இந்த அரசு உறுதுணையாக இருந்திருக்கிறது.

அடுத்தபடியாக, ஏழை மக்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடிய விரைவிலே, வழங்குவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். இந்தக் காரணங்களுக்காக, இந்த அரசை நாம் நல்ல அரசு என்று சொல்வதிலே நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொறுத்தமட்டில், விவசாயிகளுக்கு இவ்வளவு பெரிய சலுகைகளைச் சொன்னாலும், சில பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளைச் சொல்வது, என்னுடைய கடமையாக நான் எண்ணுகிறேன். இன்றைக்கு நிலத்தடி நீரை நம்பியிருக்கக்கூடிய பகுதியிலே, மின் இணைப்பு கிடைப்பதிலே பிரச்சினை இருக்கிறது. விவசாயிகளுடைய மின் இணைப்புப் பட்டியல் நீண்டுகொண்டே இருக்கிறது. விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொருவிதமான மின் இணைப்பு கொடுக்கின்ற எண்ணிக்கைகளை இதற்கு முன்பாக இருந்த அரசு மாற்றியமைத்து இருக்கிறது. உதாரணத்திற்கு, தஞ்சையிலும், கோவையிலும் அதிகமாகவும், சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கைகளிலும் அளவுகளை ஒதுக்கியுள்ளார்கள். இதை மாற்றி



எந்தெந்த விவசாயிகள் இணைப்பு கேட்டிருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேர்களுக்கும் மின் இணைப்பு கொடுக்க நமது அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய எரிபொருள், குறிப்பாக diesel போன்றவற்றிற்கு விலை அதிகமாக இருக்கிறது. மீனவர்கள் பயன்படுத்தும் diesel-க்கு வரியைக் குறைத்திருக்கிறீர்கள். அதேபோல விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய tractor போன்ற இயந்திரங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய diesel-க்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய இரசாயன உரங்களுக்கு அதனுடைய மானியத்தை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் விளைவித்த நெல்லை நமது அரசு கொள்முதல் செய்கிறது. கொள்முதல் விலை மிகக் குறைவாக இருக்கிறது. கொள்முதல் விலையை நீங்கள் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

அதற்கு அடுத்தாற்போல உள்ளாட்சித் துறை; தமிழகத்திலே மிக முக்கியமான துறைகளில் ஒன்று. உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகைதந்து, அங்கே ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்கள். அந்த ஆய்வுக் கூட்டம் உண்மையிலேயே சிறப்பாக அமைந்திருந்தது. பல உண்மைகள் அந்தக் கூட்டத்தின்வாயிலாக வெளியில் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 3 மாதத்திற்கு ஒரு தடவை எல்லா மாவட்டங்களுக்கும் வந்து ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் 6 மாதத்திற்கு ஒரு தடவை வந்தால்கூட போதும். ஆனால், நீங்கள் 6 மாதத்திற்கு ஒரு தடவை கண்டிப்பாக வந்து, இந்த ஆய்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். ஆய்வுக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகள் நடக்கின்றனவா என்பதை நீங்கள் கண்ணும் கருத்துமாகப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சித் தேர்தல் வருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தமட்டில்,

நாங்கள் எல்லோரும் சுழற்சிமுறை வேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கு என்ன காரணம் என்றால், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களிலே தேர்தலே நடத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், குறிப்பிட்ட சமுதாயம் குறிப்பிட்ட இடத்தில் நிற்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அதை மாற்றி மாற்றி அமைத்தால், எல்லாப் பகுதி மக்களும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. நிச்சயமாக சுழற்சிமுறையை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, இரண்டு அடுக்குமுறை, மூன்று அடுக்குமுறை என்று இரண்டுவிதமான அமைப்புகள் இருக்கின்றன. இப்போது மூன்று அடுக்குமுறையிலே தேர்தலை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, ஊராட்சி மன்றத் தலைவருக்கும், ஒன்றியத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாத நிலை. அதேபோல, ஒன்றிய கவுன்சிலர்களுக்கும் மாவட்ட அமைப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாத ஒரு நிலை. ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருக்கக்கூடியவருக்கும் மாவட்ட அமைப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாத ஒரு நிலை இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்றால், இரண்டு அடுக்குமுறைதான் சரியான முறையாகும். அந்த இரண்டு அடுக்குமுறையை ஏற்படுத்தினால், இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

உள்ளாட்சித் துறை தேர்தலுக்குப் பிறகாவது, அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விதிகளின்படி 27 அதிகாரங்கள் இருக்கின்றன. அந்த 27 அதிகாரங்களை உள்ளாட்சித் துறைக்கு வழங்குவதற்கு நமது அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, மாவட்ட அளவிலே நடக்கக்கூடிய கூட்டங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு அந்தப் பகுதியினுடைய பிரச்சினைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், DDC முறையை அகற்றியிருக்கிறோம். முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இங்கே இருக்கிறார்கள். அவர்கள்தான் இதற்காக ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து DDC முறையை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினருக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் நேரடியாக ஒரு தொடர்பு வேண்டும் என்று நாங்கள்



விரும்புகிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டப் பிரச்சினைகளை, அந்தந்த மாவட்ட அமைப்புடன், வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சொல்வதற்கு ஒரு வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்தியோதயா திட்டத்தின்கீழ், 35 கிலோ அரிசியை நாம் வழங்குகிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்குச் சில வழிமுறைகளை நமது அரசு சொல்லியிருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தத் திட்டத்தின்கீழ் வரக்கூடிய அத்தனை பேருக்கும் இந்த உதவி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எத்தனை பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்களோ, அத்தனை பேருக்கும் இந்த உதவி கிடைக்க ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

இன்னொன்று; தமிழகத்திலே, தமிழர்கள் விரும்பி, வீர விளையாட்டுக்களாக நடத்திக்கொண்டிருந்த ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, மாட்டு வண்டிப் பந்தயம் போன்றவை, தடை செய்யப்பட்டிருக்கின்றன. தடை என்றால், இது நீதிமன்றத்திலே ஒரு தடை பெற்று நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலை, தமிழ்நாட்டிலே இந்த ஆண்டுதான் ஏற்பட்டிருக்கிறது. தமிழர்கள் காலங்காலமாக, பல ஆண்டுகளாக, பல தலைமுறைகளாகச் செய்துகொண்டிருந்த இந்த வீர விளையாட்டுக்களைத் தொடர்ந்து செய்வதற்கு, நீதிமன்றங்களுக்குச் சரியான தகவல்களை நமது அரசு சொல்லி, மீண்டும் இந்த வீர விளையாட்டுக்களைத் தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றொன்று, தொண்டி நகரம் என்பது, முந்தைய காலத்திலே அது துறைமுகமாக இருந்த இடம். இப்பொழுது நமது சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறும்பொழுது இந்தத் தொண்டி துறைமுகத்தையும் ஏற்படுத்தித் தருவதாக நமது மத்திய அமைச்சர்கள் தொடர்ந்து சொல்லி வந்தார்கள். ஆனால், இன்றைக்கு அந்தத் திட்டத்தைச் செய்யக்கூடிய இடத்திலே இருப்பவர்கள், திட்டத்தைக் கைவிட்டிருப்பார்களோ என்று சந்தேகப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு, தொண்டியைத் துறைமுகமாக ஆக்கித் தர வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது சட்டமன்ற உறுப்பினர், இப்பொழுது இங்கே பேசும்பொழுது சொன்னார்கள், சிவகங்கையிலே graphite தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று. இது நீண்டநாள் கோரிக்கை. அன்புத் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், என்ன காரணத்தினாலேயோ பல தடவைகளிலே செயல்படுத்த முடியாத ஒரு நிலையிலே இருக்கிறது. இதில் இந்த அரசு தலையிட்டு, விரைவிலே அந்த graphite தொழிற்சாலையையும், அதனுடைய துணைத் தொழில்களையும் சிவகங்கையிலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மிகப் பின்தங்கிய பகுதியான திருவாடானையில் ஒரு கலைக் கல்லூரி — அரசுக் கலைக் கல்லூரி — ஏற்படுத்தித் தரவேண்டும்.

அடுத்தபடியாக, அரசு மருத்துவமனைகளில் போதுமான மருத்துவர்கள் இல்லை. போதுமான மருத்துவர்களை இந்த அரசு நியமனம் செய்து தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மருத்துவமனைகளுக்குப் போதுமான கட்டட வசதிகளையும் செய்து தரவேண்டும். அதேபோல, மருத்துவமனைகளுக்கு வேண்டிய உபகரணங்களையும் வழங்க வேண்டும். இவையெல்லாம், கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளில், போதிய அளவு இல்லாத நிலை உள்ளது. இதில் உடனடியாக சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் அவர்கள் தலையிட்டு, இவற்றையெல்லாம் சரிசெய்து தரவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தொண்டியிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரம். இன்றைக்குப் பல கிராமங்களிலே, போதிய மின்சாரம் கிடைப்பதிலே பிரச்சினை இருக்கிறது. பல கிராமங்களிலே மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்னவென்று கேட்டால், மின் ஊழியர்கள் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்கு, தேவகோட்டை மின்சார அலுவலகத்தில் Wiremen, Helper–கள் மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டவை 40 இடங்கள். ஆனால், இன்றைக்கு அங்கே இருக்கக்கூடியவர்களுடைய எண்ணிக்கை 13. இன்னும் தேவைப்படுபவை 27. இந்த நிலையிலே இருந்தால், மின்சாரத்தைச் சரியாக நாம் எண்ணுகிறபடி கிராம மக்களுக்கு வழங்குவதில் பல



பிரச்சினைகள் ஏற்படும். உடனடியாக இதிலே அரசாங்கம் தலையிட்டு, போதிய மின் ஊழியர்களை நியமனம் செய்து தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

விவசாயிகளுக்கு, விவசாயம் சம்பந்தப்பட்ட மின் இணைப்புகள் கொடுப்பதைத் தற்போது நிறுத்தி வைத்திருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 1990 ஆம் வருடத்திலிருந்து இப்போதுவரை கொடுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதை அரசாங்கம் நிறுத்தவில்லை. ஓராண்டுக்கு 40 ஆயிரம் விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இன்று அரசாங்கத்திலே 5 இலட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் மின்சார இணைப்பு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு 40 ஆயிரம் என்று எடுத்துக்கொண்டாலும்கூட, கடைசி விவசாயி மின் இணைப்புப் பெறுவதற்கு 13 ஆண்டுகளாவது ஆகும். எனவேதான் அந்த நிலை. இருந்தாலும், சிவகங்கையைப் பொறுத்தவரையிலே, நம்முடைய மத்திய நிதியமைச்சர் ஏற்கெனவே ஒரு பொதுக் கூட்டத்திலே பேசியதை எடுத்துக்கொண்டு, எப்படி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தஞ்சைப் பகுதிக்குக் கூடுதலாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு முன்பு உத்தரவிட்டாரோ, அதைப்போல, சிவகங்கை மாவட்டத்திற்கும் கொஞ்சம் கூடுதலாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு அவர் ஏற்கெனவே அறிவுரை வழங்கியிருக்கிறார். அது அமல்படுத்தப்படும்.

**திரு. கரி. இராமசாமி:** இன்றைக்கு நமது அரசு, 671 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு குடிநீர்த் திட்டத்தை — திராவிட முன்னேற்றக் கழக அரசு, முன்பு இருந்தபொழுதே இந்தத் திட்டத்தை வகுத்தது — இப்போது நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தித் தரவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். முக்கொம்பிலிருந்து இராமநாதபுரம் வரையில், இந்தத் திட்டத்தை தீட்டியிருக்கிறார்கள். இதற்கு இடையிலே, சிவகங்கை மாவட்டத்திலே பல கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன. அவற்றை அதில் சேர்ப்பதற்கு

உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மழைநீரை நம்பி விவசாயம் செய்யக்கூடிய எங்கள் பகுதியிலே உள்ள கண்மாய்களை, ஊருணிகளை ஆழப்படுத்தித் தரவேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல கண்மாய்களின் உடைப்பு, இன்னும் சீர்செய்யப்படாமல் உள்ளது. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான இந்தக் கண்மாய்கள், ஊருணிகளை எல்லாம் உடனடியாகச் சரி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியத்திலே போதிய நிதி இல்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதற்கு உடனடியாக நீங்கள் சிறப்பு நிதியை ஒதுக்கி, தென் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய அத்தனை கண்மாய்கள், ஊருணிகளையும் ஆழப்படுத்தித் தரவேண்டுமென்று நான் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே, வெள்ளத்தால் கடுமையாக சேதம் ஏற்பட்டபொழுது, வெள்ள நிவாரணங்கள் முழுமையாக விவசாயிகளுக்குச் சென்றடையவில்லை. வெள்ள நிவாரண வேலைகளும், வெள்ள நிவாரணமும் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைப்பதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு, சென்ற தடவை ஆட்சி செய்தபொழுது, பெரம்பலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அரியலூரைத் தலைமையிடமாகக்கொண்டு அரியலூர் மாவட்டத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால், அதற்கு அடுத்தாற்போல வந்த அரசு, அரியலூர் மாவட்டத்தை மீண்டும் பெரம்பலூருடன் இணைத்து, அரியலூர் மாவட்டமே இல்லாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நீண்டநாள் இந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை, இதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பது. இதற்கு முன்பாக இந்த அரசு என்ன முடிவு எடுத்ததோ...

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிக்கிரம் பேசி முடியுங்கள். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கரி. இராமசாமி:** என்ன முடிவு எடுத்ததோ, அதை மீண்டும் செய்து தரவேண்டும். அந்தப் பகுதி மக்கள் நீண்டநாட்களாகக்



கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நிருவாகச் சீர்திருத்தம் காரணமாக. இந்த முயற்சியை இந்த அரசு மீண்டும் செய்து தரவேண்டும். அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் அமரமூர்த்தி அவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த கோரிக்கையை இந்த அரசு நிச்சயமாக செய்து தரவேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பெரம்பலூருக்கும் அரியலூருக்கும் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக, அவர்கள் ஒற்றுமையாக இருப்பதற்கு, பிரிந்தால்தான் முடியும் என்ற ஒரு நிலை உருவாகி, அந்த நிலையைக் கடந்தகாலத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்து, அரியலூர் மாவட்டத்தைத் தனி மாவட்டமாக அறிவித்தது. ஆனால், அடுத்து வந்த கடந்தகால ஆட்சி, அரியலூர் மாவட்டம் என்ற தனி மாவட்டத்தை மாற்றிவிட்டு, இரண்டையும் ஒரே மாவட்டமாக ஆக்கி அறிவித்தது. அப்பொழுதே நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியிலே பேசும்போதும், ஒரு அறிக்கையிலே சொன்னபோதும், தி.மு.க. ஆட்சி வந்தால் 4 நாட்களில் மீண்டும் அரியலூர் மாவட்டம் வரும் என்று சொன்னார்கள். பரவாயில்லை, 4 நாட்களில் வராவிட்டாலும், இப்பொழுது 40 நாட்கள் ஆகிவிட்டன. அரியலூர் மாவட்டம் மீண்டும் வரும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாக வசதிக்காக, கடந்த ஆட்சிக் காலத்தில் பிரிக்கப்பட்ட மாவட்டத்தை, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஒரு சமுதாயத்தின் பெயரைச் சொல்லி இழிவுபடுத்தக்கூடியவகையில் கொச்சைப்படுத்தி, அந்த மாவட்டத்தை இணைத்த அந்த அவல நிலையையெல்லாம் போக்குகின்றவகையில், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர், மருத்துவர் ஐயா அவர்களின் கோரிக்கையையும், அந்த மாவட்டத்து மக்களின் கோரிக்கையையும் ஏற்று, மீண்டும் அரியலூர் மாவட்டம் துவங்கப்படும் என்ற மகத்தான அறிவிப்பை இந்த மாமன்றத்தில் செய்த மகத்தான தலைவர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பாட்டாளி

மக்கள் கட்சியின் சார்பிலேயும், மருத்துவர் ஐயா அவர்களின் சார்பிலேயும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தேர்தலிலே முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, நாங்கள் எல்லாம் தேர்தலைச் சந்தித்தபோது, தேர்தலிலே வெற்றி பெற்று, டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வரானால், நிச்சயமாக அரியலூர் மாவட்டத்தைப் பெற்றுத் தருவோம் என்ற உறுதியைச் சொல்லியிருந்தோம். அதன்படி, இன்று மீண்டும் அரியலூர் மாவட்டத்தைத் தந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அரியலூர் மக்களின் சார்பாகவும், பெரம்பலூர் மாவட்ட மக்களின் சார்பாகவும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றோம். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி. (குறுக்கீடு) திரு. எஸ்.எஸ். சிவசங்கர், பேசுங்கள். அவர் பேசட்டும். நன்றி சொல்கிறார் அவர்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, ஜெயங்கொண்டம் தொகுதி, அரியலூர் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த அதை, தலைவர் அவர்கள் வந்துதான் பரிசீலித்து இருக்கிறார். தலைவர் அவர்களுடைய உள்ளத்திலே இடம்பெற்ற, எங்களுக்கு என்று வழங்கப்பட்ட அரியலூர் மாவட்டம், கடந்த ஆட்சிக் காலத்திலே மரியாதைக்குரிய திரு. கோ.க. மணி அவர்கள் கூறியதைப்போல, ஏதோ ஒரு உள்நோக்கத்தின் காரணமாக, தலைவர் கொடுத்தார்கள் என்ற காரணத்தினால் நீக்கப்பட்ட அந்த மாவட்டம், மீண்டும் இன்றைக்குத் தலைவர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, தலைவர் அவர்களுக்கு எங்களுடைய மூன்று தொகுதிகளின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி.





**திரு. கரி. இராமசாமி:** அந்தப் பகுதி மக்களினுடைய கோரிக்கையை ஏற்று புதிதாக மாவட்டம் அமைப்பதற்கு உத்தரவிட்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். 27 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இராமேஸ்வரத்திலிருந்து வேதாரண்யம் வரை இருக்கக்கூடிய மீனவர்கள், அன்றாடம் தங்களுடைய பிழைப்பை நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்குக்கூட வேதாரண்யத்தைச் சார்ந்த மீனவர்கள், மீன் பிடிக்கச் செல்லும்பொழுது, இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு, அவர்களுடைய படகுகளெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. இது ஒரு தொடர் கதையாக இருக்கிறது. தொடர்ந்து அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதைத் தட்டிக் கேட்பதற்கு இப்பொழுதுதான் ஒரு நல்ல முதலமைச்சர் நமக்குக் கிடைத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசுடன் பேசி, இதற்கு ஒரு நல்ல தீர்வு காணவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இலங்கையைச் சார்ந்தவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், மீன் பிடிக்க வருபவர்கள் இந்திய நாட்டினுடைய எல்லையைத் தாண்டி வந்துவிடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். மீனவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், சரியாக எல்லை தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். நீண்ட நாட்களாக நாம் அங்கே விரும்புவது என்னவென்றால், கடலிலே ஒளிரக்கூடிய மிதவைகளை அமைத்து, கடல் எல்லையை முதலிலே மீனவர்களுக்கு அடையாளம் காட்டக்கூடிய ஒரு நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக, மத்திய அரசுடன் பேசி, மீனவர்களுக்கு ஒரு நல்ல காலத்தை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன். எந்தவிதமான வரி விதிப்புகளும் இல்லாமல் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்த நமது நிதி அமைச்சர் அவர்களையும் பாராட்டி, காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் முழு மனதுடன் இதை வரவேற்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் நான்காவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்க வாய்ப்பளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும், பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வாக்களித்து வெற்றிபெறச் செய்த தொகுதி மக்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பட்ஜெட்டை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் வழங்கியிருக்கிறார்கள்.

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி"

என்பது வள்ளுவன் வாக்கு. கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்குமுடைய அரசன் அரசருக்கெல்லாம் விளக்கு போன்றவன் என்ற நிலையிலே இன்றைக்கு வழங்கி இருக்கின்ற நிதிநிலை அறிக்கை மிகச் சிறப்பான நிதிநிலை அறிக்கை என்று நாங்கள் சொல்லவில்லை; எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டுகின்றன. எல்லாத் தொழிலதிபர்களும் பாராட்டுகிறார்கள். எல்லா அடித்தளத்து மக்களும் பாராட்டுகிறார்கள். வணிகர்கள் பாராட்டுகிறார்கள். அத்தனை தரப்பு மக்களாலும் பாராட்டப்படக்கூடிய ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையாக, இந்த நிதிநிலை அறிக்கை விளங்கிக் கொண்டிருக்கிறது. முதல் test-இலேயே century அடிப்பதைப்போல, முதல் பட்ஜெட்டையே நூறு சதவீதம் வெற்றிகரமான பட்ஜெட்டாக வழங்கியவர் தலைவர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அனைவராலும் பாராட்டப்படக்கூடிய அளவுக்கு, இந்த பட்ஜெட் சிறப்புவாய்ந்த பட்ஜெட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-20

இங்கே எதிர்க்கட்சியிலே பேசிய திரு. சேகர்பாபு அவர்கள், இது ஒரு minority அரசு என்று சொன்னார். இது minority அரசல்ல; இது minority மக்களுக்கான அரசு; minority மக்களால் உருவான அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) minority மக்களுக்காகப் பாடுபடுகின்ற அரசு என்ற வகையிலே, இந்த அரசு ஏழையெளிய மக்களுக்கும், எல்லாத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு நன்மைகள் அளிக்கக்கூடிய ஓர் அரசாக விளங்குகிறது என்பதை நாங்கள் சொல்லவில்லை; இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை அரசியல் தலைவர்களும், தோழமைக்



கட்சித் தலைவர்களும் சிறப்பாகப் பாராட்டிக் கொண்டிருக்கக்கூடிய அரசாக இருக்கிறது. இது சிறப்பான அரசாக இருக்கின்ற காரணத்தால்தான், கடந்த ஆட்சியிலேயிருந்த நீங்கள், இங்கேயிருந்த நீங்கள் அங்கே இருக்கிறீர்கள்; அங்கேயிருந்த நாங்கள் இங்கே இருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்றால் அதற்குக் காரணம், மக்கள் அளித்த தீர்ப்பு. 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று சொல்கின்ற அந்த மொழிக்கேற்ப இன்றைக்கு ஒரு நல்லாட்சி இந்த நாட்டிலே மலர்ந்து, ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கை இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்காக, தலைவர் கலைஞர் வழங்கியிருக்கின்ற இந்தச் சாதனைகளைப்போல இந்தியாவிலே எந்த மாநிலத்திலாவது வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். விவசாயிகளுக்கு, அனைத்து பம்பு செட்டுகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கியவர் கலைஞர்தான். இன்றைக்கு ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனையும் தள்ளுபடி செய்தவர் கலைஞர் ஒருவர்தான் இந்தியாவிலே என்ற அளவிலே, அப்படிப்பட்ட ஒரு சாதனையாளராக நம்முடைய முதல்வர் விளங்குகிறார். இந்த விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் கடன் என்கிற திட்டமாக இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு எந்த ஒரு ஆட்சியிலும் கிடைக்காத நன்மைகள் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் கிடைத்திருக்கின்றன. இன்றைக்கு விவசாயிகளுக்கு யார், யாரோ நண்பன் என்பார்கள். ஆனால் விவசாயிகளினுடைய உண்மையான நண்பன் தலைவர் கலைஞர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டு மக்கள் விவசாயிகள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

அதேபோல, இன்றைக்கு ரேஷன் கடைகளிலே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குகிறோம். எத்தனை ஏழையெளிய தாய்மார்கள் இன்றைக்கு மன மகிழ்ச்சியோடு அதை வாங்கிச் செல்கிறார்கள் என்பதை நாடு அறியும். கொடுத்த வாக்குறுதி. தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாப்பதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏழையெளிய தாய்மார்கள், இன்றைக்கு இந்த ஒரு கிலோ அரிசியை 2 ரூபாய்க்கு வாங்கிச் செல்கின்ற நேரத்திலே மகிழ்ச்சியோடு செல்கிறார்கள் என்றால், அது தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்ற வகையிலேதான். இன்றைக்கு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குகிற அந்தத் திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது.

அதேபோல, இன்றைக்குக் கோழி முட்டைகள் வழங்குகின்ற திட்டம், முட்டைகள் வழங்குகின்ற திட்டம், வாரத்திற்கு இரண்டு முட்டைகள்.

ஒரு கிராமத்திலே இருக்கின்ற ஒரு தாய்மார் வீட்டிலே, தான் வளர்க்கின்ற கோழி இடுகின்ற முட்டையைக்கூட, தன்னுடைய குழந்தைக்குக் கொடுக்க முடியாது. அந்த முட்டைகளையெல்லாம் எடுத்து, நகரத்திலே சென்று விற்று, தன்னுடைய குடும்பத்தை நடத்தலாம் என்று நினைப்பார்களே தவிர, தன்னுடைய குழந்தைக்குத் தருவதில்லை. ஏதோ தீபாவளியைப் போலத்தான், குழந்தைகள் முட்டையைச் சாப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு வாரத்திற்கு 2 முட்டை என்பது அனைவராலும் பாராட்டப்படக்கூடிய திட்டமாக, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய தாய்மார்கள் விரும்புகிற திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இப்படி பல்வேறு திட்டங்களை இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

நெசவாளர் நலன்; கடந்த ஆட்சிக் காலத்திலே நெசவாளர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று நாங்கள் கஞ்சித் தொட்டி திறந்தோம். ஆனால், அவர்கள் பிரியாணி சாப்பிட்டார்கள். நெசவாளர்களுக்கு நன்மை செய்யவில்லை. ஆனால், இன்றைக்குக் கலைஞர் அவர்கள், நெசவாளர்களுக்காக வரி இரத்தும், அதேபோல அவர்களுடைய தறிகளுக்கு இலவச மின்சாரமும் வழங்கியிருக்கிறார்கள் என்றால், இன்றைக்கு ஒவ்வொரு நெசவாளரும் மன நெகிழ்ச்சியோடு அதைப் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களைக் காத்த ஒரு முதல்வர் கலைஞர் என்று இன்றைக்கு நெசவாளர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, இன்றைக்கு முதியோர் உதவித் தொகை; எல்லாக் கிராமங்களிலும் சென்றால், தாய்மார்கள் சொல்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த முதியோர் உதவித் தொகையை எல்லாம் நிறுத்தினார்கள்; தலைவர் கலைஞர் வந்ததால்தான், எங்களுக்கு வாழ்வு என்று சொன்னார்கள். இன்றைக்கு முதியோர்கள் எல்லாம் இந்த 400 ரூபாயைப் பெறுவதிலே பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்றால், முதியோருக்கும் இன்றைக்கு நலனை வழங்கியவராக தலைவர் கலைஞர் அவர்கள்தான் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், சமூக நலத் திட்டங்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே 35 சதவீதத்திற்குமேல் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டமா; கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000 ரூபாய் உதவிப் பணமா; விதவைகளுக்கான திட்டங்களா; இப்படி எல்லாத் திட்டங்களும் இன்றைக்கு சமூக நீதித் திட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.



அதேபோல, பொற்கொல்லர்கள் விஷம் அருந்தி இறந்தார்கள். அந்தப் பொற்கொல்லர்களைக் கவனிப்பதற்குக் கடந்த ஆட்சியிலே, அதற்கான எந்த ஒரு நிலையும் எடுக்கப்படவில்லை. ஆனால், இன்றைக்குக் கலைஞர் அவர்கள் பொற்கொல்லர்களுக்கு நல வாரியம் அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பொற்கொல்லர் வாழ்விலேயும் வளத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதேபோல, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி; ஒவ்வொரு கிராமத்திலேயும் வண்ணத் தொலைக்காட்சியைப் பார்க்க வேண்டுமானால், பஞ்சாயத்துக்குச் செல்ல வேண்டும்; யாராவது ஒரு பணக்காரர் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற நிலையை மாற்றி, அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகின்ற ஓர் அற்புதமான திட்டத்தை, இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்றால், அது அனைத்துத் தரப்பு மக்களாலும் வரவேற்கக்கூடிய திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கல்வி வளர்ச்சிக்கு தனிக் கவனம் செலுத்தி, காமராசர் பிறந்த நாளிலே, அதற்கான பல முனைப்பான திட்டங்கள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆரம்பப் பள்ளிகள் இவையெல்லாம் உருவாவதற்காக பல நிலைகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–25

அதேபோல கரும்புச் சர்க்கரை ஆலைகள். அவையெல்லாம் நசிந்துபோய் இருந்த கூட்டுறவு ஆலைகள். அவற்றையெல்லாம் முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கம், கடந்த ஆட்சிக் காலத்திலே இல்லை. ஆனால் இன்றைக்குக் கலைஞர் அவர்கள், bio-diesel தயாரிக்கின்ற, ethenol–ஐ உருவாக்குவதற்கு அனைத்துச் சர்க்கரை ஆலைகளுக்கும் அனுமதி கொடுப்பதன்மூலம், இந்தத் தொழில் நல்லமுறையிலே சிறப்பாக வளர்ந்து, அதேபோல அதிலே விவசாயிகளுக்கு, கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு, பல்வேறு நன்மைகளை உருவாக்கக்கூடிய நிலை, இன்றைக்கு உருவாகியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டிலே நிறைவேற்றியிருக்கின்ற பல சமூக நலத் திட்டங்கள், இவையெல்லாம் வேறெந்த ஆட்சிக் காலத்திலேயும் நடைபெறவில்லை. அவருடைய ஆட்சிக் காலத்திலேதான் ஏழை, எளிய மக்களுக்காக மறுவாழ்வு இல்லங்களாக இருந்தாலும், குடிசை மாற்று வாரியமாக இருந்தாலும், குடிநீர் வடிகால்

வாரியமாக இருந்தாலும், இவையெல்லாம் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே உருவானவைதான். அவைதான் இந்த ஏழை, எளிய மக்களுக்காக அவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருந்தபோது செய்யப்பட்டவை. இன்றைக்கு ஐந்தாவது முறையாகக் கலைஞர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார் என்றால், அவர் ஆட்சிப் பொறுப்பேற்கின்ற ஒவ்வொரு முறையும் நாட்டு மக்களுக்காகப் பல நல்ல திட்டங்களை வழங்கியிருக்கிறார் என்று, நாங்கள் சொல்லவில்லை; இன்றைக்குப் பல ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். அவர் அளித்த திட்டங்கள், இன்றைக்கு இந்தியா முழுவதும் பின்பற்றக்கூடிய திட்டங்களாக உயர்ந்திருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி இந்த நிதிநிலை அறிக்கை என்பது, ஏழை, எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், பலதரப்பட்ட மக்களுக்கும் பயனளிப்பதாய் உள்ளது. உள்ளாட்சி நிருவாகத்தை இன்றைக்குத் தளபதி அவர்கள் பொறுப்பேற்று, தண்ணீர் வசதி இல்லாத இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தாலும், வெள்ளத்தால் பம்பாய் போன்ற நகரங்கள் எல்லாம் மூழ்கி இருக்கின்ற நிலையைப் பார்த்து, அவ்வாறு இங்கு வராமல் மாற்றக்கூடிய வகையிலே தடுப்பு நடவடிக்கையாக, சென்னை போன்ற பகுதிகளிலே பல வெள்ளத் தடுப்புப் பணிகளை, திருச்சியாக இருந்தாலும், கோவையாக இருந்தாலும், இப்படிப் பல்வேறு பகுதிகளிலே அதற்கான பணிகளை இன்றைக்கு முடுக்கிவிட்டு, சிறப்பாக அந்தப் பணிகள் நடைபெறுகின்ற அளவிற்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இவையெல்லாம் எதற்காக? கொடுத்த வாக்குறுதிகளை மக்களுக்கு நிறைவேற்ற வேண்டுமென்ற அந்த நோக்கத்தோடு தலைவர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

அதேபோல, போக்குவரத்து. இன்றைக்குப் போக்குவரத்து சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், நம்முடைய சென்னைப் பகுதியிலே பல புதிய பேருந்துகளை விடுகின்ற வகையிலேயும், பல்வேறு கிராமங்களுக்கு mini பேருந்துகளை விடுகின்ற வகையிலேயும், அதற்கான திட்டங்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

கால்நடை வளர்ப்பு என்கின்ற அந்தத் திட்டத்தின்மூலமும், பல்வேறு வகையிலே கால்நடை வளர்ப்பைச் சிறப்பாகச் செய்யக்கூடிய திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, இங்கே நம்முடைய உயர் கல்வி அமைச்சர் பேசுகின்ற நேரத்திலே சொன்னதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்திலே

D
V21131' 808.
808.4.3



உயர் கல்வியிலே ஏற்பட்ட குளறுபடிகளையெல்லாம் களைந்து, இன்றைக்கு அனைவரும் உயர் கல்வியிலே, மாணவர்கள் அதிக அளவிலே சேர்ந்து நல்லமுறையிலே படிக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு உருவாகியிருக்கிறது.

இன்றைக்குத் தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத்திலே முன்னேறிய மாநிலமாக மாறுவதற்கு ரூபாய் 40 ஆயிரம் கோடிக்குமேல் அன்னியச் செலாவணியை ஈட்டுகின்ற வகையிலே, உற்பத்தியை உருவாக்குகின்ற வகையிலே, நம்முடைய சோழிங்கநல்லூர் பகுதியிலே புதிய சாலைகள், அங்கே பல புதிய தகவல் தொழில்நுட்ப மையங்கள் இவைபோன்ற மத்திய, மாநில அரசுகள் இணைந்து சிறப்பாக அமைக்கக்கூடிய பணிகளை, பல திட்டங்களை இதிலே வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல பாசனங்கள்; பல்வேறு இடங்களிலே அதற்கான அணைகள் கட்டுதல், நிறுத்தப்பட்ட கால்வாய்கள், கடந்த ஆட்சிக் காலத்திலே செய்யாத அந்தச் சாதனைகளை எல்லாம், இந்த ஆட்சியிலே செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவையெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

என்னுடைய திருவண்ணாமலை தொகுதியிலே, சாத்தனூர் மேல்மட்டக் கால்வாய்; அதன்மூலமாக நந்தன் கால்வாய்க்கு அந்தத் திட்டம் இணைக்கப்பட்டு அனைத்துப் பகுதிகளுக்கும் விழுப்புரம் மாவட்டம்வரை தண்ணீர் தரக்கூடிய திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருவண்ணாமலை நகரிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு இன்னும் எவ்வளவு நேரமாகும்?

**திரு. கு. பிச்சாண்டி:** 10 நிமிடங்களாகும். (குறுக்கீடு) 5 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். இல்லை, இல்லை. அலுவல் நேரத்தைக் கூட்ட வேண்டுமா அல்லது நாளைக்கு வைத்துக்கொள்ளலாமா என்று கேட்பதற்காகத்தான். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள், திரு. பிச்சாண்டி பேசுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு கலை... முறையாக முதலமைச்சராகப் பொ... ...ள்ளார்கள்.

227415
சென்னை-600 009

1969 முதல் இன்றுவரை ஏழை, எளிய மக்கள் வாழ்வில் ஒளி வீச வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அவருடைய திட்டங்களான கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், குடிசைமாற்று வாரியத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், இலவச பஸ் பாஸ், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நல வாரியங்கள், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி என வரிசைப்படுத்திக்கொண்டே போகலாம். அறிஞர்களின் கொள்கையைப்போல, இன்றைக்கு அவருடைய சமூகப் பொருளாதார, சம நீதி அடிப்படையில்...

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. நீங்கள் ஐந்து நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** வரலாற்றில் இடம் பெற 'Concept of Kalaignar' என்ற புத்தகம்கூட வெளியிடப்பட வேண்டும் என என்னுடைய கோரிக்கையினை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பார்கள். அப்படி அழுத குழந்தையின் தேவை மட்டுமன்றி, அழாத குழந்தையின் தேவையினையும் அறிந்து சேவை செய்கின்ற தாய்போல, தாயுள்ளத்தோடு, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நெசவாளர்கள், முடிதிருத்துவோர், தையல் தொழிலாளர்கள், பனைத் தொழிலாளர்கள், கைவினைத் தொழிலாளர்கள், ஓவியர்கள், காலணி மற்றும் தோல் தொழிலாளர்கள், அரவாணிகள், இலங்கைத் தமிழ் அகதிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மாணவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர், வேலையில்லாதோர், வயதானோர், வக்கற்றோர், வகையற்றோர், திக்கற்றோர், திசையற்றோர் என சமுதாயத்தின் அனைத்துத் தட்டு மக்களையும் அக்கறையோடு அரவணைத்து அவர்களது நலம் காத்திடும் அமுதசுரபியாக இந்த நிதிநிலை அறிக்கையினை வடித்துள்ளார். பசியறிந்து உணவு அளிக்கும் தாய் உள்ளத்தைப்போல இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு கலைஞர் முதல்வர் அவர்களைத் தாயுமானவர், தந்தையுமானவர் என்ற வகையில் தரிசிக்க முடிகிறது எனக் கூறி, என் உரையை நிறைவு செய்து, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26–7–2006) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

2. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

3. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதும் இல்லை–

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.